
கல்கி


KALKI
8.2.1970
40 காசு



‘இப்பொழுது என்னுடைய தெம்பையும் சுறுசுறுப்பையும் பார்த்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள்!’



ஆனால், சில மாதங்களுக்கு முன் எனக்கு எப்பொழுதும் தள்ளாமை. வேலையே ஓடாது. கடைசியில் நான் ஒரு டாக்டரைப் பார்த்தேன்.



டாக்டர் சொன்னார்: ‘உங்களுக்குப் போதிய அளவு போஷாக்கு கிடைக்காத குறைதான். ஹார்லிக்ஸ் சாப்பிடுங்கள்.’

ஹார்லிக்ஸ் சாப்பிடத் தொடங்கிய பின் நான் சுறுசுறுப்பாக வேலை செய்வதைப்பார்த்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறார்கள்.



ஹார்லிக்ஸ்
அருந்திய பின் நான்
தெம்புடன் திகழ்கிறேன்!

போஷணைக் குறைவினால் சோர்வும் மந்தமும் ஏற்படுகின்றன. சரியாக வேலை செய்ய முடியாமல் போகிறது. சில சமயங்களில் வேலையை இழக்கவும் நேரிடுகிறது. இதற்குப் பரிகாரமாக டாக்டர்கள் ஹார்லிக்ஸ் சிபார்சு செய்கிறார்கள். ஹார்லிக்ஸ் இழந்த சக்தியை மீட்டளித்து வலுவையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது.



ஹார்லிக்ஸ் அதிக சக்தியை அளிக்கிறது!

HL 7405



கார்ன் ப்ராடக்ட்ஸ்
பக்குவமுறை* போட்டியில்
பங்குகொண்டு பரிசு பெறுங்கள்
உங்கள் சொந்தப்
பக்குவ முறையைச்
சிறப்பிப்பவை
பிரவுன் & போல்ஸன் மற்றும்
ரெக்ஸ்
தயாரிப்பு வகைகள்
REX
JELLY CRYSTALS
LEMON
ரெக்ஸ் ஜெல்லி
கிறிஸ்டல்
ஆறு இனிய பழச் சுவைகள். வினாடியில் எளிதாகத் தயாரிக்கலாம். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை யாவரும் விரும்பக் கூடியது.
REX
BAKING
POWDER
ரெக்ஸ் பேகிங் பவுடர்
தின் பண்டங்களை மென்மையாக்க சிறிது சேர்த்தால் போதும். கேக், பிஸ்கோத்து, பகோடா, பூரி, குலாப்ஜாமூன் தயாரிக்க உபயோகியுங்கள்.
பி & பி கஸ்டர்டு பவுடர்
மென்மையான செழுமையுடன் இனிமையானது. முட்டை கலவாதது. புட்டிங், ஐஸ் க்ரீம், ட்ரைஃபிள் தயாரிக்க ஏற்றது. ஜெல்லி மற்றும் பழச் சாலெட்டுடன் பரிமாறும் போது சுவை கூட்டுகிறது.
Brown & Polson
Custard
Brown & Polson
பி & பி வெரைட்டி
கஸ்டர்டு பவுடர்
ஆறு சுவைகள். புட்டிங்குகள், பழ உணவுகள் தயாரிக்க உகந்தது.
Brown & Polson
பி & பி ஃப்ளேவர்டு
கார்ன் ஃப்ளவர்
ஐந்து சுவைகள். இனிமையான ஹல்வாக்கள் தயாரிக்க பாலோடு மென்மையாகக் கலக்கலாம்.
Brown & Polson
Patent Cornflour
பி & பி பேடெண்ட்
கார்ன் ஃப்ளவர்
சூப்புகளையும், இறைச்சிக் குழம்புகளையும் இறுகலாக்குகிறது. சமோசா, கட்லெட் தயாரிப்பதில் மாவுடன் சேர்க்கச் சிறந்தது. குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் மிகவும் நல்லது.
மேலே கண்ட தயாரிப்புகளில் ஒன்றை உபயோகித்து உங்கள் சொந்தமான பக்குவ முறையை எங்களுக்கு அனுப்புங்கள். ஏற்றுக் கொள்ளப் படுபவை இப் பக்கங்களில் பிரசுரிக்கப்படுவதுடன், ரூ. 150 ரொக்கப் பரிசும் இதர வெகுமதியும் உங்களுக்குக் கிடைக்கும்.
உங்கள் பக்குவமுறையை அனுப்பவேண்டிய முகவரி :-
"பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட்,"
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி
(இந்தியா) லிமிடெட்,
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1 பி ஆர்.




சௌமிய, தை, 26 : 1970, பிப்ரவரி 8

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20	ரூ. 10
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21	ரூ. 10/50
இதர நாடுகள்	ரூ. 40	ரூ. 20



இந்தியா
விளையாட்டுப் பொம்மைகள்!
சோஷலிஸ லட்சாதிபதியாக வேண்டுமா?
லாட்டரி டிக்கெட் வாங்குங்கள்!
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ❀ இதழ் 28

காந்தி அடிகளின் கடவுள் பக்தி

“மகாத்மா காந்தியின் வாழ்க்கையும் மரணமும்” என்ற தலைப்பில் சமீபத்தில் ஸ்ரீ ராபர்ட் பெய்ன் எழுதியிருக்கும் 700–பக்க ஆங்கில நூலை 'ஸாடர்டே ரிவ்யூ'வில் விமரிசனம் செய்துள்ள ஸ்ரீ கே. நடவர சிங் பின்வருமாறு கூறுகிறார்: ''இந்த நூலின் முடிவை அடையும் போது நமக்குப் பல அரிய விஷயங்கள் தெரிய வருகின்றன; நம்மை இந்த நூல் கலக்குகிறது ; நமக்குத் தாழ்மை உணர்ச்சி ஊட்டுகிறது; நம்மை உயர எழுப்புகிறது — ஆயினும் காந்தி அரசியல்வாதிகளிடை ஒரு முனிவரா, அல்லது முனிவர்களிடையே ஓர் அரசியல்வாதியா என்பது மட்டும் நமக்கு நிச்சயமாகவில்லை.'' இந்திய சர்க்காரின் வெளி விவகார இலாகாவில் உயர் பதவி வகிப்பவரும், இலக்கிய யோக்கிய தாம்சம் பெற்ற எழுத்தாளருமான ஒருவரது உண்மையான ஐயப்பாடு இது என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஒருவரைச் செயலில் ஈடுபடுத்தும் அடிப்படைச் சக்தியையும், அந்தச் செயலின் விளைவுகளையும் ஒன்றோடொன்று குழப்பிக் கொள்வதற்கு ஸ்ரீ நடவர சிங்கின் வினா ஓர் உதாரணம்.

காந்தியடிகள் சமயக் கோட்பாட்டு வாதியல்ல. ஆனால் அவர் அடிப்படையில் சமய உணர்வு நிரம்பப் பெற்றவர். ஸ்ரீ நடவர சிங்கின் தர்ம சங்கடக் கேள்விக்குள் காந்திஜி தமது அரசியல் லட்சியங்களை அடைவதற்கு உரிய முறையில் சமய நோக்கங்களை உருவாக்கிக் கொண்டார் என்ற கருத்து தொனிக்கிறது. அதாவது காந்திஜியின் சமயக் கருத்துக்கள் அவரது மனப்பூர்வமான சமய உறுதிப்பாட்டைக் காண்பிப்பதைவிட, அரசியல் நோக்கத்துடனேயே மக்களை ஒன்று சேர்க்கும் யுக்தியாகவே இருந்தது என்பது ஸ்ரீ நடவர சிங் கூறுவதில் தொனிக்கிறது. சமயம் குறித்துப் பல்லாண்டுகளாகக் காந்திஜி கூறி வந்தவற்றைத் தொகுத்து ஸ்ரீ ஆர். கே. பிரபு, நவஜீவன பிரசுர மூலம் வெளியிட்டுள்ள ''சத்தியமே கடவுள்'' என்ற ஆங்கில நூலைப் படித்தால் நடவர சிங் கேட்கும் கேள்வியே எழாது.

காந்தி அடிகளின் மனம் சமயமும் அரசியலும் பிரிக்க வொண்ணாமல் ஒருமித்தக் கட்டுக்கோப்பு வாய்ந்தது. தென்ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் அவர் தமது ஆன்மிக உறுதிப்பாடுகளையே தாம் எதிர்கொள்ள வேண்டியிருந்த அரசியலில் பிரயோகித்தார். உண்மையான சமய உணர்வு கொழுந்து விட்டெரியும் ஒரு மனிதர், கடவுளின் தருமத்துக்கு விரோதமாகச் செல்லும் ஆணவ சக்திகள் மகத்தான தவறுகளை இழைக்கும் போது வெறுமே பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க முடியாது. தவற்றை அவர் எதிர்ப்பார். அதனால் எத்தகைய இன்னல் ஏற்பட்டாலும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்பார். தொரோ என்ற அமெரிக்கப் பெரியார் இவ்வாறே போதித்துள்ளார். இந்தப் போதனையே காந்திஜிக்கு எழுச்சியும், பலமும் தந்தது. தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அரசியலில் ஆன்மிகத்தை ஊடுருவச் செய்ய வேண்டியதே தமது பிறவிப் பணி என்று கருதினார் காந்திஜி. அரசியல், ஆன்மிகம் ஆகியன ஒருமித்திருந்த அவரது கட்டுக்கோப்பு வாய்ந்த உணர்வில் இயல்பாக அமைந்திருந்த சமயப் பணியின் பெருமையை மற்றவர்களால் புரிந்துகொண்டு பாராட்ட முடியவில்லை. அவர்கள் அவரைத் தத்தம் கோணத்திலிருந்தே எடை போட்டு அவர் ஆன்மிகத்தை அரசியலுக்கு உபயோகப்படுத்திக் கொண்ட அரசியல் வாதி என்றோ, அல்லது அரசியலைச் சமயத்துடன் கலந்து தமது பணியைக் கெடுத்துக்கொண்ட முனிவர் என்றோ எண்ணுகின்றனர்.

அஹிம்சையிலும் சத்தியத்திலும் தளராத பற்றுக் கொண்டவர் காந்திஜி. எல்லாச் சந்தர்ப்பத்திலும் அரசியல் வாதிகள் சத்தியத்தையும் அஹிம்சையையும் பின்பற்றினாலன்றி, தேசத்துக்கோ உலகுக்கோ அரசியலால் ஒரு நன்மையும் விளையாது எனக் கருதியவர் அவர். சமயம், அரசியல் என்றெல்

லாம் முற்றிலும் வேறுபட்ட துறைகளைக் காணாமல் ஒருங்கிணைந்த கட்டுப்பாடான மனப் போக்கை காந்திஜி பெற்றிருந்த தால் அவருக்கு இவற்றை இணைப்பதில் விசித் திரமாக எதுவும் தெரியவில்லை.

காந்தியைப் பற்றிக் கேட்கும் கேள்வி சீக்கிய மத ஸ்தாபகரான குரு நானக்கைக் குறித்தும் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுதையும் இஸ்லாம் வெற்றி கொண்டு விடக் கூடாது என்ற அரசியல் நோக்கத்துக் காகவே, அவர் ஆன்மிக ரீதியில் சடங்கும், வர்க்க பேதங்களுமற்ற சீர்திருத்தம் செய் தார் என்று சொல்வதுண்டு.

ஆண்டவனின் ஆட்சி சத்தியமானது என்று நம்புவதே சமயம். இந்த நம்பிக்கை மனிதன் தியாகம் புரியவும், இன்னலை ஏற்க வும் எல்லையற்ற தீரமும் பலமும் தருகிறது. சமயத்தின் மூலம் மக்கள் சமத்துவ உணர்வு பெறுகின்றனர். நானக் போன்ற ஒரு முனிவர் மதத்தை மிகையான சடங்குகளிலிருந்து விடுவித்து, அதில் மக்களை ஈடுபடுத்துகையில் அம்மக்கள் உலகுக்காக உழைப்பதில் உள்ள சிரமங்களைப் பாராமல் அச்சமின்றிச் சேவை புரிய உத்வேகம் பெறுகின்றனர். புதிய சமய நம்பிக்கையில் பிறந்த தீரத்துடனும் பலத்துடனும் அவர்கள் அநீதியையும் அடக்குமுறையையும் எதிர்த்துக் கிளர்ந்தெழு கின்றனர். குருநானக்கின் சீர்திருத்தங்கள் இவ்வாறே அவருக்குப் பிற்பாடு வந்தவர் களைப் போருக்கு எழுப்பியது. இவ்வாறே காந்திஜியின் சத்தியமும், அஹிம்சையும், சமயம்—அரசியல் இவை ஒருங்கிணைந்த மனப் பாங்கும் பாரதத்தில் சுதந்திரத்துக்காகவும் சமத்துவத்துக்காகவும் போராட்டத்தை எழுப்பியது. ஆன்மிகமும் அரசியலும் இவ் வாறு ஒன்றையொன்று தொடர்ந்திருப்ப தைப் பலரால் புரிந்து கொள்ள முடிவதில்லை. காந்தியும், நானக்கும் சமயத்திலிருந்து அரசியலுக்கு இறங்கியது விரும்பத் தகாத பரிணாமம் என இவர்கள் எண்ணுகின்றனர். அந்தரங்க சுத்தத்தாலும், கடவுளிடம் பூரண பக்தியாலும் மகத்தான சக்தி பெற்று, மக்களை எழுச்சி பெறச் செய்த முனிவர்களை இவர்கள் தங்களது மனப்பான்மையின் கோணத்தில் பார்ப்பதாலேயே இப்படி யெல்லாம் தோன்றுகிறது.

அடக்குமுறையை எதிர்ப்பதில் சீக்கிய குருமாரின் போதனையிலிருந்து மாறுபட்டு காந்திஜி செய்த தனிப்பட்ட பணி யாதெனில் அவர் அஹிம்ஸா மார்க்கத்தைப் பயன் படுத்தியதேயாகும். வன்முறையை மேற் கொண்டால், தொடர் சங்கிலியாக மேலும் வன்முறை பரவும் எனக் கருதினார் காந்திஜி. இதனால் அடக்கப்பட்டோருக்கு உபகாரம் செய்வதற்குப் பதில் அபகாரம் செய்த தாகும் எனக் கண்டார். ஹிந்து புராணங் களில் பௌதிக பலம் கொண்டு தவறுகளைத் திருத்துவது நியாயம் என்று சொல்லியிருப்ப தாக மேற்பார்வைக்குத் தோன்றினாலும், காந்திஜி அதனை வேறுவிதமாக விளக்கினார். மேற்பரப்புக்கு உள்ளே அவர் மூழ்கிப் பார்த்து, ஹிந்து மதத்துக்கு ஆதாரம் சத்தியமும் அஹிம்ஸையுமே; மாறாகத் தோன்றுவதெல்லாம் உருவகமே என்றார். இன்று மனித அறிவு அடைந்துள்ள முன் னேற்றத்தின் காரணமாகப் பௌதிக சக்தி எல்லையே இல்லாமல் வளர்ந்திருக்கிறது. எனவே, முன் எப்போதையும்விட இன்று காந்திஜியின் அஹிம்சையை வலியுறுத்துவ தற்கு முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

சண்டிகர் முடிவு

சண்டிகரைப் பற்றிய முடிவை யூனியன் சர்க்கார் அறிவித்து விட்டது. இதற்கு இவ் வளவு காலதாமதம் செய்திருக்க வேண்டிய இல்லை. காலம் கடத்தும் உபாயத்தால் சிக்கல்களும் இடர்ப்பாடுகளும் அதிகரிக்கத் தான் செய்யும். இதுதான் சண்டிகர் விஷயத் திலும் நடந்திருக்கிறது. அவசர உணர்வுடன் இப்பிரச்னையைக் கவனிப்பதைவிட உத்தரப் பிரதேசத்தில் தம் கட்சிக்கு யார் யாரை இழுக்கலாம் என்பதில் பிரதம மந்திரி அதிக அக்கறை காட்டி வந்திருக்கிறார். அகாலி தலைவர் சந்த் பத்தே சிங்கின் உடல் நிலைமை உபவாசத்தால் மிக மோசமான பின்னரே னும், அவர் தீக்குளிப்பதற்கு முன்னரேனும், முடிவை அறிவித்தது ஓரளவு ஆறுதல் தரக் கூடியதுதான்.

மேற்கொண்டு என்ன நடைபெறும் என் பதை இப்போது யாராலும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. இரு மாநிலங்களிலும் மக்களைத் தலைநகர் பிரச்னை மீது தலைவர்கள் உணர்ச்சி வசப்படுத்தி வந்திருக்கிறார்கள். கோரியது கிடைக்கவில்லையே என்ற மனக் கசப்பில், நிதானமற்ற காரியங்கள் இரு பகுதி களிலும் ஓரளவு நடைபெறத்தான் செய்யும். குடியரசு தினத்தன்று பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற ரகளைகள் மிக மிக வருந்தத் தக்கவை. தேசியக் கொடி அவமதிக்கப் பட்டது. குடியரசுதின விழாவில் மந்திரிகள் கலந்து கொள்ளவில்லை. இத்தகைய மனப் பான்மை இரண்டு ராஜ்யங்களிலும் வளரும் படி விடலாகாது. எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒத்துழைத்து, இரு மாநிலங்களி லும் அமைதியைக் காக்கத் துணை புரிய வேண்டும். சந்த் பத்தே சிங் போன்ற செல் வாக்குள்ள தலைவர்கள் அமைதியை உறுதி செய்வதற்கு முழு ஆதரவு கொடுத்தா லொழிய விரைவில் சகஜ நிலைமை ஏற்படாது. முடிவை மாற்றும்படி கோரிக் கிளர்ச்சி செய்ய மக்களுக்குத் [illegible] கபடம். நிர்மாண ரீதியில் உழைத்து, இரு மாநிலங்களும் இணக்க மான நல்வாழ்வு நடத்துவதற்கு ஒருமுக மாக உழைப்பது சிரமம். ஆனால் இப் பொழுது செய்தாக வேண்டியது சிரமமான அந்தப் பணியைத்தான்.

பஞ்சாபும் ஹரியானாவும் பாகிஸ்தானை அடுத்தாற்போல் உள்ள முக்கியமான

மாநிலங்கள். தேசப் பாதுகாப்பில் இவை இரண்டும் முன்னணிப் பகுதிகள். எனவே, இங்கு இனி ஒருகணமும் குழப்ப நிலைமை நீடிக்கும்படி விடலாகாது. சொந்த லாப நஷ்டங்களை ஆராய்ந்து கொண்டிருப்பதை விட, தேச பக்தி உணர்வுடன் மக்களின் நல்வாழ்வுக்கு உழைப்பதுதான் இரு மாநிலத் தலைவர்களுக்குமுள்ள கூட்டுப் பொறுப்பு.

பிரதமரின் ஆதரவாளர்!

இடதுசாரி கம்யூனிஸ்டுகள் பிரதம மந்திரியை வெளிப்படையாகவே பயமுறுத்தியிருக்கிறார்கள். தங்களுக்கு இசைவாக நடந்து கொள்ளாவிடில் பார்லிமெண்டில் தொடர்ந்து அவரை ஆதரிக்க முடியாமற் போய் விடுமென்று எச்சரித்திருக்கிறார்கள். அவர்களுடைய கட்சிக் காரியதரிசியும் மேற்கு வங்காளத்தின் துணை முதல்மந்திரியும் தில்லிக்கு நேரில் சென்று இதைக் கூறி விட்டு வந்தனர். மேற்கு வங்காளத்திலும் கேரளத்திலும் இந்தக் கட்சியினர் வன்முறைச் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இரு மாநிலங்களிலும் பெரிய நெருக்கடி உருவாகிக் கொண்டிருக்கிறது. கேரள சட்டசபையில் சமீபத்தில் அவர்கள் நடந்து கொண்ட விதம் ஜனநாயகத்தையே பழிப்பதாக இருக்கிறது. மேற்கு வங்காளத்தில் பெயரளவில்தான் ஐக்கிய முன்னணி அரசு நடந்து வருகிறது. அந்த முன்னணி எப்பொழுது வேண்டுமானாலும் உடைந்துவிடலாம் என்று உதவி முதல் மந்திரி ஜோதி பஸுவே எதிர்பார்க்கிறார். ஆனால் தங்களை நீக்கி விட்டு மற்றக் கட்சிகள் சர்க்காரை அமைக்கக் கூடாது என்பது அவரது வாதம். அம்மாதிரி நடந்து விடுமோ என்று அவர் பயப்படுகிறார். உண்மையில் மேற்கு வங்கத்தில் இன்று ஒழுங்கான, முறையான சர்க்கார் நடைபெறுவதாகச் சொல்வதற்கில்லை. எப்படியாவது இந்த நிலைமை மாறினால் போதும் என்று மக்கள் அலுத்துக் கொள்கிறார்கள். நிகழ்ச்சிகளின் போக்கைப் பார்த்தால் கேரளத்தில் நடந்தது போல விரைவில் மேற்கு வங்கத்திலும் நடைபெறலாம் என்றுதான் தோன்றுகிறது. இப்படிப்பட்ட குழப்பத்துக்குக் காரணமானவர்கள் பிரதமருடன் தங்கள் கட்சிக்கு உள்ள தொந்தம் பற்றிப் பேசுவது யூனியன் அரசின் வெட்கக்கேடான நிலைமையே காட்டுகிறது. தில்லி ஆட்சியாளர்கள் இவர்களுடைய ஆதரவு கொண்டே பதவியில் நிலைத்திருக்கப் பாடுபடுவதை நாடு உஷாராகக் கவனிக்க வேண்டும்.

அதிர்ச்சி தரும் மறைவு

செட்டி நாட்டு குமாரராஜா எம். ஏ. எம். முத்தய்யா செட்டியார் ஜனவரி 24ந் தேதி காலமானார் என்ற துக்கச் செய்தி பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அதிர்ச்சி ஊட்டியது.

வள்ளல் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரின் பேரப்பிள்ளை என்பதுடன் ராஜா ஸர் முத்தய்யா செட்டியாரின் அருமை மூத்த மகன். செட்டி நாட்டு அரச பரம்பரையின் வாரிசாக அமோகமான சிறப்புப் பணிகளை மேன்மேலும் செய்து மகோந்நதமான தொழில் வளர்ச்சிக்கு உதவி புரிய வேண்டியவர் என்று எதிர்காலம் ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்த செல்வர் இளவயதில் மாரடைப்பினால் அகால மரணமடைய நேர்ந்தது துயரத்திலும் துயரம்.

தமது பரம்பரை மரபுக்கேற்ப செல்வத்தைத் தேடுவதில் ஊக்கம் காட்டுவதிலும் ஈட்டிய செல்வத்தை நல்ல முறையில் பாதுகாத்து நல் வழிகளில் செலவழிப்பதிலும் சிறந்து விளங்கினார். அவர் வளர்த்துப் பாதுகாத்து வந்த தொழில் நிறுவனங்கள் அநேகம். செட்டிநாடு சிமெண்டு கார்ப்பொரேஷன் சமீபத்தில் அவருடைய முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டதொரு பெரிய தொழில் ஸ்தாபனம். தமிழகத்தை மாவட்டந்தோறும் தொழில் மயமாக ஆக்க வேண்டும் என்ற ஆர்வம் மிக்கவர். அவருடைய தொழில்களில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களிடம் அவர் தந்தைக்கு நிகரான பாசத்தைக் காட்டினார்.

சிறிய வயதிலேயே ஆற்றலால் சிறப்புப் பெற்று தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் தலைவராகவும், சென்னை ஷெரீப்பாகவும், பல பொதுநல ஸ்தாபனங்களில் முக்கியஸ்தராகவும் சீரிய பணியாற்றியவர்.




செட்டிநாட்டு குமார ராஜா


நண்பர்களுடன் பழகுவதிலும், பரந்த நோக்கிலும், உதார குணத்திலும், வள்ளற் தன்மையிலும், தமது குடும்ப மரபுக்கு முற்றிலும் உருவகமாக, உயர் பண்பாளராக விளங்கியவர் ஸ்ரீ எம்.ஏ.எம். முத்தய்யா செட்டியார்.

அவருடைய தந்தையார் ராஜா ஸர் முத்தய்யா செட்டியாருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் ஏற்பட்டுள்ள துக்கத்தில் நாமும் பங்கு கொண்டு ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பூங்கா நகரம்—
60 ஆண்டுகள் முன்பே திட்டமிட்டு உருவானது

ஜாம்ஷெட்பூர்: வண்ணமலர்சோலைகள் மிகுந்தது, எஃகு நகரமென அழைக்கப்படும் ஜாம்ஷெட்பூர். அது உண்மை! இந்தியாவின் எழில் மிகு நகரங்களில் அதுவும் ஒன்று. மேனாட்டில் திட்டமிட்ட நகரநிர்மாணங்கள் சர்வசாதாரணம். ஆயினும், அதனினும் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஜாம்ஷெட்பூர் திட்டமிட்டு உருவானதென்பது வியப்பேயாகும்.






சோனுரி— திருத்தியமைக்கப்பட்ட குடியிருப்பு. பல கட்டடங்களில் திட்டமிட்டு, 20 குடிசைகளை, நல்ல வெளிச்சமுள்ள சாலைகள், போதுமான தண்ணீர் வசதிகளுடன் சிறந்த குடியிருப்புகளாக மாற்றியமைக்க டாடா ஸ்டீல் உதவி செய்துள்ளது.



டாடா பெரிய மருத்துவ மனை: வசதிகளுடன் 600 படுக்கைகள் பெற்றது இந்த மருத்துவமனை, தனி 82 படுக்கைகளுடன் ஒரு காசநோய் மருத்துவ மனையும் அதில் ஒரு குழந்தைகள் வார்டும் அமைக்க டாடா ஸ்டீல் உதவியுள்ளது.



ஜுபிலி பூங்கா: "மனிதர்களுக்கும், அகர்தப் உணர்ச்சிகளுக்குமான அடிப்படைத்தேவையை, எஃகு, மற்றும் இரும்பைக்காட்டிலும், மலர்களும் பூங்காக்களும், மரங்களும் பூர்த்தி செய்கின்றன என்று நான் கருதுகிறேன். அந்த சிறந்த சிந்தனையின் தோற்றமே இப்பூங்கா."

—ஜவாஹர்லால் நேரு

:ரும், மக்களுமே எங்கள் பலம்

டாடா ஸ்டீல்

IN-4

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



இருபத்துமூன்றாம் அத்தியாயம்

வானதி

கொடும்பாளூர் இளவரசியின் அழகை வர்ணிக்கும்படி கவிஞர்களைக் கேட்டால், அவர்கள் அந்த மங்கை நல்லாளின் அழகை அந்தி மாலையின் சௌந்தரியத்துக்கு ஒப்பிடுவார்கள். பகற்பொழுது சென்று மாலை மங்கி வரும்போது மனத்தில் ஒரு சோகமும் ஏற்படுகிறது; கூட ஓர் அமைதியான இன்பமும் தோன்றுகிறது. ஆதவனின் இறுதிக் கிரணங்கள் மெலிந்து மறைந்த பிறகு இரவின் இருள் நாலாபுறமும் கவிந்து வருகிறது. இதனால் மனத்தில் தோன்றும் சோர்வைப் போக்கிக் கொள்வதற்கு வானத்தை நோக்கினால் போதும். கண்ணிமைக்கும் நேரத்தில் வானமா தேவி ஏற்றி வைக்கும் கோடானு கோடிச் சுடர் விளக்குகள் எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கின்றன! சூரியனுடைய தகிக்கும் ஜோதியைப் போல் அவை கண்களைக் கூசச் செய்வதில்லையே? கண்களால் அவற்றைப் பார்த்து இன்புறலாமே? சந்திரனும் உதயமாகி விட்டாலோ, கேட்க வேண்டியதில்லை. முத்துச் சுடர் போன்ற முழுமதியின் நிலவில் உலகம் பூரிக்கின்றது; உள்ளமும் உடலும் பூரிக்கின்றன. மாலை வந்ததும் தாமரைகள் கூம்புவது என்னவோ உண்மைதான். ஆனால் விண்மீன்களுடன் போட்டியிடுவது போல் மல்லிகை மொட்டுக்கள் வெடித்து மலர்ந்து அவற்றின் நறுமணத்தினால் வானமும் பூமியும் போதை கொள்கின்றன அல்லவா?

அஸ்தமித்ததும் பட்சிகளின் குதூகலத்வனிகள் ஓய்ந்து விடுகின்றன என்பது உண்மைதான். ஆனால், அதோ தேவாலயத்திலிருந்து வரும் சேமக்கலச் சத்தமும் நாதஸ்வர வாத்தியத்தின் இன்னிசையும் இப்போது எவ்வளவு மதுரமாயிருக்கின்றன! மணிமாடங்களின் மீதிருந்து மென்மையான விரல்கள் மீட்டும் வீணையும் யாழும் எத்தகைய இன்ப கீதத்தை எழுப்புகின்றன!

கொடும்பாளூர் இளவரசி வானதியின் அழகில் இப்படியே சோகத்தின் சாயலும் களிப்பின் மெருகும் இனம் தெரியாதபடி கலந்து போயிருந்தன. அழகுக்கு ஒத்தபடி அவளுடைய சுபாவமும் இருவகைப்பட்டு இருந்தது. ஒரு சமயம் அவளைப் பார்த்தால் துயரமே உருக்கொண்ட சந்திரமதியையும் சாவித்திரியையும் போல் இருக்கும். இன்னொரு சமயம் பார்த்தால் அரம்பையும் ஊர்வசியும் தேவருலகில் இப்படித்தான் ஆடிப் பாடிக் கொண்டு இருந்திருப்பார்கள் என்று தோன்றும். கோவலனுடைய காதலில் களித்த மாதவியைப்



போல் ஒரு சமயம் அவள் இன்ப உயிர்ச் சிலையாக விளங்குவாள். மற்றொரு சமயம் கணவனைப் பறி கொடுத்த கண்ணகியின் சோக வடிவம் இதுதானோ என்று கருதும்படி இருக்கும். ஒரு சமயம் மாலை வடிவேலரின் மையலுக்கு உள்ளாகி இதயம் கலந்து நின்ற வள்ளியைப்போல் தோன்றுவாள். இன்னொரு சமயம் தேவலோக மெல்லாம் களிக் கூத்தாடும்படி கார்த்திகேயருக்கு மாலையிட்டு மகிழ்ந்த தேவயானை இவளேதான் என்று எண்ணி மகிழும்படி ஆனந்த உருவாகி விளங்குவாள்.

சேர்ந்தாற்போல் பல தினங்கள் வானதியின் முகத்தில் ஒரு சிறிய புன்னகையைக்கூடக் காண முடியாது. வேறு சில நாட்களில் அவள் ஓயாது சிரித்துக் கொண்டேயிருப்பாள். அந்தச் சிரிப்பின் ஒலி கோடானுகோடி நுண் துளிகளாகிக் காற்று வெளியில் கலந்து உலகத்தையே ஆனந்தப் பரவசப்படுத்தும்.

வானதியின் இத்தகைய இருவகைச் சுபாவத்துக்குக் காரணம், அவளுடைய பிறந்த வேளையும் வளர்ந்த காலமும் என்று கணிக்கலாம். அன்னையின் கர்ப்பத்தில் அவள் இருந்த போது கொடும்பாளூர் சிறிய வேளார் கொடிய போர்களில் ஈடுபட்டிருந்தார். வெற்றிச் செய்தியும் தோல்விச் செய்தியும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. இவை அவளுடைய அன்னையின் உள்ளத்தில் களிப்பையும் துயரத்தையும் மாற்றி

மாற்றி உண்டாக்கின. வானதி பிறந்த சில காலத்துக்குப் பிறகு அவளுடைய அன்னை காலமானாள். பிறகு, வானதியை அவளுடைய தந்தை கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்தார். ஆனால் இதுவும் நீடித்திருக்கவில்லை. வீராதி வீரராகிய வானதியின் தந்தை அருமை மகளை முன்னிட்டுக்கூட அரண்மனையிலேயே உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. வீர பாண்டியன் ஓடி ஒளிந்த பிறகு, அவனுக்குத் துணை வந்த ஈழத்துப் படைகளைத் துரத்திக் கொண்டு இலங்கை சென்றார். அங்கே போர்க்களத்தில் உயிர் நீத்து, சரித்திரத்தில் 'ஈழத்துப் பட்ட சிறிய வேளார்' என்ற பட்டப் பெயர் பெற்றார்.

பின்னர், வானதியின் வாழ்க்கை சில காலம் ஒரே துயர மயமாயிருந்தது. தாயை இழந்து தகப்பனாரால் வளர்க்கப்பட்ட பெண்கள்தான் அந்தச் சோக உணர்ச்சி எத்தகையது என்பதை அறிய முடியும். பெற்றோரில்லாப் பெண் கொடும்பாளூர் அரண்மனையில் சீராட்டி வளர்க்கப்பட்டாலும் அவளுடைய உள்ளத்தில் தந்தை பெற்றிருந்த இடத்தை யாரும் பெற முடியவில்லை. அதற்குப் பலரும் பலவிதமாக ஆறுதல் கூறினார்கள். "வருந்தாதே, குழந்தை! உன் தந்தை உன் வயிற்றில் வந்து மீண்டும் வீர மகனாகப் பிறப்பார். உலகம் வியக்கும்படியான அற்புத வீரச் செயல்களைப் புரிவார்!" என்று ஒருவர் கூறினார். இவ்வார்த்தைகள் வானதியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து வேரூன்றின. அருமைத் தந்தையைப் பிரிந்ததினால் ஏற்பட்ட துயரத்தையும் சோர்வையும் கற்பனை மகனைப் பற்றி எண்ணுவதிலே போக்கிக்கொள்ள முயன்றாள். அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தாள்.

தனக்குப் பிறக்கும் குமாரன் எப்படி எப்படி இருப்பான், எந்தெந்த மாதிரி நடப்பான், எத்தகைய வீரச் செயல்களைப் புரிவான் என்ற மனோ ராஜ்யத்தில் நாள் கணக்காக மூழ்கி விடுவாள். கற்பனைக் கண்ணின் மூலமாக, அந்த வீர மகன் தூர தூர தேசங்களுக்குச் சென்று மாபெரும் யுத்தங்களில் வெற்றி பெறுவதைப் பார்த்தாள். வேகமாகத் திரும்பி வந்து அவன் அடைந்த வெற்றியின் காணிக்கைகளையெல்லாம் தன்னுடைய காலடியில் சமர்ப்பிப்பதைப் பார்த்தாள். அவன் மணிமுடி தரித்து வீர சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். ராஜாதி ராஜாக்கள் வந்து அவனுக்குக் கப்பம் கட்டி அடி பணிவதைப் பார்த்தாள். அவனுடைய திரு



முகத்தைக் கண்டதும் ஜனத்திரள்கள் பூரண சந்திரனைக் கண்ட மாகடலைப் போல் பொங்கி எழுந்து அலை மோதி ஆரவாரிப்பதைப் பார்த்தாள். நூறு நூறு கப்பல்களில் வீரர்களை ஏற்றிக் கொண்டு அவன் கடல்களைக் கடந்து சென்று அப்பாலுள்ள நாடுகளிலே

வெற்றிக் கொடி நாட்டுவதைப் பார்த்தாள். ''அன்னையே! நான் அடைந்துள்ள இத்தனை பெருமைக்கும் காரணம் நீயே அல்லவோ!'' என்று தன்னிடம் அடிக்கடி அவ்வீர மகன் வந்து கூறுவதையும் கேட்டாள்.

அந்த அறியாத பேதைப் பெண் சில சமயம் தன் ஆலிலை வயிற்றைத் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொள்வாள். தன் கற்பனை மகன் ஒருவேளை வயிற்றில் வந்து விட்டானோ என்றுதான். பழந்தமிழ் நாட்டில் ஆண்கள், பெண்கள் அனைவரும், பாரதக் கதையைக் கேட்டு அறிந்திருந்தார்கள். குந்தி தேவி குழந்தை பெற்ற விதத்தைப் பற்றியும் கேட்டிருந்தார்கள். அது போல், எந்தத் தெய்வம் வந்து தனக்குக் குழந்தை வரம் கொடுக்கப் போகிறது என்று எண்ணி எண்ணி அவள் வியப்பதுண்டு. அப்போதெல்லாம் யாரையும் மணந்து கொள்வதைப் பற்றியே அவள் எண்ணவில்லை. வயது வந்த பிறகு, உலகம் ஓரளவு தெரிந்த பிறகு, கணவன் ஒருவனை மணந்தேயாக வேண்டும் என்றும், அவன் மூலமாகவே குழந்தைப் பேற்றை அடைய வேண்டும் என்றும் அறிந்தாள். அப்போதும் கணவனைப் பற்றி அதிகமாக மனோராஜ்யம் செய்யவில்லை.

பழையாறை அரண்மனைக்குப் போன பிறகு அவளுடைய வாழ்க்கையிலும் மனப்போக்கிலும் மாறுதல் ஏற்பட்டது. குந்தவை தேவியின் பெருமிதம் கலந்த அன்பு அவளுக்கு ஆறுதலும் குதூகலமும் அளித்தன. குந்தவையின் நாகரிக நடை உடை பாவனைகளும் சாதுர்யப் பேச்சுக்களும் வானதியை அவள் இது வரை அறியாத வேறோர் உலகத்துக்குக் கொண்டு போயின. அவளைப் போலவே பழையாறை அரண்மனைக்கு வந்திருந்த மற்ற அரசகுலப் பெண்களின் அசூயை அவளுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய ஆர்வத்தை உண்டாக்கியது. அவர்கள் அசூயைப்படும்படியாகத் தன்னிடம் ஏதோ மகிமை இருக்க வேண்டும் என்று அவளுடைய உள் மனம் உணர்த்தியது. அதே சமயத்தில் அவளுடன் இயற்கையாகப் பிறந்த இனிய சுபாவமும் பெருந்தன்மையும் எல்லாருடனும் நல்லபடியாக நடந்துகொள்ள அவளைத் தூண்டியது. இத்தனைக்கும் நடுவில் வானதி தனக்குப் பிறக்கப் போகும் வீர மகனைப் பற்றி இன்பக் கனவு காண்பதை மட்டும் விட்டுவிடவில்லை.

இதற்கிடையிலேதான் அவள் பொன்னியின் செல்வரைப் பார்க்கும்படி நேர்ந்தது. அதன் பலனாக அவளுடைய மனக் கோட்டைகள் எல்லாம் பொல பொல வென்று தகர்ந்து விழுந்தன. கணவனை அடைந்த பின்னர்தான் மகனைப் பெற முடியும் என்று அவள் அறிந்திருந்தாள். கணவன் யாராயிருந்தாலும், எப்படிப் பட்டவனாயிருந்தாலும் சரிதான் என்ற அலட்சியப் பான்மை அதற்கு முன்பு அவள் அடி உள்ளத்தில் இருந்தது. ஆனால், இந்தப் பொல்லாத மனத்தை என்ன செய்வது? இது சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரிடமல்லவா போய்விட்டது! ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் 'என் பெண்ணை மணந்து கொள்!' என்று கெஞ்சிக் கூத்தாடக் கூடிய பெருமை வாய்ந்தவர் அல்லவா அவர்! அத்தகையவர் தன்னைத் திரும்பியும் பார்ப்பாரா? அவரை மணந்து கொள்ளும் பாக்கியத்தைப் பற்றி அவளால் கனவுகூடக் காண முடியாதே? இளவரசரிடம் இந்தப் பேதை மனம் சென்ற பிறகு, இன்னொருவரை மணந்து கொள்வது தான் எப்படிச் சாத்தியம்! ஆகையால், தன் வயிற்றில் பிறக்கப் போகிற வீர குமாரனைப் பற்றி இத்தனை காலமும் அவள் கட்டி வந்த மனக்கோட்டைகள் எல்லாம் சிதறிப் போகத்தானே வேண்டும்? இதையெல்லாம் நினைக்க நினைக்க, அவளுடைய உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது. மறுபடியும் பழையபடி சோக வடிவமானாள். அவளுடைய மனத்தை அறிந்து கொண்ட இளைய பிராட்டி அவளிடம் விசேஷ அன்பும் ஆதரவும் காட்டினாள். தன்னால் இயன்ற வரையில் வானதியை உற்சாகப்படுத்த முயன்றாள். பொன்னியின் செல்வரிடம் அவளுடைய உள்ளம் சென்றது அப்படியொன்றும் பிசகான விஷயமில்லையென்றும், நடக்கமுடியாத காரியமும் அல்லவென்றும் குறிப்பாக உணர்த்தி வந்தாள். குடந்தை ஜோதிடர் வானதிக்குப் பிறக்கப் போகும் மகனைப் பற்றிக் கூறியது அவளுடைய உள்ளக் கனலுக்குத் தூபம் போட்டு வளர்த்தது. அவளுடைய மனோ ராஜ்யம் மேலும் விரிவடைந்து கொண்டே வந்தது. மனச் சோர்வும் குதூகலமும் மேலும் துரிதமாக மாறி மாறி ஏற்பட்டன. ஏக்கத்தினால் ஏற்பட்ட மனவேதனை பொறுக்க முடியாமல் இருந்தது போல், மகிழ்ச்சியினால் ஏற்பட்ட கிளர்ச்சியையும் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இரண்டும் மிதமிஞ்சிப் போன போது மயக்கம் போட்டு விழுந்தாள்; இயற்கை அருளிய இந்த மயக்க மருந்து சாதனத்தினால் அவள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தாள்.

தஞ்சைக்குச் சென்றிருந்த போது, வானதி பார்த்த பராந்தகச் சக்கரவர்த்தி நாடகமும், அன்றிரவு அவள் கேட்ட அபயக்குரலும் கண்ட பயங்கரக் காட்சியும் அவளுடைய மனக் குழப்பத்தை அதிகமாக்கின. கொடும்பாளூர் வம்சத்துக்கும் பழுவூர் சிற்றரசர் குலத்துக்கும் ஏற்பட்டிருந்த தீராத பகையின் அளவை அவள் அன்று நன்கு அறிந்து கொண்டாள். பழுவூர்க்காரர்கள் சோழ நாட்டில் அப்போது அடைந்திருந்த செல்வாக்கின் அளவையும் தெரிந்து கொண்டாள். இளவரசர் அருள்மொழி வர்மர் விஷயத்தில் தன் மனோரதம் ஈடேறப் பழுவேட்டரையர்கள் அநுமதிப்பார்களா? அவர்கள் அநுமதித்தாலும் அவர்கள் வீட்டுப் பெண்கள் சும்மாயிருப்பார்களா? பழுவூர் இளைய ராணி சம்மதிப்பாளா? அவளுடைய செல்வாக்கும் சக்தியும் உலகம் அறிந்தவை. நந்தினியை நினைக்கும்போதெல்லாம் அழகிய நாகப் பாம்பின் நினைவு வானதிக்கு வந்தது. இளைய பிராட்டியின்பேரில் அவளுடைய பகைமையைப் பற்றி அறிந்து கொண்டிருந்தாள். அது தன் பேரிலும் பாயும் அல்லவா? ஏன்? பொன்னியின் செல்வரையே அந்த விஷ நாகம் தீண்டினாலும் தீண்டக்கூடும்! நள்ளிரவில், நோயாகப் படுத்திருக்கும் சக்கரவர்த்தியின் முன்னால் நந்தினியையொத்த வடிவம் ஒன்று நின்றதே! அது உண்மையில் நந்தினிதானா? சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பீதி நிறைந்த குரலில் ஓலமிட்ட காரணம் என்ன? இளைய பிராட்டி இதைப் பற்றியெல்லாம் ஏன் தன்னிடம் எதுவும் பேசுவதற்கு மறுக்கிறாள்! ஆமாம்! இளைய பிராட்டியின் மனமும் மாறிப் போயிருக்கிறது. தன்னிடம் முன்னெல்லாம் போல் அவ்வளவு கலகலப்பாகப் பேசுவதில்லை. அடிக்கடி தன்னைவிட்டு விட்டுத் தனிமையை நாடிப் போய் விடுகிறார். அவரை ஏதோ பெருங் கவலை பிடித்திருக்கிறது. ஒரு வேளை பொன்னியின் செல்வரைப் பற்றிய கவலைதானோ என்னவோ? அதனாலேதான் தன்னிடம் அதைப் பற்றிச் சொல்வதற்கு மறுக்கிறார் போலும்!

இன்றைக்குக் கூடத் திடீரென்று இளையபிராட்டி காணாமற் போய்விட்டார். அவர் இல்லாத சமயங்களில் இந்தப் பெண்கள் என்ன பாடு படுத்துகிறார்கள்? என்ன கொட்டம் அடிக்கிறார்கள்? கவலையென்பதை அறியாதவர்கள். எது எப்படிப் போனாலும் அவர்களுடைய கொம்மாளத்துக்குக் குறைவு ஒன்றும் கிடையாது. அவர்களுடைய கேலிப் பேச்சுக்களை வானதியினால் எப்போதுமே சகித்துக் கொள்ள முடிவதில்லை. அதுவும் இந்த இரண்டு மூன்று தினங்களாக ஒரே சோகக் கடலில் வானதி ஆழ்ந்திருந்தபடியால் அவர்களுடைய வீண் பேச்சுக்கள் அவளுடைய காதில் நாராசமாக விழுந்தன. இளையபிராட்டி எங்கேதான் போயிருப்பார் என்று தேடிக் கொண்டு புறப்பட்டாள். மூத்த மகாராணியின் அரண்மனையில் ஏதோ சபை கூடியிருக்கிறதென்றும் அங்கே போயிருக்கிறார் என்றும் தெரிந்து கொண்டாள். ஆகையால் அந்த அரண்மனைக்குச் சென்றாள். வானதி போவதற்குள் அங்கே சபை கலைந்து விட்டது. பெரிய மகாராணியும் அவருடைய செல்வப் புதல்வர் மதுராந்தகரும் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்தாள். ஏதனாலோ இந்தச் செய்தி வானதிக்கு மேலும் கவலையை உண்டாக்கியது. அங்கிருந்து மறுபடியும் புறப்பட்டாள். அரண்மனை வாசலில் ஜனத் திரளின் பெரும் இரைச்சல் கேட்டது. விஷயம் இன்னதென்று தெரியவில்லை. இளையபிராட்டியை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது. அரண்மனையில் சேடிப் பெண்களை ஒவ்வொருத்தியாக விசாரித்தாள். சற்று முன்னால் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனுடன் இளையபிராட்டி அந்தரங்கமாகப் பேசிக்

16ம் பக்கம் பார்க்க.



கொண்டிருந்ததாகவும், பிறகு அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கிச் சென்றதாகவும் ஒரு சேடி கூறினாள். இளையபிராட்டி தனிமையை நாடிச் செல்லும் சமயங்களில் யாரும் வந்து தொந்தரவு செய்வதை இப்போதெல்லாம் அவர் விரும்புவதில்லை. ஆகையால் ஓடைப் பக்கம் இளையபிராட்டியைத் தேடிக் கொண்டு போகலாமா வேண்டாமா என்று வானதி தயங்கினாள். அச்சமயம் வாரிணி என்னும் மங்கை ஓட்டமாக ஓடி வந்தாள். ''பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கி விட்டாராம்!'' என்ற பயங்கரச் செய்தியைச் சொல்லிவிட்டு அலறி அழுதாள். மற்றப் பெண்களும் இதைக் கேட்டு 'ஓ'வென்று கதறத் தொடங்கினார்கள். வானதிக்கோ முதலில் எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லை. சும்மா நின்றவளை மற்றப் பெண்கள் உற்று நோக்கினார்கள். ''அடி பாவி! உன்னுடைய துரதிர்ஷ்டத்தினால்தான் இளவரசர் கடலில் முழுகினார்!'' என்று அவ்வளவு கண்களும் அவளை நோக்கி இடித்துச் சொல்லுவது போல் காணப்பட்டது. வானதியினால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. அங்கு நிற்கவும் முடியவில்லை. அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கி ஓடினாள்.

ஓடையை நோக்கி ஓடிக் கொண்டிருந்த போது வானதியின் உள்ளமும் ஓடிக் கொண்டிருந்தது. ''இளவரசர் கடலில் முழுகி விட்டார்!'' என்ற வார்த்தைகளின் பொருள் அவளுக்கு விளங்கியது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியை மீறிக் கொண்டு மற்றோர் எண்ணம் மேலெழுந்தது. சென்ற சில தினங்களாகத் தண்ணீரைப் பார்க்கும் போதெல்லாம் அதில் இளவரசரின் முகம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. கரையில் நின்று பார்க்கும்போதெல்லாம் அவருடைய முகம் தத்ரூபமாகத் தண்ணீரில் தோன்றும். தொடுவதற்குப் போனால் மறைந்துவிடும். அதன் காரணம் என்னவென்பது வானதிக்குப் புலனாயிற்று. இளவரசர் கடலில் முழுகியபோது என்னை நினைத்துக் கொண்டிருக்கிறார். என்னை அழைத்துமிருக்கிறார். அதை அறியாமல் பாவி நான் கரையிலேயே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்! ஆஹா! என்ன தவறு செய்து விட்டேன்? போனதை நினைப்பதில் இனிப் பயனில்லை. இனிச் செய்ய வேண்டியது என்ன? பேதைப் பெண்ணே! இனிச் செய்ய வேண்டியதைப் பற்றி யோசிக்கவும் வேண்டுமா! யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? அரண்மனைத் தோட்டத்தை அடுத்துள்ள ஓடை அரசலாற்றில் கலக்கிறது. அரசலாறு கடலில் போய்ச் சங்கமமாகிறது. கடலின் அடியில் காத்திருக்கிறார் இளவரசர். எனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறார். கடலின் அடியில் முத்துக்களாலும் பவளங்களாலும் ஆன அற்புத மாளிகையில் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அவரைச் சந்திக்கப் போகாமல் இந்த உலகத்தில் எனக்கு வேறு என்ன வேலை? யாருக்காக நான் இங்கே இருக்க வேண்டும்?...

இவ்வாறு வானதி தீர்மானம் செய்ததும் வானதியின் உள்ளத்தில் ஒருவித அமைதியே உண்டாகிவிட்டது; அவளது பரபரப்பு அடங்கி விட்டது; துயரம் நீங்கி விட்டது; கவலை தீர்ந்துவிட்டது.

நேரே ஓடைக்கரைக்குச் சென்றாள். பளிங்குக் கல்லினாலான படிக்கட்டுகளில் இறங்கி நின்றாள். சுற்று முற்றும் பார்த்தாள். அதோ தூரத்தில் படகு ஒன்று வருவது தெரிந்தது. அதில் இருப்பவர் இளையபிராட்டிதான். அவருடன் இருக்கும் ஆடவன் யார்? குடந்தை ஜோதிடர் வீட்டில் முதலில் சந்தித்து, இலங்கைக்கு ஓலை எடுத்துச் சென்ற வாலிபன் போலத் தோன்றுகிறது. இளவரசரைப் பற்றிய செய்தியைக்கொண்டு வந்தவன் அவன்தான் போலும்! அதனாலேதான் அவனை இளையபிராட்டி தனியாக அழைத்துப் போயிருக்கிறார். விவரங்களைக் கேட்டு அறிந்திருக்கிறார். எனக்குத் தெரிந்தால் கஷ்டப்படுவேன் என்று என்னை விட்டு விட்டுப் போயிருக்கிறார். அவர் வந்து விட்டால் என் இஷ்டப்படி செய்ய முடியாது. ஏதாவது சமாதானம் சொல்லப் பார்ப்பார்; ஆறுதல் கூறப் பார்ப்பார். நான் இளவரசரைப் போய்ச் சேர்வதைக் கட்டாயம் தடுத்து விடுவார். ஆனாலும் அவரிடம் சொல்லாமல், கடைசியாக ஒரு தடவை விடைபெற்றுக் கொள்ளாமல், போவது நியாயமா? தாய் தந்தையற்ற இந்த அனாதைப் பெண்ணிடம் இத்தனை அன்பாக இருந்தாரே! அவருக்கு ஒரு நன்றி வார்த்தையாவது சொல்ல வேண்டாமா.....? முடியாது! முடியாது! இனி ஒரு கணமும் காத்திருக்க முடியாது! இதோ தண்ணீரில் அவர் முகம் தெரிகிறது! இதோ அவருடைய முழு உருவமும் பொலிகிறது. என்னை அவர் அழைக்கிறார்; புன்னகை செய்து கூப்பிடுகிறார். ''உன்னை நான் மணம் புரிந்து கொள்ளுவதற்கு எல்லாத் தடைகளும் நீங்கிவிட்டன! வா!'' என்று அழைக்கிறார். இன்னும் ஏன் தாமதம்?.... ஆகா! தலை ஏன் இப்படிச் சுற்றுகிறது?



பம்பாய் பாரதி கலா மன்றத்தின் கட்டிட நிதிக்காக ரவி சங்கரின் சித்தார் கச்சேரி நடைபெற்றது. அப்போது பாலக்காடு ரகு மிருதங்கம் வாசித்தார். ஹிந்துஸ்தானி சங்கீதத்துக்குக் கர்னாடக பாணியில் தாள வாத்தியம் வாசிக்கப்பட்டது இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவை என்று சொல்கிறார் பாரதி கலாமன்றச் செயலாளர் திரு எஸ். ராமன். படத்தில் இடமிருந்து வலமாக அல்லாரக்கா, ரகு, ரவி சங்கர்.

பாழும் மயக்கம் வருகிறதா, என்ன? மயக்கம் வந்தால் பாதகமில்லை. கரையில் விழாமல் இந்த ஓடைத் தண்ணீரில் விழுந்தால் போதும்!....

வானதியின் மனோரதம் நிறைவேறியது. அவள் தண்ணீரில்தான் விழுந்தாள். கொதித்துக் கொண்டிருந்த உடம்பு இனிதாகக் குளிர்ந்தது. இதயமும் குளிர்ந்தது. கீழே கீழே கீழே போய்க் கொண்டிருந்தாள். எத்தனை தூரம் எத்தனை காலம் போனாள் என்று சொல்ல முடியாது. சில விநாடி நேரமாகவும் இருக்கலாம்; நீண்ட பல யுகங்களாகவும் இருக்கலாம்.

ஆம்; கடலின் அடியிலுள்ள அற்புத லோகத்துக்கு அவள் வந்து விட்டாள். நாக லோகம் என்பது இதுதான் போலும்! ஆகா! எத்தகைய அழகிய மாளிகைகள்! எத்தனை அடுக்கு மெத்தைகள்! முடிவில்லாமல், சிகரம் எங்கே இருக்கிறதென்று தெரியாமல் அல்லவா, இம்மாளிகைகள் உயர்ந்து விளங்குகின்றன! இங்குள்ள வெளிச்சம் எதனால் இவ்வளவு குளிர்ந்து மனோரம்யமாயிருக்கிறது? தண்ணீருக்குள் புகுந்து வருவதால் ஒளிக் கிரணங்களும் குளிர்ந்திருக்கின்றன போலும்! ஒளி எங்கிருந்து வருகிறது? மாளிகைச் சுவர்களிலிருந்தே வருகின்றது போலிருக்கிறது! ஆம், அதில் வியப்பில்லைதான்! தங்கத்தினாலும் முத்துக்களாலும் வைரவைடூரியங்களாலும் நாக சர்ப்பங்களின் சிரோரத்தினங்களாலும் ஆன விசித்திர மாட மாளிகைகள் குளிர்ந்த வெளிச்சத்தைப் பரப்புவது இயல்புதானே?

அதோ கூட்டமாக வருகிறவர்கள் யார்? அவர்களுடைய தேகங்கள் எப்படிக் காந்தி மயமாயிருக்கின்றன? முகங்களிலேதான் என்ன தேஜஸ்? இவர்களெல்லாம் தேவலோகத்து ஸ்திரீ புருஷர்களைப் போல் அல்லவா தோற்றமளிக்கிறார்கள்? நாம் வந்திருப்பது ஒருவேளை நாகலோகமில்லையோ? தேவலோகத்துக்கு வந்து விட்டோமோ!...

பிறகு, கனவுக்குள் ஒரு கனவைப் போல் சில நிகழ்ச்சிகள் அதிவேகமாக நடந்தேறின. சிங்கார அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்த மணி மண்டபம் ஒன்றுக்கு வானதியை அவர்கள் அழைத்துச் சென்றார்கள். மண்டபத்தின் மத்தியில் பொன்னியின் செல்வர் தமது பொன் முகத்தில் புன்னகை பொலிய நின்று வானதியை வரவேற்றார். தேவதுந்துபிகள் முழங்க, மணிகளும், மலர்களும் பொழிய, மங்கல கோஷங்கள் ஒலிக்க இளவரசரும் வானதியும் மாலை மாற்றித் திருமணம் புரிந்து கொண்டார்கள். அந்த ஆனந்தத்தின் மிகுதியைத் தாங்க முடியாமல் வானதி மூர்ச்சையாகி விழுந்தாள். வெகு நேரம் நினைவின்றிக் கிடந்த பிறகு இரு கரங்கள் அவளைத் தூக்கி எடுத்தன. அக்கரங்கள் பொன்னியின் செல்வருடைய திருக்கரங்கள் என்று முதலில் வானதி கருதினாள். அவர்தான் தன்னைத் தூக்கி எடுத்து வாரி அணைத்து மடியில் போட்டுக் கொண்டு மூர்ச்சை தெளிவிக்கிறார் என்று எண்ணினாள். ஆனால் கைகளிலே வளையல்கள் தட்டுப்பட்டதும் சிறிது ஐயம் உதித்தது.

''வானதி! வானதி! இப்படிச் செய்து விட்டாயே!'' என்ற குரலும் பெண் குரலாக ஒலித்தது. மிக மிகப் பிரயத்தனம் செய்து வானதி சிறிதளவு கண்ணிமைகளைத் திறந்து பார்த்தாள். குந்தவையின் முகம் அவள் கண்ணில் பட்டது.

''அக்கா! அக்கா! என் கலியாணத்துக்கு நீங்கள் வந்திருந்தீர்களா? தங்களைக் காணவில்லையே?'' என்று வானதியின் வாய் முணுமுணுத்தது. (தொடரும்)


உடல் தேய...
ஒவ்வொரு நிமிடமும்
உழைப்பிலே செலவழிகிறது
அவர் உள்ளடங்கிய க்ளூகோஸ்!
களைப்பு என்றால் உங்கள் உடம்பு க்ளூகோஸுக்காக ஏங்குகிறது என்றே பொருள். சக்தியைக் கணநேரத்தில் மீட்டுத் தருகிறது தூய க்ளூகோஸ் பவுடராகிய க்ளாக்ஸோஸ்-D
நம் உடம்பிலே சக்தியைத் தோற்றுவிக்கும் 'மூலதனம்' க்ளூகோஸ். களைப்பு மேலிடும்போது க்ளூகோஸ் சாப்பிட்டீர்களானால் தெம்பு மீளும். பால், பழச் சாறுகள், குடிநீர் ஆகியவற்றுடன் சேர்த்தோ, நேரடியாகவோ உண்பதற்கு உகந்தது க்ளாக்ஸோஸ்-D. மறவாதீர்கள், யாவரும் விரும்புவது இன்சுவையுள்ள க்ளாக்ஸோஸ்-D.
உடனடியான சக்தி பெற, ஒருசில காசுகளே செலவு!
க்ளாக்ஸோஸ்-D
க்ளாக்ஸோவின் க்ளூகோஸ் பவுடர்.

ராமாயணம்

ராஜாஜி

44. ஜடாயு

ராஜ குமாரர்களும் சீதையும் அகஸ்தியர் சொன்ன வழியைப் பின்பற்றிப் பஞ்சவடிக்குச் சென்ருர்கள்.

ஏகிஇனிது அவ்வயின் இருந்துறையின் என்ருன்
மேகநிற வண்ணனும் வணங்கிவிடை கொண்டான்
பாகனைய சொல்லியொடு தம்பி பரிவில்பின்
போகமுனி சிந்தைதொட ரக்கடிது போனுன்

அகஸ்திய முனிவருடைய சிந்தையானது, மூவருடன் நான்காவது பிரயாணியாகச் சென்றது என்கிருர் கம்பர். அதிலும் லக்ஷ்மணனுடன் சென்றது என்று சித்திரிக்கிருர். வரப்போகும் விஷயங்கள் அறிந்தவரல்லவா முனிவர்? கவிக்குத் தெரியும் ஞானிகளுடைய சிந்தையின் போக்கைக் கண்டு சொல்ல !

போகும் வழியில் ஒரு பெரிய கழுகைக் கண்டார்கள். கழுகின் அற்புத வடிவத்தைக் கண்டு இது ஒரு ராக்ஷசனுகத்தான் இருக்க வேண்டும் என்று ராமன் எண்ணி, ''நீ யார்?'' என்ருன்.

அந்தக் கழுகு மிகுந்த பிரியத்துடன் ''குழந்தாய்! நான் உங்கள் தந்தையின் சிநேகிதன்'' என்றது.

பிறகு அந்தப் பெரும் பறவை தன் குலத்தை விவரித்துச் சொல்லிற்று. கருட பகவானுடைய தம்பியான அருணனுடைய மகன் சம்பாதியின் தம்பி ஜடாயு என்று தெரிந்துகொண்டார்கள்.

''நீங்கள் இங்கே வனவாசத்தில் இருக்கும்போது சீதையைத் தனியாய் விட்டு விட்டு வேட்டைக்குப் போகும் காலத்தில் நான் அவளுக்குத் துணையாக இருப்பேன்'' என்ருன்.

இப்படித் தங்கள் பிதா தசரதனுக்கு நெருங்கிய நண்பனுன ஜடாயு சொன்னதைக் கேட்டு, அவனை ராம லக்ஷ்மணர்கள் மிகப் பிரியமாக ஆலிங்கனம் செய்து, ''காட்டில் நாம் ஒரு பெருந் துணையைப் பெற்ருேம்'' என்று மகிழ்ச்சியடைந்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

ஜடாயுவை முதன் முதலில் பார்த்த இந்த நிகழ்ச்சியைப் பற்றி வால்மீகி சுருக்கமாக இவ்வளவுதான் சொல்கிருர். பிறகு ஜடாயு சீதைக்காக ராவணனுடன் சண்டையிட்டு, காயமுற்று ராம லக்ஷ்மணர்கள் வரும் வரையில் எப்படியோ உயிரை வைத்துக் கொண்டிருந்து, விஷயத்தை அவர்களிடம் கூறிவிட்டு இறந்து போனது. ராமன் ஜடாயுவின் வீரத்தையும் அன்பையும் பாராட்டிப் பிரலாபித்தது. இவற்றைப் பின்னல் வால்மீகி சொல்கிருர். ஜடாயுவை முதலில் ராமன் சந்தித்த இந்த நிகழ்ச்சி வால்மீகி ராமாயணத்தில் இவ்வாறு மிகச் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதை ஒரு குறையாகக் கம்பர் நினைத்தார் என்று தெரிகிறது. அந்தக் குறையைத் தம் ராமாயணத்தில் கம்பர் மிக அழகாகப் பூர்த்தி செய்து தமிழருக்குத் தந்திருக்கிருர். வால்மீகியில், அதாவது அக்காலத்தில் கிடைத்த வால்மீகி ஏடுகளில், ராஜகுமாரர்கள் ஜடாயுவைக் கண்ட படலம் நியூனமாக இருக்கிறதே என்று வருத்தப்பட்டு, தம்



முடைய ராம கதையில் அதற்கு என்று ஒரு தனிப் படலம் கொடுத்துப் பாடி விட்டார். கம்பர் தம் கவிதா சக்தியைச் செலுத்தி நடந்ததைத் தெய்விகக் கண்ணால் கண்டு பாடி யிருக்கிறார். ஆரண்ய காண்டத்தில் இருக்கும் 1200 பாட்டுக்



களில் 350 பாடல்களைத்தான் கம்பருடைய கவிதா முத்திரை யிருப்பதாக டி.கே.சி. எடுத்தார்கள். இந்த ஜடாயுவைக் கண்ட படலத்திலோ 47 பாடல்களில் 37 தேர்ந்தெடுத்திருக்கிறார். தள்ளி விட்டது மிகக் குறைவு.

ஜடாயுவைப் பார்த்ததும் இவன் ஓர் அரக்கனாக இருக்கலாம் என்று சந்தேகித்து அருகில் போய்ப் பார்க்கிறார்கள். அதே சமயம் வில் ஏந்தி மரவுரி தரித்த வீரர்களை ஜடாயுவும் உற்று நோக்கிப் பார்க்கிறான். 'இவர்கள் யார்? இரண்டு தேவர்களோ?' என்று அவர்கள் அழகையும் காந்தியையும் பார்த்து வியப்படைகிறான். தேவர்களை நேரில் கண்டு நன்றாகப் பழகிய ஜடாயுவே இப்படிச் சந்தேகப்படுகிறான். முடிவில் 'இவர்கள் தேவர்கள் அல்ல!' என்று தீர்மானித்துக் கொள்ளுகிறான். பிறகு, 'இவன் மன்மதனேயோ!' என்று ராமனைப் பற்றி எண்ணுகிறான். பிறகு இருவர் சாயலையும் நன்றாகக் கவனித்து 'இவர்களைப் பார்த்தால் நண்பன் தசரதன் சாயலாகத் தோன்றுகிறது' என்று சந்தேகப்பட்டு, ''நீங்கள் யார்?'' என்று ராஜகுமாரர்களைக் கேட்கிறான். அவர்கள், ''நாங்கள் தசரத மகாராஜாவின் குமாரர்கள்'' என்று சொல்லுகிறார்கள். சொன்னவுடன் ஜடாயு கீழே இறங்கி அவர்களைத் தன் சிறகுகளைக் கொண்டு தழுவிக் கொண்டு ''அரசன் சுகமா?'' என்று கேட்கிறான். ''என்றென்றும் உலகம் மறக்காத முறையில் வாய்மையைக் காத்த தந்தை சுவர்க்கம் சென்று விட்டார்'' என்று சொல்லுகிறான் ராமன்.

ஜடாயு இந்தச் செய்தியைக் கேட்டதும் துயரப்பட்டு மூர்ச்சையடைந்து பிறகு ராம லக்ஷ்மணர்களுடைய கண்களினின்று பெருகிய நீர் அவன் மேல் பட்டு நினைவடைந்து பேசுகிறான் :

''தசரதன் உடலாகவும் நான் உயிராகவும் இருந்தோம். யமன் ஏன் உயிரை விட்டு விட்டு உடலைக் கொண்டு ஏகினான்? அவன் என்னையல்லவோ கொண்டு போயிருக்க வேண்டும்?'' என்றெல்லாம் சொல்லி ராஜகுமாரர்கள் ஒருவாறு மறந்திருந்த துயரத்தை மறுபடியும் எழுப்புகிறான். இறந்த தந்தையை மறுபடியும் அடைந்து விட்டதாகவே ராம லக்ஷ்மணர்கள் ஜடாயுவைத் தழுவி ஆறுதலும் சந்தோஷமும் அடைந்தார்கள். ''எங்கள் தந்தை சத்திய நெறியை விட்டுத் தவறக்கூடாது என்கிற உறுதியில் நின்று, அதனால் சகிக்க முடியாத துன்பத்தை அடைந்து உயிர் நீத்தார். எங்களைப் பெற்ற அன்னைமாரையும் ஊரையும் விட்டு நீங்கி நாங்கள் வனத்திலிருக்கிறோம். உன்னைப் பார்த்து ஆறுதல் பெற்றோம்'' என்றார்கள்.

''நீங்கள் வனவாசம் பூர்த்தி செய்யுங்கள். அது வரையில் உங்களுக்குத் துணையாக நான் இருக்கிறேன். பிறகு நானும் தசரதன் இருக்கும் உலகத்துக்குப் போவேன்'' என்றான் ஜடாயு.

பிறகு, ''தந்தை இறந்தபின் நீங்கள் அயோத்தியில் இருந்து கொண்டு நாட்டை ஆள்வதற்குப் பதில் ஏன் வனத்தில் இந்தத் தவ வேஷத்துடன் இருக்கிறீர்கள்? எந்தப் பகைவன் உங்களைக் காட்டுக்குத் துரத்தினான்? இக்ஷ்வாகு குலத்துக்குத் துரோகம் செய்த அந்தப் பகைவனை எனக்குச் சொல்லுங்கள். அவனை ஒழித்துத் தீருவேன்'' என்று கோபமாகக் கேட்கிறான்.

நடந்ததையெல்லாம் லக்ஷ்மணன் சொன்னான்: ''என் அப்பனே! உனக்குச் சமானம் உலகில் யார்?'' என்று ஜடாயு ராமனைத் தழுவிக் கொண்டான்.

பிறகு சீதையைப் பார்த்து, ''இந்தத் தேவி யார்?'' என்று கேட்டுத் தெரிந்து கொண்டு மகிழ்ச்சி அடைகிறான். மேலே கிளம்பிப் பறந்து அகஸ்தியர் குறித்த இடத்தை ராஜகுமாரர்களுடன் கூடவே சென்று காட்டுகிறான்.

இது கம்பருடைய சித்திரம். வால்மீகி ராமாயணத்தில் நாம் காணும் விஷயத்திலிருந்தே இப்படித்தான், கம்பர் பாடியிருக்கிறபடி நிகழ்ந்திருக்கும் என்று எண்ண வேண்டியதாகும். விட்டுப் போனதைக் கம்பர் சொல்லி விட்டார் என்றே நாம் வைத்துக் கொள்ளலாம். கம்பர் வால்மீகியை எவ்வளவு கூர்ந்து பின்பற்றிச் சொல்லுகிறார் என்பதையும், கம்பர் எவ்வளவு அழகாக உணர்ச்சி பாவத்துடன் அங்கங்கே குறைகளைப் பக்தியுடன் பூர்த்தி செய்கிறார் என்பதையும் இம்மாதிரியே பல இடங்களில் நாம் காண்கிறோம். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது, வால்மீகி பாடிய ராமாயணத்துக்கு — ஏடுகளுக்கு எத்தனையோ விபத்து. விட்டுப் போனதைப் பக்தர்களும் கவிஞர்களும்தான் காண்பார்கள். குறையாக இருப்பதோடு இரண்டாந்தரக் கவிகள் சும்மா விடுவதற்கு இஷ்டப்படாமல் சேர்த்தும் இருப்பார்கள். இதற்கெல்லாம் வருந்திப் பயனில்லை. இருப்பதையாவது எல்லோரும் படிக்க வேண்டும் **(தொடரும்)**

மஹா பட்டாபிஷேகம்

ஸ்ரீ ராம கதையை வால்மீகி வாயிலாகவும், கம்பன் வாயிலாகவும் படித்து மனம் உருகிப் பெறும் அதே உள்ளத் தூய்மையை, அதே உணர்ச்சியை, கதா பாத்திரங்களின் அதே தனித் தன்மைகளை, மேடையில் நடன நாடகத்தில் கண்டுகளிக்க முடியுமா; என்று ஐயம் கொண்டவர்களுக்கு, "முடியும்; முடியும்" என்று தன்னம்பிக்கையுடன் அறிவித்தது கலாக்ஷேத்திரத்தின் மஹா பட்டாபிஷேக நாட்டிய நாடகம். மஹா பட்டாபிஷேகத்தைத் திருவான்மியூர் கலாக்ஷேத்திர அரங்கத்தில் பார்த்து மகிழ்ந்தவர்கள் ஸ்ரீமதி ருக்மிணி தேவியையும், அவருடைய கலைக் குழுவினரையும் நெஞ்சார வாழ்த்தினர். கலைக்கு அவர் செய்துள்ள தொண்டுக்கு மஹா பட்டாபிஷேகம் சிகரமாக அமைந்திருந்தது. வால்மீகி ராமாயணத்தை நாட்டிய நாடகங்களாக அமைத்து, வால்மீகியின் மொழிகளையே இசையில் பொருத்தி, பரத நாட்டியக் கலையின் அம்சங்கள் அவ்வளவையும் சுவை குன்றாது, கையாண்டு, கலை உலகத்தில் ஒரு புதுமையை உண்டாக்க வேண்டும் என்று பதினான்கு ஆண்டுகளுக்கு முன் முயற்சியைத் தொடங்கினார் ஸ்ரீமதி ருக்மிணி தேவி. ராம வனவாசமும் பதினான்கு ஆண்டுகள்தாம்! என்ன பொருத்தம்! சீதா சுயம்வரம், ராம வன கமனம், பாதுகா பட்டாபிஷேகம், சபரி மோட்சம், சூடாமணி ப்ரதானம் — என்று படிப்படியாக வளர்ந்து இன்று மகா பட்டாபிஷேகத்தில் பூர்த்தியடைந்திருக்கிறது.

வேதத்தில் வரும் ருத்ர மந்திரங்களுடன் ஸாம கானத்துடன் நடைபெறும் ராவணனுடைய சிவபூஜையும் விபீஷணனுடைய தர்மோபதேசமும், ஆரம்பக் காட்சியிலேயே காண்போரை மெய்மறக்கச் செய்தன. விபீஷண சரணாகதி கட்டம் மனத்தை உருக்கும் படலம். அதை நடனங்களில் பாவம் குன்றாது வழங்கியது வெற்றிகரமான சாதனை. "யதிவா ராவண ஸ்வயம்" என்ற காட்சியில் ராமனுடைய கம்பீரம் மறக்க முடியாத ஒன்று. அரக்கர் — வானரச் சண்டையையும், ராம ராவணப் போரையும், தேவர்கள் கண்டு வியப்பதுபோலத் தெரியப்படுத்தி விளக்கிய உத்தி நாட்டிய நாடகத்துக்கு மிகப் பொருத்தமாக இருந்தது.

அகஸ்தியரின் வருகையும், "ஆதித்ய ஹிருதய" மந்திரோபதேசமும் நெஞ்சில் நிலைத்தன.

சீதையின் அக்னிப் பிரவேசக் காட்சி இந்த நாட்டிய நாடகத்தின் மனத்தை உருக்கும் உச்சகட்டம். ஸ்ரீமதி கிருஷ்ணவேணியின் நடன அபிநயச் சிறப்பு இந்த இடத்தில் உயர்ந்த கட்டத்தை எட்டிப் பிடித்தது. பரதனுக்குச் சேதி சொல்லும் கட்டமும், பரதன் பாதுகா ராஜ்யம் செய்யும் சிறப்பும் ஒரு காட்சியில் மிக எளிமையாக, சாதுர்யமாக ஆனால் நிதர்சனமாக உணர்த்தி வைக்கப்பட்டன. பட்டாபிஷேகத்துக்கு நகரம் அலங்கரிக்கப்படும் காட்சிகள், நடனங்களுக்கும் அபிநயங்களுக்கும் பூரண வாய்ப்பளித்தன. பங்குகொண்ட அனைவரும் இதை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். வசிஷ்டர் பட்டாபிஷேகம் செய்விப்பதும், சீதா தேவி ஆஞ்சநேயருக்கு முத்தாரம் அளிப்பதும் பாவம் ததும்பிய காட்சிகள்.

ஜனார்த்தனன் ராமனாகவும், பாலகோபால் ஹனுமானாகவும், குன்ஹி ராமன் ராவணனாகவும் மிகுந்த திறமையுடன் நடித்தனர். இவர்கள் எல்லோரும் அநுபவம் முதிர்ந்த உயர்ந்த கலைஞர்கள். ஒரு சில கைவீச்சிலும், பார்வை வேகத்திலும், அங்க அசைவிலுமே இவர்கள் உணர்ச்சிகள் முழுவதையும் சித்திரித்துக் காட்டினர்.

எளிமையான சூழ்நிலையில், பகட்டும் ஆடம்பரமும் இன்றி, குறைந்த சுலோகங்களுடன், நடிப்பையும் நடனங்களையும் நன்கு இணைத்து ரசிகர்களுக்கு மன நிறைவை உண்டுபண்ணிய உயர் கலைப் படைப்பு மஹா பட்டாபிஷேகம்.

இவ்வளவு சிறப்பாக நடன நாடகத்தை— ராமாயணத் தொகுதியைப் பூர்த்தி செய்ய உதவிய ஸ்ரீ ராஜாராமைப் பிரத்தியேகமாகப் பாராட்ட வேண்டும். காட்சிகளின் பாவங்கள்தான் முக்கியம் என்ற கலைக் கண்ணுடன் சிக்கனமாக மூல சுலோகங்களைப் பொறுக்கியெடுத்து இசையமைத்தது அவருடைய சிறப்பு அம்சம். நடனங்களுக்கு ஸ்ரீமதி சாரதாவின் உதவி மதிப்பிட வொண்ணாதது. அவர் கலாக்ஷேத்திர பழைய மாணவி; இன்று ஆசிரியை நிலையில் இருப்பவர். ஸ்ரீமதி கமலா ராணி, பாகவதர் சீதாராம சர்மா ஆகியோரின் பின்னணி இசையுடன் புதியதாக ராம மூர்த்தியின் குரலும் இனிது ஒலித்தது. கலாக்ஷேத்திரக் குழுவின் சிறப்புக்கு, பின்னிசையின் பங்கு முக்கியமானது என்பதை மற்ற கலாக்ஷேத்திர நடன நாடகங்களில் கண்டது போலவே இதிலேயும் காண முடிந்தது.

ராமாயண நாட்டிய நாடகங்களின் எல்லாப் பாகங்களையும் கலாக்ஷேத்திரத்தில் சில ரசிகர்கள் மட்டும் பார்த்து அநுபவித்தால் போதாது. சென்னையில் உள்ள சங்கீத சபைகள் பலவும் இந்த நடன நாடகங்களை ஒரு 'சீரி'ஸாக நடத்தி அங்கத்தினர்கள் காணும்படி செய்தால் கலைக்குத் தொண்டு செய்ததாகும்.

—எம். எஸ். செல்வாமி



சிலையைத் தேடி...19 கதை: வாண்டுமாமா சித்திரம்: ரமணி..




கொமிஷுக்கு வெளியே அந்த வட இந்தியர் காணப்பட்டார். அவர்தான் — அதைக் கைப்பற்றி இருக்க வேணும். இப்போது நாம் என்ன செய்வது?

இலங்கை முதல் கங்கை வரை!




“யாரது? துரோணாசாரியார் மாதிரி யல்லவா இருக்கிறது!”

“சாணக்கியரா? வாருங்கள்! வாருங்கள்! கங்கைக் கரையையும் பாடலிபுரத்தையும் விட்டு இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்களே! ஏதும் புது சபதமா? குடுமிகூட அவிழ்ந்திருக்க வில்லையே!”

“என்ன கிண்டலா செய்கிறீர்? அதோ இலங்கேசுவரன் வருகிறார். கேளும்!”

“இலங்கேசுவரரே! வருக, வருக! இங்கே தாங்கள் விஜயம் செய்த காரணம்?”

“இந்தப் பகுதி மக்கள் என்னைப் பார்க்க விரும்பினார்களாம்!”



“உடனே விதியே என்று வந்துவிட்டீர்களாக்கும். விதியை மதியால் வெல்லலாம் என்று உங்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வில்லையா இலங்கேசுவரரே!”

“யார், காடக முத்தரையனா! நீர் சிறந்த மதிநுகி என்று நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். கீர்த்திவர்மன், உம் வாளில் இரும்பை முறிக்கும் பச்சிலையைத் தடவி விடச் செய்திருந்ததைக் கடைசி விநாடியில் மோப்பத்தால் கண்டறிந்து வாளை மாற்றி எதிரியைத் திகைக்க வைத்தீரல்லவா?”

“அதோ நம் சம்பாஷணையில் கலந்து கொள்ள இரண்டு வீரர்கள் ஆவலுடன் வருகிறார்கள், பாருங்கள்!”

“குறுந் தாடியுடன் வருபவர் மாலிக்காபூர். ராஜ விசுவாசி. அரசன் அலாவுதினுக்குக் கவசமாக நின்றவன். மற்றொருவன்....?”

“நான்தான் பல்லவ மன்னன் நந்திவர்மனின் சகோதரன் மாயவர்மன்.”

“ஓஹோ! பொன்னாசை, பெண்ணாசை இரண்டையும் தவிர்த்து மண்ணாசை மாத்திரம் கொண்டு, ‘ஆட்சிபீடத்தை’ அடையத் திட்டமிட்ட மாயவர்மன் தானே?”

“எங்கெங்கோ எந்தக் காலத்திலோ பிரசித்தி பெற்றிருந்த நாமெல்லாம் இப்படி ஒன்றாகச் சேர்ந்து நிற்பது விசித்திரமாக இருக்கிறது.”

“இது ஒரு மாபெரும் சூழ்ச்சி!”

“சாணக்கியரே! உமக்கு எத்தனை காலமானாலும் இந்தச் சூழ்ச்சிகளில் அபிமானம் குறையாதோ?”

“அரசியல் சூழ்ச்சியைச் சொல்லவில்லை! இது கலை உலக ரசிகர்களின் சூழ்ச்சி! நம் எல்லோரையும் சந்திக்க இந்தத் திருவல்லிக்கேணி ரசிகப் பெருமக்கள் விரும்பி அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அழைப்பை ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறோம்! அதோ! அந்தத் திருமலாச்சாரியார் மண்டப அரங்கில் நம்மைக் காண ஆயிரக்கணக்கானவர்கள் காத்திருக்கிறார்கள்! வாருங்கள் செல்வோம்!”

சமீபத்தில் ‘இலங்கேசுவரன்’ மனோகரின் நாடக விழா ஜாம் ஜாம் என்று திருவல்லிக்கேணி என். கே. டி. கலாமண்டபத்தில் நடந்து முடிந்தது. துரோணராகவும், இலங்கேசுவரனாகவும், சாணக்கியனாகவும் மாலிக்காபூராகவும், காடக முத்தரையனாகவும் கடைசியாக மாயவர்மனாகவும் மேடையில் தோன்றிய மனோகர், தினசரி பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் பாராட்டுதல்களுக்குப் பாத்திரமானார். பல்லாயிரம் என்ற வார்த்தை மிகைப்படக் கூறும் வார்த்தை அல்ல. ஏனென்றால், என். கே. டி. கலா மண்டபத் திறந்த வெளி அரங்கு ஒன்றில்தான் ஒரே காலத்தில் மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் அமர்ந்து பார்க்க வசதி உண்டு; ஒவ்வொரு நாடக தினத்தன்றும், உட்கார்ந்

இருந்தவர்களின் எண்ணிக்கையில் பாதிப் பேராவது இரு ஓரங்களிலும் நின்றபடியே நாடகம் பார்த்தார்கள்.

இந்த நாடக விழாவில் இடம் பெற்ற ஆறு நாடகங்களில், ஆட்சிபீடம் என்ற ஒரு நாடகத்தைத் தவிர மற்ற ஐந்தும் நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களில் நடிக்கப்பெற்று மெருகு பெற்றிருக்கின்றன. மனோகரின் அபிமான நாடகம் 'சாணக்கிய சபதம்'. தோற்றத்திலே 'சாணக்கியன்' பாத்திரம் எளிமை நிரம்பியதாக இருந்தாலும், உள்ளத்திலே உறுதி வாய்ந்த பாத்திரம். மனோகரர் அதிக செலவு செய்து தயாரித்த நாடகம் 'துரோணர்'. இளமைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரையில் துரோணராகப் பலப்பல மாற்றங்களுடன் வாழ்ந்து காட்ட வேண்டிய சூழ்நிலை. புரிந்து கொண்டு நடிக்கிறார்.

மனோகரர் மிகச் சிறப்பாகப் பரிமளிப்பது 'காடக முத்தரையருக'த்தான். அநுபவம், நகைச்சுவை நோக்கு, நாவன்மை முதலிய


சிரமத்தையும் சோர்வையும் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தாமல் இந்த நாடக நாட்களில் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார். அவரை உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தவர் திரு என்.கே. திருமலாச்சாரியார்.

நண்பர் முத்துவுக்கு இரண்டு நோக்கங்கள். குறைந்த கட்டணத்தில் ஏராளமான ரசிகர்கள் ஒரே இடத்தில் தரமான நாடகங்களைப் பார்க்க வேண்டும். அவர்கள் இப்படி அளிக்கும் ஆதரவைக் கொண்டு, என்.கே.டி. கலா மண்டபத்துக்குச் சில நிரந்தர வசதிகளைச் சேர்க்க வேண்டும். இந்த இரண்டு நோக்கங்களுமே வெற்றி பெற்றுவிட்டதாக நாம் கருதலாம்.

இலங்கையிலிருந்து கங்கைக்கரை வரை பரவிக் கிடக்கும் மண்ணில், வெவ்வேறு காலங்களில் தோன்றிப் புகழ் பெற்ற இதிகாச, சரித்திர நாயகர்களின் வரலாறுகளை நாடகங்களாக்கி, நாடகக் கலைக்கு இந்நாளில் உறுதியுடன் தொண்டாற்றும் மனோகரர்







இடது பக்கம் :

● நாடக விழாவுக்கு விஜயம் செய்த ம. பொ. சி.யுடன் மனோகர்.

இங்கே :

● நாடக விழா அமைப்பாளர் முத்து, திருமலாச்சாரியார், மனோகர்.

பல மாறுபட்ட குணங்களுக்கு ஒரே சமயத்தில் வாய்ப்பு இருக்கிறது.

'இலங்கேசுவரனை'ச் சோக சித்திரம் என்றால் 'மாலிக்காபூ'ரை ஒரு முரட்டுச் சித்திரம் என்றே சொல்லலாம். 'ஆட்சி பீடம்' நாடகத்தில், அரசுரிமைக்காகத் துடிக்கும் ஓர் உப பாத்திரமாகத்தான் மனோகரர் மாயவர்மன் வேடம் தாங்குகிறார். இந்தப் பாத்திரத்துக்கான அழுத்தமும் அநுபவமும், 'இன்னும் போகப் போகத்தான் சேர வேண்டும். கதையின் கட்டுக்கோப்பும் இன்னும் இறுக்கமடைய வேண்டும். கடைசிக் காட்சியில் இறந்துபோன மாயவர்மனை ஆட்சி பீடத்தில் அமர்த்திக் காண்பிப்பதின் மூலம் சூழ்நிலை, ஆரவாரத்துக்குப் பதிலாக அநுதாபத்துக்குரியதாகப் போய் விடுகிறது. இதற்கு ஒரு மாற்றுக் கண்டு பிடித்து நடைமுறைக்குக் கொண்டு வரலாம்.

உயிருள்ள வசனங்கள், கண்களுக்கினிய காட்சிகள், வேகமான மாற்றங்கள், தந்திரக் காட்சிகள் முதலியவை எப்போதுமே மனோகர் நாடகக் குழுவுக்கு உறுதுணையாக நிற்பவை.


இந்த நாடக விழாவுக்கு ஏற்பாடு செய்த நண்பர் ஜி. முத்து (திருவட்டீசுவரர் சபா)


அவர்களுக்கு இந்த விழாவை ஒட்டி ஒரு பட்டமும் வழங்க ஏற்பாடாகி இருந்தது. தினசரி நாடகம் பார்க்க வந்த ரசிகர்களிடமே யோசனைகளும் கேட்கப்பட்டன. கடைசியாகப் பெரும்பான்மையோரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டம் 'நாடகக்காவலர்!'

இந்த நாடகங்களைக் கண்டு ரசித்த ஏராளமான மக்களின் சார்பில் மனோகரருக்குப் பொன்னாடை போர்த்தி, இந்தப் பட்டத்தையும் ரசிகர்கள் சார்பில் வழங்கியவர் 'மக்கள் திலகம்' என்ற பட்டத்தை ஏற்கனவே பெற்றுள்ள எம். ஜி. ஆர்.

இந்த நாடகக் காவலர் தொடர்ந்து மேடைக்குச் சிறந்த சேவை செய்வார் என்று நம்புவோமாக!

—கோமதி சுவாமிநாதன்





இந்தியாவை அளக்க எழுபது ஆண்டுகள்!

பாரத தேசப்படத்தினை வரையச் சொன்னால், அநேகமாக எல்லோராலும் ஓரளவு சரியாக வரைந்துவிட முடியும். பார்த்துப் பார்த்துப் பழகிய வடிவம். பள்ளிப் பருவத்திலே வரைந்து வரைந்து அதன் உருவம் திட்ட வட்டமாக நம் மனத்திலே பதிந்துள்ளதல்லவா? தெற்கே முக்கோண வடிவமான தீபகற்பம். வடக்கே போகப் போக அகலமாக விரிந்து பாரத மாதா இரு கரங்களையும் விரித்து நிற்பது போன்ற வடிவம்.

ஆனால், முதன் முதலாக நம் நாட்டின் தேசப் படத்தினை யார், எப்போது உருவாக்கினார்கள்? அரபிக் கடலையொட்டியும், வங்காளக் குடாக் கடலை ஒட்டியுமுள்ள கரைகளிலே எவ்வளவு வளைவுகள்! சென்னை போன்ற ஒரு நகரத்தின் வடிவமே நமக்குச் சரியாக விளங்கவில்லையே? அவ்வளவு ஏன்? நகரின் ஒரு பகுதியிலே வீடு கட்டுவதற்கு ஒரு மனை வாங்கினோமானால், ஓர் எஞ்சினியர் அதன் நான்கு எல்லைகளையும் அளந்து வேலி போடும் வரையில் நாம் வாங்கிய நிலப்பரப்பின் வடிவமும் எல்லைகளும் நமக்கே விளங்குவதில்லையே?


இந்தியாவின் நிலப்பரப்பினை அளந்து, அதிலுள்ள மலைகள், நதிகள், பாலைவனங்கள், ஏரிகள் இவற்றைத் தேசப்படத்திலே குறித்து, மாநிலங்கள், மாவட்டங்கள், தாலுக்காக்கள் இவற்றை வரையறுத்து, நகரங்கள், சிற்றூர்கள் ஒவ்வொன்றையும் உரிய இடத்திலே குறிப்பிட்டுத் தேசப் படம் வரைதல் இலேசான காரியமா? அத்துடன், ஒவ்வொரு மலையின் உயரம் இவ்வளவு என்று கணக்கிட வேண்டுமே? பல்வேறு நகரங்களையும் சிற்றூர்களையும் இணைக்கும் சாலைகளையும் இருப்புப் பாதைகளையும் தேசப் படத்திலே குறிக்க வேண்டும். ஓரிரு ஆண்டுகளில் நிறைவேறக்கூடிய பணியன்று, இவையனைத்தும். பல ஆண்டுகள் நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்ந்து எவ்வளவோ இன்னல்களுக்கு ஈடு கொடுத்து, எத்தனையோ உயிர்களைப் பலி கொடுத்து நிறைவேற்றிய சாதனை இது.

எஞ்சினியர் — சர்வேயர் — கட்டடக் கலை வல்லுநர் திரு டி. என். சுப்பிரமணியம் அவர்களிடம் இந்தியா 'சர்வே' செய்யப் பெற்றது, அதன் தேசப்படம் வரையப்பட்டது குறித்துக் கேட்டபோது சில சுவையான தகவல்கள் கிடைத்தன.

இந்தியாவில் முதன் முதலாகச் சர்வே செய்யப்பட்ட இடம் சென்னை நகரம்தான். பரங்கிமலையிலிருந்து ராஜாஜி ஹால் வரையிலுள்ள ஏழுமரை மைல் தூரத்தை முதன் முதலாக அளந்தவர், வில்லியம் லாம்டன். இந்திய சர்வேயின் தலைவர் இவரே. 1802ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ந் தேதி தொடங்கிய இந்த ஏழரை மைல் நீளமுள்ள முதல் 'சர்வே' பூர்த்தியடைய நாற்பத்திரண்டு நாட்கள் ஆயின. திரும்பத் திரும்பப் பன்முறை அளந்து பார்த்து, சர்வே செய்தது சரியாக உள்ளதா என்று ஊர்ஜிதம் செய்துகொள்ள அக்காலத்தில் இவ்வளவு நாட்கள் தேவைப்பட்டன. முதன் முதலாக அளவை செய்யப்பட்ட இந்த ஏழரை மைல் தூரமுள்ள நேர்க்கோடு தான் இந்திய சர்வேயின் அடிப்படைக் கோடு (Base Line) ஆகும்.

பரங்கி மலையில் தொடங்கிய சர்வே, தொடர்ந்து பெங்களூர் வரை நீடிக்கப் பெற்றது. இந்த 160 மைல் சர்வே சரிதானா என்று மீண்டும் சோதித்துப் பார்த்தபோது 3½ அங்குலம் வித்தியாசம் இருந்ததாம். அக் காலத்தில் கிடைத்த சர்வே கருவிகளையும் குறைந்த வசதிகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது இந்த மூன்றே முக்கால் அங்குலம் வித்தியாசம் ஒரு பொருட்டே அல்ல.

அடுத்து பெங்களூரிலிருந்து மங்களூர் வரை 360 மைல் தூரம் அளந்தனர்.




இவ்விதம் சர்வேக் குழுக்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் எவ்வளவோ! ஒரு மலைப் பிரதேசத்தில் சர்வே செய்த காலையில் அவர்களுக்கு இன்றியமையாத தியோடோலைட் கருவியை ஒரு புலி தாக்கி உடைத்து விட்டதாம்! பல நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களின் வழியே சர்வே குழுக்கள் செல்லவோ அளக்கவோ அனுமதிக்கவில்லை! இவர்களில் சிலர், அதற்குப் பிரதியாகப் பெருந்தொகையை கோரினர் சர்வே குழுவினரிடம். சர்வே லைனி (பாதை)ல் தடையாகக் குறுக்கிட்ட ஒரு மரத்தை

தொடர்ந்து, குமரி முதல் இமயம் வரை முக்கோண வடிவங்களில் (படத்தில் காட்டியுள்ளபடி) பாரதம் முழுதும் சர்வே செய்து முடிக்க எழுபது ஆண்டுகள் ஆயின. இந்த முக்கோண சர்வே முறை டிரிக்னமெட்ரிகல் (Trignometrical) சர்வே எனப்படும். பூகோளப் பாடங்கள் அனைத்தும் இந்தச் சர்வேயை அடிப்படையாகக் கொண்டவையே. விலங்குகள் வாழ்ந்த பயங்கரமான காடுகளிலும், சதுப்பு நிலங்களிலும், பொசுக்கும் வெய்யிலில் பொட்டல் வெளிகளிலும், கடுங் குளிரில் மலைப் பிரதேசங்களிலும் நடந்தும், குதிரைகள் மீது சென்றும் சர்வே செய்ததில் உள்ள சங்கடங்களை கணிப்பது கஷ்டமல்ல. நல்ல உணவின்றியும், பருக நீரில்லாமலும், இரவில் படுக்க வசதியில்லாமலும் அந்த சர்வே குழுக்கள் அநுபவித்த தொல்லைகள் பல. கொசுக்கடி, மலேரியா காய்ச்சல், சோர்வு, எதிர்பாராத விதத்தில் விலங்குகளால் தாக்கப்பட்டது — இவை காரணமாகப் பலியானவர்கள் பலர்.

அஸ்ஸாம் பள்ளத்தாக்கில் லெப்டினன்ட் ஹால்கோம்ப் தலைமையில் 80 பேர்கள் அடங்கிய சர்வே குழு பணியாற்றுகையில் அந்த எண்பது பேர்களையும் நாகர்கள் தாக்கிக் கொலை செய்து விட்டனராம்!

தஞ்சை மாவட்டத்தில் சர்வே நிகழ்த்திய பொழுது, கோயில் கோபுரத்தின் உச்சியில் ஏறித் தியோடோலைட் (முக்கோணங்களை அளக்க உபயோகப்படும் சர்வே கருவி) டைப் பொருத்தி சர்வே செய்யும் நேரத்தில் துரதிர்ஷ்டவசமாக அக்கருவி பழுதடைந்து விட்டது. இதனை லாம்டன் ஒருவரே நாற்பத்திரண்டு நாட்கள் பிரயாசைப்பட்டுப் பழுது பார்த்தார்!





- சர்வேயர் திரு டி. என். சுப்பிரமணியம்.
- விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து தேசப் படங்கள் தயாரிக்கும் ஸ்டீரியோ பிளானிகிராப் கருவி.
- மாணவியர் 'சர்வே' செய்யப் பயிலுகின்றனர்.
- விண்வெளியிலிருந்து இந்திய தீபகற்பத்தின் தோற்றம்.

வெட்ட சர்வே குழுவினர் ரூ. 300 நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருந்தது!

1823ல் லாம்டன் தமது எழுபதாவது பிராயத்தில் இறந்தார். அவர் இருபது ஆண்டுகளில் இந்திய தீபகற்பத்தில் 1,65,342 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நிலப் பரப்

பீன் அளந்து சர்வே செய்தார். இந்தச் சர்வேக்கான மொத்தச் செலவு 83,537 பவுன். அதாவது, ஒரு சதுர மைலுக்கு ஏழுரை ரூபாய் விதம்தான் ஆகிறது. இது மிகக் குறைந்த செலவு என்று கூறப்படுகிறது. லாம்டனின் மறைவுக்குப் பின் ஜார்ஜ் எவரெஸ்ட் அப்பணியைத் தொடர்ந்து நடத்தி வெற்றிகரமாக முடித்தார். எவரெஸ்டின் தலைமையில் இயங்கிய சர்வேக் குழு, இமய மலையின் எழுபத்தொன்பது சிகரங்களின் உயரத்தையும் அளந்து கணக்கிட்டது. உலகிலேயே மிகவும் உயரமான எவரெஸ்ட் சிகரத்தை 1849ல் அளந்தவர் இவரே. அதுவரை 'சிகரம் 15' என வழங்கிய இமயத்தின் இணையற்ற சிகரம் இன்று ஜார்ஜ் எவரெஸ்டின் பெயரைத் தாங்கி நிற்கிறது. அச்சிகரம் கண்ணுக்குப் புலப்படாவண்ணம் பனிப் படலம் அதனை மூடி மறைத்திருந்ததால், பனி நீங்கும் வரை ஜார்ஜ் எவரெஸ்ட் ஆறு மாத காலம் பொறுமையோடு காத்திருக்கும்படி நேரிட்டது.

ஆங்கிலேயர்களின் பொறுமை, விடா முயற்சி ஆகிய நற்குணங்களைப் பாராட்டும் திரு சுப்பிரமணியம் இன்னொர் உதாரணமும் கூறுகிறார்: ''பம்பாய்க்கும் புனாவுக்குமிடையே உள்ள மலைப் பாதையை அகலப் படுத்த வேண்டியிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் அதற்குப் பொறுப்பேற்றிருந்த எஞ்சினியர் ஓர் ஆங்கிலேயர். அவர், அருகில் கூடாரம் அமைத்துக் கொண்டு, தினமும் குதிரை மீதேறிச் சென்று தாமே அதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்பார்த்து வந்தார்.''

இந்திய சர்வேக் குழுவினரில் ஒருவரான மாக்மஹான் என்ற ஆங்கில சர்வேயர் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே உள்ள எல்லையை அளந்து வரையறுத்தார். அவர் பெயரைத் தாங்கி நிற்பதுதான் சீன ஆக்கிரமிப்பு காரணமாகப் பிரபலமடைந்துள்ள 'மாக்மஹான் கோடு'.

கணக்கு என்றால் வேப்பங் காயாக நினைப்பவர்களுக்கு, திரு சுப்பிரமணியம் கூறும் உண்மை இனிக்கும்: ''என் மனைவி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கணக்கில் நாற்பது சதவீதம் மார்க்குதான் வாங்கியிருந்தாள். ஸ்கேலைப் பிடித்து இரு சம தூர நேர்க் கோடுகளைக்கூட அவளால் ஒழுங்காக வரைய முடியாது. ஆனால் ஸ்ரீமதி சாரதா சுப்பிரமணியம் இன்று 'டிராப்ட்ஸ்மன்', 'சர்வே' துறைகளில், தேர்ச்சி பெற்றிருக்கிறாள். இத்துறையில் பரீட்சைகளும் தேறி இன்று இராணுவ எஞ்சினியரிங் சர்வீஸில் பணியாற்றுகிறாள். ஆர்வமும் உழைப்பும் இருந்தால் எதையும் யாரும் சாதிக்கமுடியும்.'' பேட்டி: **'பாணன்'**

சிங்கப்பூர் காட்டும் வழி

இன்று சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழிகளாக விளங்கும் நான்கு மொழிகளில் (ஆங்கிலம், தமிழ், மலாய், சீனம்) நம் தாய் மொழியாம் தமிழும் ஒன்று என்பது நாம் அனைவரும் பெருமைப்படத் தக்க ஒன்றாகும். நான்கு மொழிகளுக்கும் சம உரிமை என்னும் கொள்கையின் அடிப்படையில் தமிழ் மொழிக் கல்வி வளர்ச்சிக்கும் ஏனைய மொழிகளைப் போலவே நம் அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் அதே வேளையில் நாம் இன்னொன்றையும் நினைவில் கொள்ளல் பயனுடையதாகும். மாறிவரும் சூழ்நிலையில் ஒருமொழி மட்டுமே அறிந்த ஒருவரின் எதிர்காலம் ஒளி மிக்கதாக அமையும் என்று சொல்வதற்கில்லை. எனவே, ஒவ்வொருவரும் குறைந்தது இரு மொழிகளிலேனும் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். இதனாலேயே எல்லாப் பள்ளிகளிலும் இரண்டாம் மொழி கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் தமிழ்ப் பள்ளிகளில் ஆங்கில மொழி கட்டாய பாடமாக்கப்பட்டிருப்பதுடன், கணிதத்தையும், விஞ்ஞானத்தையும் ஆங்கில மொழியில் கற்பித்தலும் கடந்த ஆண்டு முதல் வகுப்பில் தொடங்கி விட்டது. இது படிப்படியாக உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு வரையில் விரிவுபடுத்தப்படும்.

ஆங்கில மொழி சிங்கப்பூரின் ஆட்சிமொழி மட்டுமன்று. சிங்கப்பூரின் வாணிக மொழியும் அதுவே. அத்துடன் உலக மொழியாகவும் அன்றாடம் வளர்ந்து வரும் அறிவியலை எட்டிப் பிடிக்கப் பயன்படும் ஏணியாகவும் அது விளங்குகிறது. எத்துறையிலும் போட்டி மிகுந்துள்ள இன்றைய உலகில் நம் சிறார்களின் எதிர்காலம் சிறப்புற அமைய வேண்டுமாயின், ஆங்கில அறிவு மிக மிக அவசியம். எனவே, இந்த வாய்ப்பை நம் சிறுவர்கள் நன்முறையில் பயன்படுத்திக் கொண்டு நம் ஆங்கில மொழி அறிவை வளர்த்துக் கொள்வதுடன், பல்கலைக் கழகத்திலும் பல துறைத் தொழில் நுட்பக் கல்லூரியிலும் சேர்ந்து தம் கல்வி அறிவையும் திறமையையும் பெருக்கிக் கொள்வர் என நம்புகிறேன்.

இதே போன்று கடந்த பத்தாண்டு காலத்தில் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழ் பயிலும் மாணாக்கரின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகியிருப்பதுடன், அவர்களின் தமிழ் மொழி அறிவும் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்திருக்கின்றது. இன்று பதினாயிரம் மாணவர்கள் தமிழை இரண்டாம் மொழியாகப் பயின்று வருகின்றனர். மேலும் கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து வந்துள்ள தமிழாசிரியர்களைக் கொண்டு பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணாக்கர்க்கும் சென்ற ஆண்டிலிருந்து தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலப் பள்ளியில் பயிலும் நம் சிறுவர்கள் தாய்மொழியைக் கருத்தூன்றிக் கற்பதன் மூலம் தங்களுடைய நாகரிகத்தையும் பண்பாட்டையும் உணர்ந்து நல்ல குடிமக்களாக விளங்க வேண்டும் என்பதே என் அவா.

— **என். கருப்பையா**

குரூப் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்

(சிங்கப்பூர் 150ம் ஆண்டு விழா சிறப்பு மலரிலிருந்து)

குடை ராட்டினம்



எஸ்.ரங்கநாயகி

அத்தியாயம் 4

வாசுவின் மனத்தைப் புரிந்து கொண்ட ஆனந்த் சட்டென்று தன் கைக் கடிகாரத்தை நோக்கி, ''அடடா! மறந்தே விட்டேனே!... அப்பாவுக்கு ஒரு புதிய மருந்து எழுதித் தருவதாக டாக்டர் கூறினாரே... வாசு, இந்த ஓவியத்தைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நான் டாக்டர் வீடுவரை போய் வருகிறேன். நீ ரமாவோடு உன் வீட்டுக்குப் போ!'' என்றான்.

''சும்மா கதைவிடாதேடா. முதலில் போட்ட திட்டப்படி நாம் போய் வருவோம். ரமா வேண்டுமானால் என் வீட்டுக்குப் போய்க் காத்திருக்கட்டும்'' என்றான் வாசு.

''நீங்கள் உங்கள் காரியத்தைக் கவனியுங்கள். எனக்குப் படிக்க வேண்டியிருக்கிறது. நான் அப்புறமாக வருகிறேன்'' என்றாள் ரமா.

ஆனந்தோ ஒரே பிடிவாதமாக ரமாவை ஸ்கூட்டரின் பின்புறம் ஏற்றி வைத்து விட்டே மறு காரியம் பார்த்தான். அவனுக்கு உள்ளூற மகிழ்ச்சி, ஒரு காதல் ஜோடியை இணை சேர வைத்ததில்.

இன்பக் கனவில் மிதந்து சென்றது ஸ்கூட்டர். ஆனால்... திருப்பத்தில் பீட் கான்ஸ்டேபிள் சிறிது நேரம் வழி தராது நிறுத்தி விட்டான். அதே நேரத்தில் அருகில் ஒரு கார் வந்து நின்றது.

''ரமா, எங்கே இப்படி?'' காரில் இருந்த ரூப குமார் கேட்டான்.

வாசு அவனை அதிசயத்துடன் நோக்கினான். ரமாவோடு ரூபகுமார் பேசுவான் என்பதை அவன் அறிவான். ஆனாலும் அவன் வாசுவோடு இருக்கும் போது வாசுவை மையத்தில் வைத்துப் பேசியது இல்லை. அதோடு ரமா என்று உரிமையுடன் கூப்பிட்டதும் இல்லை. இப்போது எங்கிருந்து வந்தது துணிவு?

ரமாவோ நெஞ்சு படபடக்க அவனை நோக்கினாள்.

''ரமா! உங்கள் வீட்டிலிருந்துதான் வருகிறேன். பெரியம்மா நீ எங்கோ போயிருப்பதாகச் சொன்னாள். கிளம்பி விட்டேன்.''

''இவர்கள் வீட்டுக்கா போயிருந்தீர்கள்?'' என்று வாசு படபடத்துக் கேட்டு விட்டான்.

''ஆமாம், என்ன தவறு? ரமாவின் அப்பா எனக்கு மாமா. நான் ரமாவுக்கு அத்தை மகன்!'' என்று கூறிய ரூபகுமார் கடைசியில், ''ஏதோ முறைப்பிள்ளை என்பார்களே, அந்த உறவுதான்'' எனக் கூறி வைத்தான்.

ரமாவுக்குச் சப்த நாடியும் ஒடுங்கியது போன்ற உணர்ச்சி.

வாசுவுக்கோ பூமியே ஆடுவதுபோல் இருந்தது. உறவுமுறையைக் கேட்டதோடு அவன் கூறிய முறையைக் கேட்டதும் அவன் மனத்தில் ஆத்திரமும் கோபமும் பொறாமையும் ஒன்று சேர்ந்து பேய் நடனம் ஆடின. ஒரு முறை திரும்பி ரமாவை நோக்கினான்; மறுமுறை திரும்பி ரூபகுமாரை நோக்கினான். அடுத்தகணம் மேலே செல்லாது வந்த வழியே திரும்பினான்.

ஸ்கூட்டரின் வேகம் அதிகரித்துக் கொண்டே சென்றது. பேய்ச் சுழலாக மனம் சுற்றியது போல் ஸ்கூட்டரும் கண் மூடித்தனமாக ஓடியது.

''வாசு! வாசு! இது என்ன?'' ரமா நடு நடுங்கிக் கூவியது அவன் காதில் விழவில்லை. பல ஆபத்துக்களுக்குத் தப்பிக் கடைசியில் ஸ்கூட்டர் ரமாவின் வீட்டு வாசலை அடைந்தது.

''இறங்கு!'' வாசு கர்ஜித்தான்.

ரமா இறங்கி விட்டாள்.

வாசு விர்ரென்று ஸ்கூட்டரைத் திருப்பினான். அது காற்றாகப் பறந்தது.

வீட்டுக்குச் சென்றதும் முதல் காரியமாகத் தன் தாயை நோக்கி, ''ரமாவுக்கு அவன் முறைப் பையனாம்!'' என்று கோபம் கொந்தளிக்கக் கூறியவன் நடந்த கதையைச் சொன்னான்.

''அந்த முறைப் பையனைப் பார்த்து விட்டு நீ முறைக்கும் பையனாக நின்றுயாக்கும்!'' தேவகி சீண்டினாள் தனயனை.

''எனக்கு வந்த ஆத்திரத்தில் ஸ்கூட்டரை வந்த வழியே திருப்பினேன். ரமாவை அவள் வீட்டில் கொண்டு போய்த் தள்ளினேன். 'விர்'ரென வந்து விட்டேன்'' என்றான் வாசு.

''நன்றாகத்தான் இருக்கிறது, உன் காரியம். தென்னை மரத்தில் தேள் கொட்டியதாம், பனை மரத்துக்கு நெறி கட்டியதாம்ங்கிற கதையாக. நல்ல அசட்டுப் பிள்ளை, போ! உன்னை வைத்துக் கொண்டு ரமா எப்படித்தான் சமாளிக்கப் போகிறாளோ? உன் கோபத்துக்குக் கடைசியில் ரமாவை இலக்காக்கி விட்டாயே! பாவம், குழந்தை எப்படித் தவிக்கிறாளோ?'' என்றாள் தேவகி.

'' பெரிசாக அநுதாபப்படறேயே, அந்தக் குழந்தைக்கு! நானும் ரமாவும் ரூபகுமாரை எவ்வளவு முறை சந்தித்திருக்கிறோம்? ரூபகுமார் தனது அத்தை மகன் என்று ரமா ஒரு தடவைகூடக் கூறவேயில்லையே! அவள் ஏன் அம்மாவிடம் மறைக்க வேண்டும் ?''

''யாரோ ஓர் அத்தை வந்திருப்பதாகச் சொன்னாளே, அவளுடைய மகனோ இவன்?'' தேவகி கேட்டாள்.

''அது எந்தச் சொத்தையின் மகனோ, தெரியாது. ரூபகுமாருக்குப் பெற்றோர் கிடையாது என்று ஆபீஸில் சொன்னதாக நினைவு !''

''இப்படிப் பெண் மனத்தைப் புரிந்து கொள்ளாத ஜடமாயிருக்கிறாயேடா. அத்தையையும் சொத்தையையும், உறவையும் முறையையும் அது பார்க்குமா?'' தேவகி கேட்டாள்.

அன்னையின் இந்தச் சொற்களில் ஓர் உண்மையைக் கண்டான் வாசு. எனவே அவனுக்கு இரவு முழுதும் தூக்கம் பிடிக்கவில்லை. என்ன அலைகள் அவனைப் புரட்டியெடுத்து விட்டன. 'காலையில் எழுந்ததும் முதல் காரியமாக...' — இப்படி ஓடியது எண்ணம்.

ரமா மட்டும் தூங்கினாளோ? அவளும்தான் வீட்டில் தூக்கம் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தாள். இந்த வாசுவுக்கு ஏன் இவ்வளவு கோபமும் ஆத்திரமும் வரவேண்டும்? இத்தனை நாட்கள் நெருங்கிப் பழகியும் அவனுடைய மனத்தைப் புரிந்துகொள்ளத் தெரியவில்லையே ! எத்தனை வேகமாக ஸ்கூட்டரைத் திருப்பி, வீட்டிலே இறக்கிவிட்டு, 'போதும் உன் உறவு' என்பது போல் கத்திரித்துக் கொண்டு போய் விட்டார் !

கண்களை மூடி அவள் தூங்க முயன்றும் அவள் எண்ணம் உறக்கம் கொள்ளவில்லை. 'காலையில் எழுந்ததும் முதல்



காரியமாக.....' இழைந்து இணைந்தது எண்ணம். இருவர் எண்ணமும் இணைந்த பொழுது பொழுது புலர்ந்து விட்டது. எண்ணத்தை முதலில் செயலாக்கியவள் ரமாதான்.

அந்த அதிகாலை நேரத்தில் ரமா தன் வீட்டில் வந்து நிற்பாள் என்று வாசு எதிர்பார்க்கவில்லை.

''வாம்மா, ரமா!'' என்று தேவகி வரவேற்றாள்.

''அம்மா....!''

ரமாவினால் அதற்குமேல் பேச முடியவில்லை. குரலை அடைத்தது. நெஞ்சு பாறையாகக் கனத்தது. கண்களில் அருவி போல் நீர் வழிந்தது. விக்கி விக்கி அழலானாள்.

தேவகி ஆதரவுடன் அவளை அணைத்துக் கொண்டாள்; கண்ணீரையும் துடைத்து விட்டாள். ''ரமா! இந்த அசட்டுப் பிள்ளையோடு இவ்வளவு பழகியும், இவன் குணம் தெரியாமல் இப்படி மாய்ந்து போகிறாயே, அம்மா! ஏதோ ஒரு வேகத்தில் பைத்தியக்காரத்தனமாக இப்படி ஏதாவது செய்து வைப்பான். அப்புறம் வருத்தப்படுவான். இது இவன் பழக்கம்'' என்றாள்.



''அம்மா! உங்களுக்கு விவரம் அனைத்தும் தெரியுமா?'' ரமா நெகிழ்ந்து போய் விட்டாள்.

''தெரியாமலென்ன? எல்லாவற்றையும் இவனே கூறினன். இப்பொழுது, 'ஐயோ, இப்படிச் செய்துவிட்டேனே' என்று தவிக்கிறன். இரவு தூக்கமில்லை. காலையில் முதல் காரியமாக உன் வீட்டுக்குத்தான் அவன் வருவதாக இருந்தான். அதற்குள் நீயே வந்து விட்டாய்.''

ரமா மெள்ளத் தலை நிமிர்ந்து அருகில் அமர்ந்திருந்த வாசுவை நோக்கினள். வாசுவும் அவளை நோக்கினன். இருவர் விழிகளும் உறவாடின; இதழ்களோ பலப் பல கதைகள் பேசின.

வாசுவைத் தேடி வந்து, தனக்கு உரியவன் அவன்தான் என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டாள் ரமா. அவனே தான் செய்த தவற்றுக்குப் பிராயச்சித்தம் தேடுபவன் போல் வைத்த கண்ணை வாங்காமல் அவளையே நோக்கியவாறு அமர்ந்திருந்தான்.

''ஏன், ரமா! உங்கள் வீட்டுக்கு அத்தை ஒருத்தி வந்திருப்பதாகச் சொன்னயே, 'அந்த அத்தையின் மகனு ரூபகுமார்?'' என்று தேவகி மெதுவாக ஆரம்பித்தாள்.

''இல்லை. அந்த அத்தைக்கு ஒரு சகோதரி இருந்தாளாம். அவள் மகனும் அவன்...''

'ரூபகுமார் சொன்ன உறவுமுறையை ரமா பொய் என்று சாதித்திருக்கக் கூடாதா? — மெய்தான் என்கிறளே!' வாசு நெடுமூச்செறிந்தான்.

''....அந்த உறவுமுறைக்கு இங்கு யார் ஏங்கித் தவித்தார்கள்?'' ரமா வாக்கியத்தை முடித்தாள். வாசுவின் அந்த நெடுமூச்சு ஆறுதலோடு நீண்டது. தேவகிக்கோ பால் வார்த்தாற்போல் இருந்தது. ரமாவின் மன மகிழ்ச்சியோ உதடுகளில் நெளிந்தது.

* * *

காந்திக்கு அன்று ஏனே ஒன்றிலும் புத்தி செல்லவில்லை. பரீட்சை முடிந்து விட்டது. சகோதரிகள் இருவருமே நன்றாக எழுதியிருந்தனர். நல்ல முடிவு வரும் என்பது திண்ணம். 'மேற்கொண்டு....'

அதற்குத்தான் அவளால் விடை காண முடியவில்லை. இனி ரமாவுக்குக் கவலை யில்லை. பரீட்சை முடியும் நாளைத்தான் அவள் ஆவலுடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள். இதுவரையில் அவள் வாழ்க்கைப் பாதைக்குப் பரீட்சை தடையாக நின்றிருந்தது.

ஆனல் காந்தி மேற்கொண்டு படிக்கலாமே! நல்ல புத்திசாலிப் பெண் என்று ஒருமுகமாக எல்லோராலும் பாராட்டப்பட்டவளாயிற்றே!

தான் பரீட்சை நன்றாக எழுதியிருப்பதை அப்பாவிடம் அவள் சொன்னபொழுது அவரும் ''மேற்கொண்டு படியேன், உனக்குப் பிடித்த கோர்ஸில் சேர்ந்து. பணம் எவ்வளவு வேண்டுமோ சொல்லு. நாளைக்கே செக் எழுதித் தருகிறேன்'' என்றார்.

இதையா கேட்டாள் அவள்? உணர்ச்சியற்ற உள்ளத்துடன் தந்தை இருந்தது போல் அவளால் இருக்க முடியவில்லை. காட்டில் வளர்ந்த கொடி போல்தான் அவள் நாட்டில் வளர்ந்தாள். சீராட்டிப் பாலூட்டிய தாய் இல்லை. சாப்பிட்டாள்; படித்தாள், வளர்ந்தாள். மாம்பழத்துள் தானே கனியும் வண்டைப் போல் இயற்கையின் நியதியில் அவள் வளர்ந்தாள். தானகவே அவள் மனத்தில் வளர்ந்தது பருவகாலச் சின்னம்; காட்டின் கொடி ஒரு மரத்தை ஆரத் தழுவி வாழ்வின் இரகசியத்தை உணர்ந்து குதூகலம் காண்பது போல் அவள் மனத்தோடு வளர்ந்த பருவமும் காண முயன்றது. படிப்புக்கும் வேலைக்கும்தானு வாழ்க்கை?

சகோதரி ரமா கெட்டிக்காரி. தனக்கென்று ஒருவனை, தன்னுடையவனை வரித்து விட்டாள். தந்தையிடமும் கூறிவிட்டாள். அப்படிப்பட்ட உரிமை சிறிய மகளுக்கு மட்டும் இடையாதா? உண்டு.... ஆனல்....

அந்த ஆனல் பதத்தை முற்றுப் புள்ளியோடுதான் அவள் நோக்கும்படி நேர்ந்தது. சாதாரண முறையில் பார்த்தால் அந்தப் பதத்தை எத்தனையோ சொற்கள் பின்பற்றும். பின்பற்றும் அந்தச் சொற்களை நினைத்து நினைத்து அவள் மனம் ஏங்கியது. அத்துடன் இனி இயலாத செயல் என்ற முற்றுப்புள்ளிக்கும் அடிகோலியது.

ஆயினும் காந்தி உள்ளே ஓடினள். பெட்டியைத் திறந்தாள். அடியில் பத்திரமாக வைத்திருந்த புகைப்படத்தை எடுத்தாள். மார்போடு அணைத்துக் கொண்டாள். நெஞ்சோடு படம் அழுங்கி விட்டது போல் நெஞ்சிலிருந்து காற்றில் அழுந்தி இரு எழுத்துக்கள் வெளிவந்தன.

''வா....சு....''

உளறவில்லை அவள். உள்ளத்தோடு பதிந்து விட்ட பரிச்சயமான சொல் தான் அது.

''வா....சு....''

எத்தனை முறை சொன்னலும் அலுக்காது. ஜபமே செய்தாலும் அவள்வரையில் சலிக்காது.

வாசு கல்லூரியில் படித்து வந்த போது பல முறைகள் பேச்சுப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ளத் தன் கல்லூரியின் சார்பில் காந்தியின் கல்லூரிக்கு வந்திருக்கிறான். வெளியிலும் அவன் பேச்சை அவள் கேட்டிருக்கிறாள். அப்போதே அவள் தன் மனத்தை அவனுக்கு அர்ப்பணித்தாள். மனத்தில் தேங்கிய சொற்களை வாய் மூலம் தெரிவிக்கச் சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருந்தாள்.

ரமாவும் காந்தியும் ஒரே வகுப்பில் படித்தாலும் தாங்கள் தேர்ந்தெடுத்த பாடத்தின் பிரிவுக்காகத் தனித் தனி கல்லூரியில் இடம் தேடிக் கொள்ளும் படியாயிற்று.

ஆண் பெண் சேர்ந்து படிக்கும் அரசினர் கல்லூரியில் சேர்ந்திருந்தாள் ரமா. காந்தியோ தன் பிரிவுக்குத் தகுந்தபடி பெண்கள் கல்லூரி ஒன்றில் சேர்ந்தாள். 'வாசு, ரமா படிக்கும் அரசினர் கல்லூரி மாணவன் ஆதலால் அவனை ரமாவுக்குத் தெரிந்திருக்கும். அவனையே தன் காதலுக்குத் தூதாக அமர்த்தலாம்' என்று முடிவு செய்தாள் காந்தி. இதற்காகத் தருணத்தையும் எதிர் நோக்கியிருந்தாள்.

அன்றொரு நாள் ரமா வந்ததும், வராததுமாக, "காந்தி, வெகுநாட்களாகவே உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்றிருந்தேன்!" என்று ஆரம்பித்தாள்.

"என்ன?"

"காந்தி, உனக்கு வாசுவைத் தெரியும் அல்லவா?"

பெயரே இனித்தது காந்திக்கு. தன்னைக் காதலிப்பதாக ஒருவேளை அவரே சொல்லியிருப்பாரோ? — இனிப்புக்கு இனிப்புச் சேர்த்தாற் போன்றதோர் எண்ணம்.

"அவருக்கு என்ன?"

"இன்று மாலை அவர் மெள்ள மெள்ள என் அருகில் வந்தார். எனக்கு அப்போதே அவர் ஏதோ சொல்லத் தவிப்பது புரிந்தது. எனக்கு உடலில் ஒரு புல்லரிப்பு. அவர் என் காதோடு கூறினார்: 'ரமா, நான் உன்னைக் காதலிக்கிறேன்.'... என் மெய் சிலிர்த்தது."

காந்தியால் மேற்கொண்டு கேட்க முடியவில்லை.

"இதற்குத்தானா இவ்வளவு பீடிகை?" அவளையறியாமல் அவள் வாயிலிருந்து வெடித்தன வார்த்தைகள்.

ரமா தலை குனிந்துவிட்டாள். உயர உயரப் பறந்த பட்டம், கயிறு அறுந்து

நீங்கள் சிகரெட் துண்டையோ அல்லது ஏதாவது காகிதத் துண்டையோ தெருவில் எறிந்துவிட்டுச் சென்றால் இந்தியாவில் உங்களுக்கு எந்தத் தண்டனையும் கிடையாது.

ஆனால் இதே மாதிரி நீங்கள் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில்



செய்தால் உங்களுக்கு விதிக்கப்படும் அபராதம் எவ்வளவு தெரியுமா? 1200 ரூபாய்.

இரண்டாம் முறையும் இம்மாதிரி செய்தால் அபராதம் இரண்டு மடங்காகும். — வி. ந. ஸ்ரீதரன்

விழுந்துவிட்டது போன்ற உணர்வில் திக்குமுக்காடிப் போனாள். கண்களைத் துடைத்துக் கொண்டு மெள்ள எழுந்தாள்.

காந்தி சட்டென்று தன் சகோதரியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். "ரமா! இதுதான் பெரிய சங்கதியா? நடந்ததை ஒன்று விடாமல் சொல்வாய் என்றல்லவா எதிர்பார்த்தேன். ஆவலைக் கிளறிவிட்டு இப்படி எழுந்து விட்டாயே!" என்றாள். என்ன அழகாக அவள் தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு பேசினாள்!

ரமாவுக்கு அவள் மீது நம்பிக்கை பிறந்தது. காந்தியைத் தவறாக எண்ணியது தப்பு என்றும் தோன்றியது. அதன் பிறகு அவளால் தன் மனத்தை மறைக்க முடியவில்லை. வாசுவுக்கும் அவளுக்கும் காதல் ஏற்பட்ட விவரத்தைக் கதை கதையாகச் சொன்னாள்.

காந்தி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். திடீரென்று அடித்த 'ஷாக்'குக்குப் பிறகு கைகளை உதறிவிட்டு நிமிர்ந்துவிட நினைத்தாலும் 'ஷாக்' அடித்த உணர்ச்சி இருந்து கொண்டே இருக்கும் அல்லவா?

ரமாவோ அடுக்கிக் கொண்டே போனாள். 'பட்'டென்று அவள் வாயை அடைத்து விட்டு எழுந்து விடலாமா

என்று தோன்றியது காந்திக்கு. ஆனால் அடுத்த கணமே 'உன்னைப் போல் அவளும் ஒரு பெண். வாசு அவள் மீது காதல் கொண்டது அவள் தவறில்லை. கபடின்றி அவள் உன்னிடம் ஒளிவு மறைவின்றிக் கூறுகிறாளே? அது அவளுடைய வெளுத்த இதயத்தைக் குறிக்கவில்லையா?' என்று பெண்மையில் தோய்ந்த கருணை கேட்டது. கடைசியில் வாசு ரமாவிடம் கூறியதையெல்லாம் தன்னிடம் கூறியதுபோலவே அந்த நேரத்துக்கு எடுத்துக் கொண்டாள் காந்தி. ஆயினும் 'வாசுவின் மனம் ரமாவோடு ஐக்கியமாகி விட்டது. இனி அதை வேறு பக்கம் திருப்புவது இயலாத காரியம்' என்பதும் அவளுக்குப் புலனாயிற்று.

எனவே, தந்தையிடம் கூறிவிட ரமாவைத் தூண்டினாள் காந்தி. தந்தையின் சம்மதமும் வாசுவின் தாயின் சம்மதமும் பெற்றுவிட்டால் இருவரும் பயமில்லாது பழகலாம் அல்லவா?

காந்தி இப்படிப் புகலிடம் கொடுக்க ஆரம்பிக்கவே, ரமா அவளை முழு நம்பிக்கையுடன் பற்றிக் கொண்டு விட்டாள். காந்தியும் வாசுவை நேசித்திருக்கலாமோ என்ற எண்ணமே அவளுக்கு எழவில்லை.

காந்தியின் மனத்தில் சகோதரியிடம் பொறாமைக்கான வித்து ஓரொரு முறை முளைத்தாலும் அவள் அப்போதே அதைக் கிள்ளி யெறிய முனைந்தாள். ரமாவின் காதலில் இரு பக்கமும் சம்மதம் உண்டு. ஆனால் அவள் பக்கத் தராசில் ஒரு முனைக்குத்தானே சாய்வு? வாசு அவளை நேசிக்கவில்லை. நேரிடைப் பரிச்சயம் இருந்தால் ஒருகால் அவள் பக்கம் சமநிறை கிடைத்திருக்கலாம். ஆனால் அப்பரிச்சயத்துக்குமுன் பந்தயத்தில் வெற்றி கண்டவளாக ரமா முன்னேறிவிட்டாள். அதனால் வாசுவிடம் ரமா அவளை அறிமுகம் செய்து வைத்தபோதே நெஞ்சில் நிறைந்த கிளர்ச்சியை முகத்தில் காட்டாது அவள் சமாளித்துவிட்டாள். அறிமுகப் படலத்திலேயே சமாளித்தவளுக்கு இனி கஷ்டம் ஏது?

ரமாவுக்காக, தன்னை நம்பகமாகப் பாவிக்கும் சகோதரிக்காகக் காந்தி தன் காதலை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். அவர்கள் இருவர் காதலையும் அவள் அழிக்க முற்படக் கூடாது. யாராவது அழிக்க முற்பட்டாலும் அவள் அதைத் தனக்குச் சாதகமாக எடுக்காமல், தடங்கல்களைக் களைந்தெறியவே முனைய வேண்டும். தன்மீது அபார நம்பிக்கை வைத்துள்ள சகோதரிக்கு அவள் தாய்க்குத் தாயாகவும் சகோதரிக்குச் சகோதரியாகவும் நின்று விருப்பத்தை ஈடேற்ற வேண்டும்.

பிறகு?...

அந்த வார்த்தைக்குத்தான் காந்தியால் பதில் கூற முடியவில்லை. வாசுவைத் தவிர அவள் வேறொருவரைப் பற்றியும் சிந்திக்கத் தயாராக இல்லை. கிட்டாத பொருள்! சொல்லப் போனால் அவனை கிட்டாத பொருளாக ஆக்கிக் கொள்கிறாள். சுபாவத்தில் அவளைவிட ரமா துணிவுக் குறைவானவள். அந்த ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு ரமாவின் வாழ்வை அவள் பாழாக்கி விட முடியும். ஆனால் அவளுக்குத் தெரியும், அப்படிச் செய்வதால் வாசுவைத் தன் பக்கம் திருப்பிவிட முடியாது. ஒருகால் ரமாவாக எதையாவது சாக்கிட்டுத் தன் காதலை உதறித் தள்ளினால் அப்போது வாசு அவளை நேசிக்க ஆரம்பிக்கலாம். ஆயினும் அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்த அவள் விரும்பவில்லை. ரமா அவள் சகோதரி. காந்தியை முழுவதும் நம்புகிறவள். அப்படிப்பட்ட ரமாவுக்கு அவள் துரோகம் செய்ய நினைக்கவில்லை. அதனால்தான் பொன்னம்மா வாசுவைப் பற்றி இளப்பமாகக் கூறியபோதும் ரூபகுமாரைத் தூக்கி வைத்துப் பேசியபோதும் அவள் ரமாவுக்குப் பரிந்து வந்தாள்.

கையிலிருந்த வாசுவின் புகைப் படத்தை அவள் ஒருமுறை நோக்கினாள். அது அவளிடம் இருப்பது கூட ரமாவுக்குத் தெரியாது. வாசு ரமாவிடம் அடிக்கடி தன் புகைப்படங்களை அளித்திருக்கிறான். அவற்றில் ஒன்றைத்தான் காந்தி தன்னிடம் எடுத்து வைத்துக் கொண்டாள். சகோதரியிடம் கூறாமலே தன் மனத்தோடு வாசுவை ஐக்கியமாக்கிக் கொண்டிருப்பது போல் அந்தப் புகைப்படத்தையும் அவளிடம் கூறாமலே தன் பெட்டியில் மறைத்து வைத்துக் கொண்டாள்.

அவள் தலை நிமிர்ந்தபோது எதிரே சற்று எட்ட நின்றபடி ரமா அவளை விஷமச் சிரிப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள்.

காந்திக்கு வியர்த்துக் கொட்டியது. நெஞ்சில் படபடப்பு. கையில் அடங்கும் அளவு சிறிய படமேயானாலும் ரமா பார்த்திருப்பாளோ? படத்தின் பின் பக்கம்தான் அவளுக்குத் தெரிந்திருக்கும். எனினும் யார் படம் என்று அவள் ஊகித்திருப்பாளோ?

''கள்ளி! எத்தனை நாட்களாக இப்படி?'' — ரமா சிரித்தபடி கேட்டுக் கொண்டே அருகில் வந்து விட்டாள்.

(தொடரும்)

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

16

'ஆண்டவன் எனக்கு இதைச் சொன்னான்; அவன் குரல் கேட்டு இதைச் சொல்லுகிறேன்' என்று நான் அடிக்கடி சொல்லி வருவது புது விஷயம் அல்ல. ஆனால் ஆண்டவன் குரலை நான் கேட்டேன் என்று எப்படிப் பிறர்க்கு நிரூபிக்க முடியும்? காரியங்களின் பயனைக் கொண்டு தான் ருஜுப்படுத்த முடியும். சாட்சியம் காட்டித் தன்னை மெய்ப்பிக்க இடந் தந்தால் அதன் பிறகு அவன் பரம்பொருள் என்ற தன்மையை இழந்து விடுவான் அல்லவா?

ஆனபோதிலும் தன்னுடைய உண்மைப் பக்தனுக்கு-'எல்லாம் உனது' என்று முழுப் பாரமும் ஒப்படைத்துவிட்ட அடிமைக்கு எத்தகைய அக்கினிப் பரீட்சையும் வெற்றியுடன் தாண்ட அவன் சக்தி தருவான். மிக்க கண்டிப்பான இந்த யஜமானனுக்கு ஐம்பது ஆண்டுகளாக 'உன் இஷ்டப்படி செய்' என்று எழுதிக் கொடுத்துவிட்ட அடிமை நான். ஆண்டுகள் செல்லச் செல்ல அவனுடைய குரல் மிகத் தெளிவாக என் காதில் ஒலிக்கிறது. என்னை அவன் எப்போதும் கைவிட்டதில்லை. பேரிருள் மூடிய சமயங்களிலும் காப்பாற்றியிருக்கிறான். சில சமயங்களில் என் விருப்பங்களைப் புறக்கணித்தே என்னைப் பிழையினின்று தவிர்த்தருளியிருக்கிறான். எனக்குச் சுதந்திரமே இல்லாமலும் செய்திருக்கிறான். முற்றிலும் ஒப்படைத்துவிட்ட மகிழ்ச்சியை நான் என்னென்று சொல்வது! எந்த அளவுக்கு அவன்பேரில் பாரம் போட்டேனோ அந்த அளவுக்கு என்னுடைய ஆனந்தமும் அதிகரித்து வந்திருக்கிறது. (ஹரிஜன் 6-5-33)

மனிதன் ஒருவனுடன் ஆண்டவன் பேசுவதாவது! அது ஒரு நாளும் இல்லை என்று யாரும் சொல்லமுடியாது. அப்படிச் சொன்னதாக நான் இதுவரையில் அறியவில்லை. இந்த உலகத்தில் யாரேனும் ஒருவனாவது ஈசன் எனக்கு நேரில் ஆணையிட்டான் என்று சொல்லி, அதை மெய்ப்பித்து விட்டால் அது மக்களுக்குப் பெரும் நன்மையாகும். அநேகர் இப்படிச் சொல்லிக் கொள்ளுவார்கள். ஆனால் நிரூபிக்க முடியாது. பலர் பொய்யைச் சொல்லி மோசம் செய்கிறார்களே என்பதற்காக உண்மையில் ஒருவன் — ஆண்டவன் குரலைக் கேட்டவன் – தன் அநுபவத்தை மறைக்க வேண்டிய அவசியமில்லை; கூடாது. வேஷதாரிகள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை நாம் என்ன செய்ய முடியும்? போலிகள் பலர் இருக்கிறார்களே யென்று, உண்மைச் சிலத்தை நாம் விட்டு விட முடியுமா? அந்தராத்மாவின் சொற்படி உலகத்தில் பலர் செய்து வந்திருக்கிறார்கள். அதனால் உலகம் கெட்டுப் போனதில்லை. அது பிழையாயினும் சரி, உண்மையில் ஆண்டவனுடைய குரலாயினும் சரி அதனால் உலகம் அழிவு அடைந்ததில்லை.


அந்தராத்மாவை உண்மையில் உணர்ந்து தெளிவதற்குக் கடினமும் நீடித்ததுமான அப்பியாசங்கள் வேண்டும். அப்படிப் பயிற்சி பெற்றவனுக்கு, இது உண்மையில் அந்தராத்மாவின் குரலா அல்லது போலிக் குரலா என்பது எளிதில் தெரிந்து விடும். மேலும் வேஷதாரிகளை உலகம் சீக்கிரமே கண்டு கொண்டுவிடும். ஆனபடியால் என்னைப் போன்ற ஓர் ஏழை இம்மாதிரிப் பிடிவாத மாய்ச் சொல்லி வருவதனால் தீமை ஒன்றும் விளையாது. உண்மையில் நம்பி, என் அந்தராத்மாவிடமிருந்த செய்தியை நான் விளக்குகிறேன். இதனால் யாரும் ஏமாந்து போய் உலகத்துக்குத் தீமை நேராது.

(ஹரிஜன் 18-3-33)

ஆண்டவன் சொன்னது, மனச்சாட்சி, சத்தியம், அந்தராத்மா, உள்ளம் சொன்னது இவையெல்லாம் எனக்கு ஒன்றேயாகும். நான் வடிவம் எதையும் கண்டதில்லை. காண முயன்றதும் இல்லை. என்னைப் பொறுத்த மட்டில் ஆண்டவன் வடிவமற்றவன். நான் கேட்டது வெகு தூரத்தில் பேசியது போன்ற ஒரு குரல். ஆயினும் மிக அண்மையில் இருந்ததாகவே தோன்றிற்று. ஒரு மனிதன் என்னிடம் பேசினால் எப்படியிருக்குமோ அப்படியே இருந்தது. அதைப் பிரமை என்று சொல்ல முடியாது. குரல் என் காதில் கேட்ட சமயத்தில் நான் தூங்கவுமில்லை, கனவு கண்டு கொண்டிருக்கவும் இல்லை. அந்தக் குரல் கேட்பதற்குமுன் எனக்குள் ஒரு பெருங் குழப்பமாக இருந்தது. திடீரென்று அந்தக் குரல் காதில் பட்டது. கவனித்துக் கேட்டேன். இது உண்மை அந்தராத்மாவின் செய்தியே என்று தீர்மானித்துக் கொண்டேன். உடனே குழப்பம் நின்று விட்டது. உபவாசத்தின் காலமும் தேதியும் மணியும் நிச்சயித்து விட்டேன். நிச்சயித்து விட்டதும் உள்ளத்தில் ஆனந்தம் நிறைந்தது. இது நேற்றிரவு பதினொரு மணிக்கு மேல் நள்ளிரவுக்குமுன் நிகழ்ந்தது. அதன் பேரில் நிம்மதியடைந்து எழுதினேன். அதைத்தான் அனைவரும் அறிவார்கள்.

நான் கேட்டது ஆண்டவன் குரல், என்னுடைய பிடிவாதத்தினால் உண்டான பிரமையல்ல என்பதை நான் இதற்கு மேல் என்ன சொல்லி நிரூபிக்க முடியும்? சந்தேகப்படுகிறவர்களை நான் திருப்தி செய்ய இயலாது. என்னிடம் வேறு சாட்சியம் ஒன்றும் இல்லை. அவர்கள் இது பிரமை என்றே சொல்லிப் போகட்டும். பிரமையாகவும் இருக்கலாம். ஆனாலும் உலகம் முழுவதும் ஒன்று சேர்ந்து பிரமை என்றாலும் ஆண்டவன் குரலே என்று நான் நம்புவதை மாற்ற இயலாது.

(ஹரிஜன் 8.7-33)


தாக்கர்ஸேயின்
எவர்:ப்ரெஷ்
67% 'டெரீன்' 33% காட்டன்
தி இந்துஸ்தான் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
தி இந்தியன் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
16, அப்பாலோ ஸ்ட்ரீட், பம்பாய்-1.



சாருலதா

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 22

இன்னும் ஒரு கதை

பங்களா வாசலில் விசாலமான தோட்டம். அதில் பணியாற்றிய ஒரு பட்டாளத்தின் தலைவன் கண்ணாயிரம், உண்மையாகவே அத்தனை கண்களுடையவன் போல் அவற்றுக்குரிய அத்தனை கருத்துடன் கவனித்துக் கொண்டான் தோட்டத்தை. பசேலென்று புல்வெளி. அதில் உடலை உறுத்தும் ஒரு கோரைப் புல் இடையாது: இலையுடன் கூடிய ஒரு பூண்டு இருக்காது. 'லான் மூவர்' அடிக்கடி புல்லை வெட்டிக் கொண்டே இருந்ததால் பச்சை நிறத்தில் வெல்வெட் கம்பளம் விரித்தாற் போலிருந்தது.

அதில் உதிர்ந்திருந்த சரக்கொன்றை மலர்கள் பசுமையை எடுத்துக் காட்டுவது எனது மஞ்சள் நிறம்தான் என்று மார் தட்டுவதுபோல் திகழ்ந்தன. நிழல் தரும் வேறு ஓரிரு மரங்கள் தவிர, கண்ணுக்கு இனிமையாக ஃளாக்ஸ், ஸ்னுப் டிராகன், ஜீனியா முதலானவையும்; முகர்வதற்கு இனிமையாக மனோரஞ்சிதம், துளசி, நைட் குவின் முதலியனவும்; பூஜைக்கு உகந்ததாகச் செம்பருத்தி காசித் தும்பை முதலியனவும்; தலையில் சூடுவதற்கு ஏற்றதாக முல்லை, மல்லி போன்றவையும்அங்கே ஏராளமாகப்பூத்துக் குலுங்கின. கொடி வீடுகள், செயற்கைச் சுனைகள் ஆகியவையும் இருந்தன.

அவற்றின் அழகை வியப்பதா, அல்லது தோட்டத்தை இன்ன விதமாக அமைத்து எந்தெந்த இடத்தில் என்னென்ன செடிகள் பயிரிடப்பட வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுத்த தோட்டக் கலை நிபுணரைப் பாராட்டுவதா அல்லது அந்த யோசனைகளை ஏற்று இம்மியும் பிசகாமல் நிறைவேற்றி வைத்த தோட்டக்காரர்களைப் போற்றுவதா என்று புரியாமல் பிரமிக்க வைக்கும் சூழ்நிலை.

புல்தரையில் போடப்பட்டிருந்த நாலு கூடை நாற்காலிகளுள் ஒன்றில் அமர்ந்திருந்தாள் சாருலதா. புல் தரையில் புழு பூச்சிகளைத் தேடித் தத்தித் தத்திச் சென்ற இரு ஹூப்பூ பறவைகள் நீண்ட அலகினால் அடிக்கடி கொத்திய போது அவற்றின் கொண்டைகள் முன்னும் பின்னுமாய்ச் சென்று வந்த காட்சி இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் அத்தனை அழகாய் இருந்தது. வேணுகோபாலின் கார் காம்பவுண்டுக்குள் நுழைந்து தோட்டத்தினூடே வளைந்து வந்த பாதையில் முன்னேறியபோது கொண்டையாட்டிகள் இரண்டும் ஜிவ்வென்று பறந்து சென்று விட்டன.


''ஏது, சாருலதாவுக்குக் கூட மலர்களையும் பட்சிகளையும் பார்த்து ரசிக்கலாம் என்று தோன்றியிருக்கிறதே! அதிசயம்தான்!'' என்றான் வேணுகோபால். கையில் எடுத்து வந்த தோல் பையைப் புல் தரையில் வைத்துவிட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

''வேறு வழி? என்னைத்தான் நீங்கள் கூண்டில் அடைத்து விட்டீர்களே? சுதந்திரமாய்த் திரியும் பறவைகளைப் பார்த்துப் பொருமையுடன் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''அது சரி, உன் அழகைப் பார்த்து இங்குள்ள மலர்ச் செடிகளுக்கிடையில் மறைந்து வாழும் வனதேவதைகள் பெருமூச்சு விடுகின்றனவே, கேட்கவில்லையா உனக்கு?''

''ஐயோ, போதுமே'' என்றாள் சாருலதா. மகிழ்ச்சியை மறைக்க முயன்று தோல்வி கண்ட தந்த வர்ண முகத்தில் சிவப்பேறியது.

உண்மையிலேயே அவள் வன தேவதைகளும் வணங்கக்கூடிய பேரெழிலுடன்தான் விளங்கினாள். இரண்டு நாட்கள் பூரணமாய் ஓய்வு எடுத்துக் கொண்டதால் அவள் மேனி மெருகேறித் தளதளத்துக் கொண்டிருந்தது. கருமை



யான கேசம் சூழ்ந்திருக்க அவள் முகம் நள்ளிரவு நிலாப் போல் தோன்றியது என்றால் அழுத்தமான வயலெட் வர்ணப் புடவையை அவள் அணிந்திருந்த பாணி காரணமாகக் கரிய மேகக் குவியல்களிடையே மின்னல் பளிச்சிடுவது போல் அவளுடைய இடை தெற்றெனத் தெரிந்தது. பசும் புல் தரையில் அவள் பாதங்களோ இடைவெளியின்றி இலைகள் சூழ்ந்திருக்கப் புதிதாய்ப் பூத்த இரு அல்லி மலர்களாகக் கண்களைப் பறித்தன. மலைச் சரிவில் அருவி விழும் தொலை தூரக் காட்சியை அவள் மடியில் தவழ்ந்த ஒரு வெண்மையான கரம் நினைவூட்டியது.

''ஏன் சாரு, இந்தத் தோட்டத்தில் தேனீக்களை வளர்க்கலாமே, நீ? இத்தனை மலர்கள் இங்கே பூத்துக் குலுங்கும் போது முதல்தரமான தேன் கிடைக்குமே!''

''தேனை என்ன செய்வது? குருவுக்குக் கல்யாணமாகி நாலு குழந்தைகள் பிறந்தாலாவது ஒன்று மாற்றி ஒன்று ஜுரமாகப் படுத்துக் கொள்ளும்; மாத்திரை பொடி பண்ணித் தேனில் குழைத்துக் கொடுக்கலாம்!''

''தேன், மருந்து சாப்பிட மட்டும் தான் பயன்படும் என்று நினைக்கிறாயா?''


''உடம்பு இளைக்கத் தண்ணீரில் தேன் கலந்து சாப்பிடலாம் என்பார்கள். அந்தக் கவலை எனக்குக் கிடையாது.''


''சாரு, நாளைக்கு நான் வரும்போது நல்ல தேனாக வாங்கி வருகிறேன். முத்துவை இப்போதே கூப்பிட்டுத் தோசைக்குப் போடச் சொல்லு. அரை முறுகலாகத் தோசை வார்த்து அதற்குத் தேனைத் தொட்டுக் கொண்டு சாப்பிட்டால் எப்படி இருக்கும் தெரியுமா?'' வேணு நாவினால் 'டப் டப்' என்று சத்தப்படுத்தினான்.

சாரு கலகலவென்று சிரித்தாள். ''உங்கள் அம்மா உங்களை எப்படி வளர்த்திருக்கிறாளோ தெரியாது; ஆனால் உங்கள் நாக்கை ரொம்ப நன்றாக வளர்த்திருக்கிறாள்!''

''அதில் என்ன தவறு சாரு? வாழ்க்கை இன்ப மயமாவதும் நரகமாவதும் ஒருவனுக்குக் கலை உணர்வு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பொறுத்ததுதான். கலை உணர்வு என்றால் உடனே வீணையை மீட்ட வேண்டும் என்றோ அல்லது நாடகமாட வேண்டும் என்றோ அர்த்தமில்லை. தோட்டத்து மலர்களை ரசிப்பதும் தோசையையும், தேனையும் சுவைப்பதும் கூட கலை உணர்வுகளில் சேர்ந்தவைதாம்.''

''நல்ல டாக்டர் நீங்கள்! பேஷண்டைக் கவனிக்காமல் நாளைய டிபனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்!''





''பேஷண்டா? யாருக்கு என்ன உடம்பு இங்கே? உன் அப்பா ஏதாவது தலையைக் காலை வலிக்கிறது என்று தெரியப்படுத்தினரா என்ன?''

''நீங்கள் ரொம்பப் பொல்லாதவர். நான் உங்களுடன் பேசப்போவதில்லை.''

''அடாடா! அப்படிச் சொல்லாதே சாரு! நீ பேச வேண்டும்; நிறைய வாய் ஓயாமல் பேச வேண்டும் என்பதற்காகத்தானே பத்து நாட்களுக்கு ஆபீஸ் விவகாரங்களைக் கவனிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டு நானும் பேச்சுத் துணைக்கு அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறேன்?''

''பேசிப் பேசிப் பொழுதைக் கழிக்க....''

''நேரம் இருக்கிறது! எட்டு நாட்கள் பாக்கி இருக்கின்றன.'' — இடைவெட்டு வெட்டினன் வேணுகோபால்.

''ஐயோ, இன்னும் எட்டு நாட்களா?''

''சுருசுருப்பாகவே இயங்கிப் பழகியவர்களுக்கு ஓய்வெடுப்பதென்றுலே கஷ்டமாகத்தான் இருக்கும். பத்துநாட்கள் ரெஸ்ட் என்பதுதானே என் பிரிஸ்கிரிப்ஷன்.''

''இரண்டு நாட்களிலேயே மருந்து கசந்து விட்டது.''

''கசப்புத் தெரியாமல் இருப்பதற்காகத்தான் மனம் விட்டுப் பேச என்கிறேன்.''

''என்னத்தைப் பேச?''

''எதை வேணுமானுலும் பேச. கற்

காலம் முதல், தற்காலம் வரை, அமெரிக்கா முதல் அந்தமான் வரை, அகில உலகம் முதல் அண்ட சராசரம்வரை பேசுவதற்கு விஷயங்களா இல்லை? உன் ஆபீஸ் விஷயமாக மட்டும் பேசாதே, யோசிக்காதே!''

''யோசித்தால் என்ன?''


''உன் உடலுக்கு மட்டுமில்லை, அறிவுக்கும் உள்ளத்துக்கும் கூட இந்தப் பத்து நாட்கள் ஓய்வு அவசியத் தேவை சாரு. என் சொற்படி நீ நடக்காமல் போனால் அப்புறம் என்ன நேருமோ? அவற்றுக்கு நான் பொறுப்பாளி இல்லை. வேறு டாக்டர்களை வேணுமானாலும் அழைத்து அபிப்பிராயம் கேள்; இதையேதான் சொல்வார்கள்.''


''வேணு, எனக்கென்ன உடம்பு? உண்மையைச் சொல்லுங்கள்!''

''தாராளமாய்ச் சொல்கிறேன். உன்னிடம் என்ன கோளாறு தெரியுமா? உனக்கு அன்பு தேவையில்லை — அன்பு செலுத்துவது போல் யாராவது காட்டிக்கொண்டிருந்தால் போதும்; உனக்கு அனுதாபம் வேண்டாம் — அனுதாபப்படுவது போல் யாராவது நடித்துக் கொண்டிருந்தால் போதும்; உனக்குக் காதல் தேவையில்லை — உன்னைக் காதலிப்பதாக நான் சொல்லிக் கொண்டிருக்கிறேனே அதிலேயே நீ திருப்தியடைந்து விடுகிறாய்; உனக்குத் தொழில் வர்த்தகத் துறையில் உண்மையான வெற்றி பற்றிய அக்கறை இல்லை — நீ வெற்றி பெற்று விட்டதாக உன்னைச் சூழ்ந்து நாலு பேர் சதா சொல்லிக் கொண்டே இருக்கிறார்களே அதிலேயே நீ மயங்கி விடுகிறாய். உண்மையான அன்பு, முழுமையான அனுதாபம், தூய்மையான காதல், நியாயமான வெற்றி இவை என்ன என்பதைப் புரிந்துகொள்ளாததுதான் உனக்குள்ள வியாதி.''

''இருக்கிற நோயைச் சரியாகக் கண்டுபிடிக்காமல் இல்லாத நோய்க்கு மருந்து கொடுக்கிற டாக்டர்களும் உண்டு!''

''நான் அப்படிச் செய்யவில்லை, சாரு! உன் மனத்தை எக்ஸ்ரே எடுத்தாகி விட்டது. அதில் நான் காண்பதை உனக்கும் விளக்குகிறேன். தொழில் வர்த்தகத் துறையில் நீ மாபெரும் வெற்றிகளை அடைந்து விட்டதாக எல்லாரும் சொல்கிறார்கள். நீயும் அதைக் கேட்டு நம்பிப் பெருமிதம் அடைகிறாய். ஆனால் உண்மையில் நீ அடைந்தது வெற்றியா? ஓட்டப் பந்தயத்தில் ஈடுபடப் போகிற ஒருவன், மறு நாள் தன்னுடன் போட்டி போடவிருக்கிற ஒரு சாம்பியனின் காலை முதல் நாள் இரவோடு இரவாக யாரு





டிரினிடாட் நாட்டில் இம் மாதம் காந்தி நினைவுத் தபால் தலைகள் இரண்டை வெளியிடப் போகிறார்கள். அவற்றில் ஒன்று காந்தி உருவம் கொண்டதாயும், மற்றொன்று ''ஹே ராம்'' என்ற சொற்களை மட்டும் கொண்டதாயுமிருக்குமாம்!

ஆதாரம்: டாக்டர்.
தகவல்: சுதாகரன்.

மறியாதவாறு முறித்துவிட்டு வந்து விடுகிறான். அவன் அடையும் வெற்றியை விஷயம் அறிந்தவன் ஒப்புக் கொள்ள முடியுமா?''

சாருலதா பதில் கூறத் தெரியாமல் தலை குனிந்தாள்.

''உனக்கு உடம்பு சரியில்லை என்றதும் தினம் நாற்பதுபேர் டெலிபோனில் கூப்பிட்டு விசாரிக்கிறார்கள். அந்த அனுதாப வார்த்தைகளில் நீ திருப்தி அடைந்து விடுகிறாய். ஆனால் அவர்களில் மனம் விட்டுப் பேசியவர்கள் எத்தனை பேர்?''

''இங்கே ஃபோனில் விசாரித்த அதே ஆசாமி எஸீட் கிளப்பில் வேறுவிதமாக வம்பு பேசுவான். 'சாருவுக்கு ஹிஸ்டீரியா சுவாமி! இன்று நிலைமை ரொம்ப மோசமாகி விட்டது. ஒரேயடியாகப் பிதற்றிக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் யாருமே அவளை வந்து பார்க்கக் கூடாது என்று தடை விதிக்கிறார்கள்' என்பான். வேணு என்னை இப்படி நீங்கள் சிறைப்படுத்தி வைப்பது எவ்வளவு ஆபத்து பார்த்தீர்களா?''

''பத்து நாட்களுக்குத்தான் போலியான வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்று வாழச் சொல்கிறேன். அதுகூட உன்னால் முடியவில்லை. மறுபடியும் அசத்தியத்தில் உழலப் போக அவசரப்படுகிறாய்.''

''சத்தியம் இன்று எங்கே இருக்கிறது? அது காந்தியோடு சேர்ந்து தன் பிராணனையும் விட்டு விட்டது!''

''இல்லை, இல்லவே இல்லை! நீ சுலபமாகச் சத்தியத்தைக் காண முடியும் சாரு. வேண்டுமென்றே கண்களை மூடிக் கொள்ளாமல் இருந்தால் எனக்கு உன்னிடம் உள்ள காதலில் சத்தியத்தை நீ பார்க்கலாம்!''

''வேணு! காதலித்துக் கல்யாணம் செய்து கொள்கிற வயதில்லை எனக்கு.''

''உன் வயதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எத்தனையோ கல்யாணங்களுக்குப் போய் மணப் பெண்

களை ஆசிர்வதித்து விட்டு வந்திருக்கிறேன். அவர்கள் அனைவரையும்விட நீ இளமையாகத்தான் என் கண்களுக்குத் தோன்றுகிறாய்.''

''அதற்குக்காரணம் என் மேக்-அப்!''

''நான் உன்னைத்தான் காதலிக்கிறேன், சாரு! நீ பூசிக் கொள்கிற பௌடரையோ அல்லது உடுத்திக் கொள்கிற புடவையையோ அல்ல. இதயபூர்வமாக உன்னைக் காதலித்தும் உன்னை அடைய முடியாமலிருப்பதால் நான் அநுபவிக்கும் வேதனை கொஞ்ச நஞ்சமா? அதை நீ ஏன் உணர மாட்டேனென்கிறாய்? அத்தனை இரக்கமற்றவளா நீ?''

சாருலதாவின் கண்கள் கலங்கிவிட்டன; அதரங்கள் இலேசாகத் துடித்தன.

அவள் மனம் இளகி நெகிழ்வதைக் கண்ட வேணுகோபால் அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியை மறைத்துக்கொண்டு மேலும் பேசினான்:

''அருகிலேயே இருந்தும் மிகத் தொலைவில் போய் விட்டது போன்ற இந்த நிலை என்னை எப்படி வருத்தி எடுக்கிறது தெரியுமா? பட்டினி கிடந்து பரிதவிப்பவன் எதிரே அருமையான விருந்து படைத்து விட்டுப் பிறகு அவன் கைகளையும் கால்களையும் கட்டிப் போடுவது போல்! இது கொடுமை, சாரு! சித்திரவதை!''

''வேணு! நீங்கள் உங்கள் வேதனையைச் சொல்கிறீர்கள்! உங்கள் காதலை ஏற்க இயலாத நிலையில் இருப்பதால் நான் அடைந்து வரும் மனத் துயரம் உங்களுடைய எக்ஸ்ரே கண்களுக்கு ஏன் தெரியாமல் போயிற்று?'' சாருலதாவின் நாத் தழுதழுத்தது.

''ஏன் அப்படி ஒரு கஷ்டத்தை நீ சுமக்க வேண்டும் சாரு? எதற்காக என் காதலைப் புறக்கணிக்க வேண்டும்? ஓ! அன்றைக்கு ஒரு கதை — சிறு வயதில் உனக்கு நேர்ந்த ஓர் அநுபவத்தைச் சொன்னாயே, அதனாலா?''

''அது ஒரு கதை. அதைப் போல் இன்னும் பல கதைகள்!''

''எனக்குக் கதை கேட்பதென்றால் ரொம்பப் பிடிக்கும் சாரு.'' ஆர்வத்துடன் முன்னுக்குச் சாய்ந்தான் வேணுகோபால்.

* * *

தடதடவென்று ஓர் ஓசை.

''கோமனி!'' வேதனை நிரம்பிய ஒரு குரல் அலறுகிறது.

முற்றத்தில், ''நாலோண் நாலு: நாலு ரெண்டெட்டு'' என்று உருப் போட்டுக் கொண்டிருக்கும் சிறுமி கோமளா வாய்ப்பாடு புத்தகத்தைப் பறக்க விட்டு விட்டு, விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறாள். உக்கிராண அறையில் ஏணி சரிந்துவிடத் தரையில் கோமளியின் தாயார் அபயம் கோணல் மாணலாக விழுந்து கிடக்கிறாள். பரண் மேல் எதையோ எடுக்கப் போனவள் ஏணி வழுக்கிச் சரிய விழுந்து விட்டாள் என்பது கோமளாவுக்குப் புரிகிறது. புரண்டு கொடுத்து வசதியாகவும் படுக்க முடியாமல் எட்டு மாதக் கர்ப்பத்தில் கனத்திருந்த வயிறு தடை செய்கிறது. இடுப்பில் ஏற்படும் குடைந்தெடுக்கும் வலி காரணமாக அபயத்தின் முகம் விகாரமாக மாறி இருக்கிறது. அடி உதட்டை அவள் மேல் வரிசைப் பற்களால் அழுத்திக் கடிக்க வாயோரமாக ரத்தம் குபுகுபு வென்று பெருகி வருகிறது. ''ஐயோ! செத்தேன்!'' என்று வீறிட்டு அலறுகிறாள் அபயம்.

இந்தக் களேபரத்தினிடையில் வாசல் அறையில் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தை குமரேசன் அரைத் தூக்கத்தில் விழித்துக் கொண்டு அழுகிறான். மழலையாகக் கூடப் பேசத் தெரியாத வயது அவனுக்கு.

கோமளா தம்பியைச் சமாதானப் படுத்துவதா, அம்மாவைக் கவனிப்பதா என்று ஒருகணம் தயங்குகிறாள். அம்மாவுக்கு உதவுவதுதான் முக்கியம் என்ற முடிவுக்கு வந்து, ''என்னம்மா செய்கிறது?'' என்று தட்டுத் தடுமாறிக் கேட்கிறாள். ஏழரை வயதுப் பெண் கோமளா, பயந்து போயிருப்பதை வெளிறிய முகமும் நடுங்கும் உடலும் தெளிவுபடுத்துகின்றன.

''சனியனே! ஏண்டி தூணாட்டம் நிற்கிறே? ஓடு! வாலம் மாமியை வரச் சொல்லு சீக்கிரம்!.... ஐயோ, ஆ! அம்மா ஆ ஆ!''

நாலாம் நெம்பர் வீட்டுக்குத் தலை தெறிக்க ஓடுகிறாள் கோமளா. அமைதியே உருவான அம்மா இன்று ஏன் அலறித் துடிக்கிறாள்? அன்பே வடிவானவள் தன்னை ஏன் வைகிறாள்? கோமளாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அழுகை பொத்துக் கொண்டு வருகிறது.

வாலாம்பாள் மருத்துவச்சி என்று பெயர் பெற்றவள். பிரசவம் பார்த்துப் பழக்கப்பட்டவள். கோமளாவும் குமரேசனும்கூடப் பிறந்ததும் முதல் அடியை அவளிடம் வாங்கிக் கொண்டு அழுது மூச்சுவிடத் தொடங்கியவர்கள் தாம். இப்போது அபயத்தை அவள் பார்த்த கணமே அபாயத்தைப் புரிந்து கொண்டு விடுகிறாள். 'இது தன்னால் ஆகக்கூடிய காரியமில்லை!'

''கோமனி, ஓடு! உன் அப்பாவுக்கு ஃபோன் போட்டு அம்மாவுக்கு ரொம்ப

உடம்பு சரியில்லை; உடனே வான்னு சொல்லு. போ !''

வாலம் அவளை விரட்டுகிறாள்.

திக்பிரமை பிடித்து நிற்கிறாள் கோமளா.

''ஏண்டி, ஆணி அறைஞ்சாப்போல் நிற்கிறே? போயேண்டி! நீயே எனக்கு எமனா வாய்க்கறுவே போலிருக்கே !'' வேதனை தாங்காமல் மகளை வைது துரத்துகிறாள் அபயம்.

இரைக்க இரைக்கப் பக்கத்துத் தெரு பங்கஜம் மாமி வீட்டுக்கு ஓடு கிறாள் கோமளா. ''ஆண்டவனே ! அம்மாவுக்கு நான் எமனாகப்படாது ! சுவாமி அம்மாவைக் காப்பாத்து !''

பங்கஜம் மாமியின் கார் கேட் டைத் தாண்டித் தெரு ஓரமாய் நின்று கொண்டிருக்கிறது. வாசல் கதவைப் பூட்டியாகி விட்டது. கேட்டிலும் சங்கிலியைச் சுற்றிப் பூட்டிக் கொண் டிருக்கிறாள் பங்கஜம். வீட்டுக்காரர் ஐந்தரைக்கு வீடு திரும்புவார். குழந் தைகள் நாலரை மணிக்குப் பள்ளிக் கூடத்திலிருந்து விடுதலை பெறுவர். அது வரையில் மாதர் சங்கத்தில் அவள் கவனிக்கக் காத்திருந்த விஷயங்கள் பலப்பல.

மூச்சு வாங்க வந்து நின்ற கோமளா, ''மாமி, மாமி, ஒரு ஃபோன்'' என் கிறாள்.

''போடி! நேரம் போது தெரியாமே இதுவே ஜோலியாய்ப் போச்சு, உங்க ளுக்கு !'' அவள் காரில் ஏறிக் கதவைச் சாத்திக் கொண்டு விடுகிறாள். தனக்குக் கார் ஓட்டத் தெரியும் என்பதிலேயே அவளுக்கு ரொம்பப் பெருமை. கண வரையும் குழந்தைகளையும் ஆபீஸிலும் பள்ளிக்கூடத்திலும் 'டிராப்' பண்ணி விட்டுக் காரை எடுத்துக் கொண்டு வந்து விடுவாள். மத்தியானம் லேடீஸ் கிளப்புக்குப் போகக் கார் வேணுமே !

''இல்லே, மாமி! அம்மாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லே; அப்பா வுக்கு ஃபோன் பண்ணணும்.''

பங்கஜம் மாமியின் பங்களாவுக்கு அபயம் அடிக்கடி வருவதுண்டு. அப்ப ளம் இடுவது; தோசைக்கு அரைப்பது, ஊறுகாய் போடுவது என்று இப்படிப் பட்ட சிரமமான காரியங்களைப் பங்கஜம் மாமி செய்ய மாட்டாள். அவற்றை அபயம் செய்து கொடுத்து எட்டணா, நாலணா என்று சம்பாதிப்பாள். அவர்கள் குடும்பத்தின் நலிவான வருவாயுடன் இந்தச் சம்பாத்தியமும் தேவையாகத்தான் இருந்தது.

''அபயத்துக்கு என்னடி உடம்பு இப்போ? நேற்றைக்குக்கூடக் கல்லாட்ட மாத்தானே இருந்தா ?''

நாற்பது வய தானவர்கள் சந்திரனுக்கே சென்று வந்து விட்டார்கள். ஆனால் சில வேலைகளுக்கு அப்ளிகேஷன் கேட்கும் விளம்பரங் களில் ''வயது முப்பதுக்கு மேல் இருக்கக் கூடாது'' என்று சொல்லுகிறார்களே - இது ஏன்?



: விக்கெண்ட். —மூர்த்தி

''ஒரேயடியா வலிக்கிறதாம் மாமி!'' என்கிறாள் சிறுமி கோமளா கண்களைக் கசக்கியபடியே.

''போடி! எவுக்குக் கணக்குத் தெரி யாதா ? பிரசவத்துக்கு இன்னும் ஒரு மாசத்துக்கு மேல் டைம் இருக்கே ! இடுப்பிலே அரிச்சாக்கூட வலி ,எடுத் துடுத்துன்னு கத்தி ஊரைக் கூட்டிவிடு வாள் உன் அம்மா. அது பிரசவ வலி இல்லே; 'ஃபால்ஸ் பெய்ன்'ஸ"ன்னு அதுக்குப் பேரு. அம்மாகிட்டே நான் சொன்னேன்னு சொல்லு !'' மண வாழ்க்கை, பிரசவம், குழந்தை வளர்ப்பு இவற்றைப் பற்றி யெல்லாம் ஆங்கில நூல்களை நிறையப் படித்த வள் பங்கஜம் மாமி. அவளது இடது கால் கிளச்சை விடுகிறது: வலது கால் ஆக்ஸிலேட்டரை அழுத்துகிறது. கார் நகர்கிறது, விரைகிறது, மறைகிறது.

''மாமி! சித்தே கேளுங்கோ மாமி! அம்மா கீழே விழுந்துட்டா, அடி பட்டுடுத்து !'' என்று கோமளா கத்து கிறாள். காரின் உறுமல் ஒலியில் அது ஒன்றும் மாமி காதில் ஏறவில்லை. அல் லது ஒரு வேலை கேட்டும் கேளாதது போல்தான் போகிறாளோ ? காரை விட்டுக் கீழே இறங்கி, கேட்டைத் திறந்து, வாசல் கதவுகளைத் திறந்து, மறுபடியும் அவற்றையெல்லாம் பூட்டி.... வேண்டாத அவஸ்தை !

கோமளா தெருவில் ஓடுகிறாள். கண் ணில் தென்பட்டவர்களை யெல்லாம் நிறுத்தி, ''மாமா, உதவி பண் ணுங்கோ, மாமா!'' என்று சொல்லி அழுகிறாள். அவளை யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவேயில்லை. ஒருவர் அரையணா கொடுக்கிறார். மற்றொருவர், ''சீ போ! மேலே விழுந்து ஏன் பிடுங் குறே ?'' என்கிறார். மூன்றாவதாக ஒருவர், ''சில்லறை இல்லை'' என்று கூறி விட்டுப் பரபரவென்று நடையைக் கட்டுகிறார்.

(தொடரும்)

சுமை தாங்காமல்..

"மஹி"



சுமை! சுமை!! சுமை!!!

அப்பா! நெஞ்சில் நிறைந்து வழிந்து வழிந்த கவலைகளின் சுமை. அரக்கு உருக்கிக் கொட்டியது போலச் சூடிட்ட கவலைகளின் கொத்தாக; பெருமூச்சு, பெருமூச்சு என்று விம்மி வெடித்து நெஞ்சின் எலும்புகள் வலிக்கும் படியாகச் சுமையேறிவிட்ட மனம். இன்னும் கொஞ்சம் சேர்ந்தால் 'மளக்'கென்று முறிந்து விழுந்து விடும்போல, முறுக்கம் போதத்தின் இளையாக மனம் கனத்தது. ம்!... இதற்கும் பெருமூச்சுதான். இந்தப் பெருமூச்சு எப்போதுதான் தீருமோ?

''ஏண்டி! கமலி! தூங்கிட்டியா?...'' என்று ஒலி எங்கிருந்தோ கேட்கிறது. சுற்றிலும் இருள். இந்த மாதிரி இருள்... அப்பா!.. நான் என்றுமே பார்த்ததில்லை. இருளிலே இருளைப் போட்டுப் பிசைந்து அப்பிறைப்போல் ஒட்டிக் கொண்டுவிடும் இருட்டு. மாவாய் அரைத்து, மையாய்க் குழைத்துத் தடவிக் கொண்டு..., கறுப்பாக... கூர்ந்து கூர்ந்து பார்த்ததில் கண்ணைத்தான் வலித்தது. பார்ப்பதற்கு என்ன தெரிகிறது?

'ஜிவ் ஜிவ்' என்று சுவர்க் கோழிகள் சுருதி சுத்தமாக முழங்கிக் கொண்டிருந்தன. அது தான் இருளின் சுருதியோ?

''இருட்டின அப்புறம் வெளியே எங்கேடி போறே? உனக்கு உடம்பிலே கொஞ்சமாவது இது...இருக்கா?'' என்ற அம்மாவின் கடுப்புச் சுவர் என்னை இருள் பார்க்காமல் இருக்க வைத்து விட்டிருந்தது. அந்தப் பழக்கம், அப்படி அப்படியே வந்து விட்டது. இன்றைக்கு இருட்டைப் பார்க்கப் புதுசுபோல் இருக்கிறது.

ஏதோ ஓர் இராப் பட்சி மேல் பஞ்சமத்தில் ஒரு கார்வை கொடுத்தது. வயிற்றை ஒரு கலக்குக் கலக்கத்தான் செய்தது. இந்தச் சத்தத்துக்குப் பயந்தால் முடியுமா? நடக்கிறேன், நடக்கிறேன். வழக்கமான வழி இத்தனை நீளமா? தினமும் அதிகாலையில் காவேரி ஸ்நானத்துக்குப் போகிற வழிதானே? வைத்த அடியின் சத்தம் அடுத்த அடியிலே எதிரொலி ஆகி, அதற்கு அக்ஷரங்களாக இருதயம் விரல் அசைத்துப் படபடக்க நடக்கிறேன். என்னுடைய நடைக்கு என்றுமே முடிவு கிடையாது. நடந்து நடந்தே வாழ்வை நடத்தி வந்திருக்கிறேன்.

''வாத்தியார் பொண்ணு கமலி வந்திருக்காம்மா... பாவம்! இத்தனை தூரம் நடந்து வந்திருக்கா!'' என்று அங்கலாய்க்கும் அந்தப் பங்களா மாமி அளந்த படி. அடுத்த நாள் வயிற்றை நிரப்பும். இழிந்த மேலாக்கு உடம்பை மூடவே கஷ்டப்படும்போது குடும்ப மானத்தை முன்றானையாலே மூடிக் காப்பாற்றக் கடன் பொருளைக் கக்கத்தில் இடுக்கி அதற்கும் மேலாக்குப் போர்வை போர்த்தி வரவேணும். வருகிற வழியிலே எத்தனை கழுகுக் கண்கள் பார்க்கும்? சும்மாவா பார்க்கும்? உடம்புக்குள்ளேயே புகுந்து மானமெல்லாம் ரெத்தமாகக் கரைந்து ஓடுகிறவரைக் கும் பார்க்கும். பாழும் கடவுள் பசிக்கு உணவு போடாத அரைப் பட்டினி உடம்புக்கும் வஞ்சனை இல்லாமல் வாளிப்பம் வழங்கிவிடுகிறான். ஏன் வயது ஆகிறது? ஏன் நாளுக்கு நாள் உடம்பு வளருகிறது? என்ற தவிப்பு ஈரத் துணியாகக் கிடந்து நெஞ்சில் கனக்கும்.


பாவம், அப்பா! ஏதோ சம்பாதித்தார்; பள்ளிக்கூட வாத்தியார். மூத்த பெண்ணுக்கு ஆமாம். எங்க அக்கா கல்யாணம் பண்ணிக் கையைப் பிடிக்கக் கொடுத்த பிறகு கடன் சுமையைத் தூக்க முடியாமல் தூக்கிச் சுமந்தார். தலைச் சுமைக்கு வழி நெடுகச் சுமைதாங்கி கட்டி வைத்திருக்கிறார்கள் தர்மவான்கள். கடன் சுமைக்கு என்று எந்தத் தர்மவான் சுமைதாங்கி கட்டி வைத்திருக்கிறான்?

கடன் சுமையைச் சுமக்கமுடியாமல் 'தொபுகடீர்' என்று கீழே போட்டுவிட அப்பா நினைத்தாலும்கூடக் கடன் கொடுத்தவன் எல்லாம் கீழே விழாமல்

பிடித்துத் தூக்கித் தலைமேலே வைக்கிறமாதிரி ஒவ்வொரு மாதம் ஒண்ணாந் தேதி வருவது தப்பினாலும் தவறாமல் பள்ளிக்கூட வாசலுக்கே வந்து சம்பளத்தைக் கைமாத்திக் கொண்டு போன பிறகு வெறுங் கையுடன் வீடு திரும்பும் அப்பா! சுமையையா தூக்குகிறார்? ஐம்பது வயதிலே ஆயிரம் வருஷத்துக் கிழட்டுத்தனத்தைத் தூக்கிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி விழப் போகிறவர் மாதிரி வருவார். அடுத்த போது போல தந்தே டியூஷன் விட்டிலே அட்வான்ஸ் கேட்டு நிக்கிற கஷ்டம். அவர்கள் டியூஷன் ஏற்பாடு செய்து தந்ததே பார்க்கச் சகிக்காத பாவத்துக்காக. அதுவும் அட்வான்ஸ் கேட்டால்... பாவம்... நெஞ்சத்துச் சுமையை

தேச்சுத் தேச்சு என்னத்தேடி கண்டே?'' அம்மா இப்படிச் சொன்னாலும் கூடக் கேட்காமல் அந்த ஒரே ஒரு செலாவணியாக்கக் கூடாத, செலாவணியாக்க முடியாத குடும்ப விளக்கைத் தேய்த்துத் தேய்த்து வைத்து வணங்கினேன். கூடக் கொஞ்சம் எண்ணெய் விட முடியாவிட்டாலும்கூட சில சமயம் சுடர் தெறிக்கும்போது மனத்துக்குள்ளேயே பிரகாசமா ஒரு ஜோதி தெரியும். அப்பா! ஜாஜ்வல்யமா! ஒரே வெளிச்சமா கண்ணைப் பறிக்கிற வெளிச்சம். ''விளக்கே, திருவிளக்கே! வேதனுடை நற்பிறப்பே...'' என் வாய் தானாகவே ஸ்தோத்திரத்தை முணுமுணுக்கும்.

ஒரு நாள் அந்தக் குத்துவிளக்குக்கும் விடுதலை கிடைத்துவிட்டது, என்னிடமிருந்து.



எல்லாம் முகத்திலே வழிந்துத் தொங்க விட்டுவிட்டு விட்டுக்கு வருவார்.

நான் என்ன பண்ணுவேன்? பூமிக்குப் பாரமாக ஒரு பெண்ணாகப் பிறந்து அப்பாவின் கழுத்திலே; தோளிலே சுமையாக வளர்ந்தேன். குடும்பத்துக்கு நான் ஒரு சுமை. புருஷப் பிள்ளையாக இருந்தால் ஹோட்டலிலே டபரா டம்ளர் கழுவிக்கூடக் காசு சம்பாதிக்கலாம். இந்த ஜன்மம் எதற்கு ஆயிற்று? கல்யாணம்கூட ஒரு சடங்கைப் பண்ணலாம் என்றால், கழுத்திலே கயிறு கட்டறவங்கள் வானத்திலே ஏறி நின்று விலை கேட்கறாங்கள். சமைக்க ஓர் ஆள் பெற்ற பெண்; சுந்தரத்துக்கு ஓர் உருவம், ஒய்யாரத்துக்கு ஓர் உடம்பு; அழகோ அறிவில்லையோ ஒப்பந்து வருகிற உடம்புக்கு ஒரு [illegible]. இப்படி இலவசத்திலேயே எல்லாவற்றையும் வாரி வழங்க நாம் சம்மதித்தாலும் கூட, அதற்கும் கூலி!

''தாயே! பரதேவதே! தீபலக்ஷ்மி! நீதான் கதி!'' — எப்போதும் இதுதான் என் பிரார்த்தனை. ''நான் தவறாமே குத்துவிளக்கைத்

இந்த அழுகையைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போயாய், 'ஒரு ரெண்டு ரூபாய் முடைக்கு' என்று குத்துவிளக்கு விட்டை விட்டுப் போய்விட்டது. நான் அழுவதால் மட்டும் இரண்டு ரூபாய்க்கு ஏலம் போட்ட மானம் நின்றுவிடுமா? தலையைக் குனிந்து கொண்டேன்! அத்தனை சுமை, அத்தனை பாரம்.

தலையைக் குனிந்து கொண்டே நான் கொடுத்த குத்துவிளக்கை வாங்கிக்கொண்ட அந்தக் குண்டு மாமா ஏன் என்னை அப்படிப் பார்த்தார்?

அப்பாவுக்குக் கவலையாலே கிழட்டுத்தனம் வந்து விட்டிருந்தது. அவருக்கு நிஜமாகவே

கிழட்டுத்தனம்; அரச மரத்தடியிலே உட்கார்த்தி வைத்து விட்டால் பார்க்கிறவர்கள் கட்டாயம் தலையில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டுவிட்டுப் போவார்கள். அப்படி ஓர் உருவ ஒற்றுமை; நிற ஒற்றுமை. பிள்ளையாருக்குத் தினமும் எண்ணெய் தடவுகிறார்கள், மினுமினுக்க.. இந்தக் கறுப்புக் குண்டுத் தாத்தாவுக்கு — தப்பு, தாத்தான்னு சொன்னால் கோபித்துக் கொள்ளப் போகிறார் — மாமாவுக்கு, எங்க வீட்டுக் குத்துவிளக்கை வாங்கினால்தான் ஆயிற்று என்று ஓர் ஆசை. தாராளமாக ரெண்டு ரூபாய்களைக் கொடுத்து வாங்கிக் கொண்டு விட்டார்.

அதற்கு அடுத்த வாரமே குத்து விளக்கை வாங்கிய காரணத்தின் ரகசியம் பலூனாகப் பருத்து ஊதி உப்பி உடைந்து போய்விட்டது. பாவம்! அவர் ஒரு வைதிகர்; வைதிகர் என்றால் கிரமப்படி அத்யயனம் பண்ணின சாஸ்திரிகள் இல்லை. ஏதோ அப்படி இப்படி வைதிகக் காரியங்களுக்குச் சாட்சி பூதமாய்ப் பிள்ளையார் போலப் போய் நிற்பார். பத்தோட பதினொன்றாக ஆள் கணக்கு. அதற்குச் செபாக்க. அதிகாரம். இப்படி ஒரு நிலைமை!

சமீபத்திலேதான் அவருக்குக் கழுத்தை நீட்டிய மகராசி கழுத்தைச் சாய்த்துவிட்டிருந்தாள். மனைவியை இழந்தவனை வைதிகக் காரியங்களுக்குச் சேர்க்க மாட்டார்களே?- அதற்காக மட்டும் அப்படி — அதாவது யாராவது ஏழை பாழை வீட்டுப் பெண்ணை வீட்டுக் காரியாக்கிக் கொள்ள வேண்டும். அப்படி என்று ஒரு பேச்சு. பாசாங்கைப் பூசிக் கொண்டு போலிசாகப் புளுகுகிற ஒரு சபலம். ஆனால் பார்வையிலே மட்டும் — அது மட்டுமேயில்லை. ஓய்ந்து வருகிற உடம்புக்கு ஒத்தி வெறுமென்ற ஒரு பாவம். பார்க்கிற பார்வை! 'அப்பப்பா! ஆசையைப் பாரு! காடு 'வா வா' என்கிறது வீடு 'போ போ' என்கிறது என்று சொல்லும் நிலையிலே, புதுப் பெண்ணாக வேண்டும் என்ற ஆசை. பேராசை; பொல்லாத பேராசை என்று மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன்.

ஆனால்....! வெளியிலே போனால் வந்தால் ஓரக் கண்ணாலே பார்த்து ஒய்யார 'விசில்' அடிக்கிற கல்லூரித் தடியன் கனகராஜன். அவனுடைய சகா, கூடவே அட்டைபோல் ஒட்டித் திரியும் காதர்பாஷா இவர்கள் பார்க்கிற பார்வையிலே இருக்கிற அத்தனை கூர்மை, அவ்வளவு தேடி, அத்தனை பசி, பாவம், இந்தக் குண்டு மாமாவாலே இந்த வயதில் பார்க்க முடியாதுதானே?

அப்பா என்ன பண்ணுவார்? குண்டு மாமா என்னவோ வழக்கத்துக்கு மாறாக என்னை வேண்டி அப்ளிகேஷன் போட்டுவிட்டார். சாங்ஷன் செய்யப் போவது அப்பாதான். ''உன்னைப் பலியிடப் போகிறேன்'' என்று ஆட்டைக் கேட்டுவிட்டா வெட்டுகிறார்கள்? இல்லை. அது வாயில்லா ஜீவன். நான் வாய் உள்ள ஜந்து. வயிற்றில் பிறந்த பெண். ''அவளையும் கேட்டுப்பிட்டு...'' அப்பாவின் சந்தேகம், கனம்மா...இருந்தது. கண்ணாலே கெஞ்சினார்.

என்னுடைய அழகு எனக்குத் தெரியும். கண்ணாடியிலேயும் பார்த்திருக்கிறேனே! நான் அழகியில்லேதான். இப்படி எந்தப் பெண்ணாலும் சொல்ல முடியாது. ஆனால் நான் சொல்லுவேன். ஏனென்றால், நான் ஏழை. அழகை அள்ளிக் கொட்டிப் பவுடரிலே 'டால்' அடித்துக் கண்ணைக் கூச வைக்க வழியில்லை. கிழிசல் தாவணி; சாயம் போன பாவாடை, மாமி தந்த தொளதொளத்த ரவிக்கை.

இந்த அழகைக்கூடக் கனகராஜும், காதரும் பார்க்கிறார்கள் என்றால், அவர்கள் ரசனை: ஐயோ பாவம்! அவர்களுக்கு அழகு எதற்கு? நான் பெண்ணாக இருப்பதே போதுமே! பார்வையாலேயே என்னைச் சுட்டு விடுவார்கள். நான் பள்ளிக்கூடம் என்று போய் வந்த நாளிலேயே உரசி வந்து வம்பிழுப்பான்கள். எனக்கு என்னுடைய பெரிய விழியைப் பகவான் கொடுத்தாரோ நான் பிழைத்தேனோ. அதை உருட்டி ஒரு விழி விழித்தால்...சரிதான். வாத்தியார் பெண் என்ற உதைப்பு, நழுவிவிடுவான்கள். அப்பாவுக்கு எல்லோருடைய அப்பாவிடமும் செல்வாக்கு உண்டே!

நான் நன்றாக ஆகித் தடதடவென்று பீர்க்கங்கொடியாக வளர்ந்து நின்றபோது ஒரு நாள் கடை வீதியிலே இந்த இரண்டு தடியன்களும் பார்த்தான்கள். நான் . தலையைக் குனிந்து கொண்டு விடுவிடுவென்று வந்து விட்டேன். அப்படி நான் பயந்து பதுங்குவது அவன்களுக்கு ஒரு குஷியைக் கிளப்பி விடும். அதற்கப்புறம் . அந்த இரட்டையர்களை எங்கே பார்த்தாலும் உடனே அங்கே ஒரு வீட்டுக்குள்ளே நுழைந்துகொள்வேன். எல்லோருடைய வீட்டிலும் எல்லோரையும் எனக்குத் தெரியுமே! அப்படித் தெரிந்துவைத்திராவிட்டால் நான் இரவல், கடன் இப்படிக் கரண்டி கரண்டியாக வாங்கிக் காலம் கடத்தியிருக்க முடியுமா? எல்லோருக்கும் வாத்தியார் பெண் கமலியை நன்றாகத் தெரியும்.

''கஷ்டத்தைக் கண்ணுலே மறைச்சிண்டு கரண்டி தூக்கிண்டு வந்து நிக்குமே அந்தப் பொண்ணுதானே?'' என்றும், ''ஒவ்வொரு கோவிலா நின்னு பாடுமே அந்தப் பொண்ணுதானே?'' என்று என்னைப் பற்றி எல்லாருமே நிச்சயம் தெரிந்து வைத்திருப்பார்கள். அவ்வளவு பிரபலமானவள் நான். அந்த நிழலில் மறைந்துகொண்டு காதருக்கும் கனகராஜுவுக்கும் டிமிக்கி கொடுத்துக்கொண்டிருந்தேன்.

ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் காதரும் கனகராஜும் என்னைத் தூக்கிண்டே போய்விடுவான்கள் என்ற பயம் மலையாக மனத்துக்குள்ளே கனத்தது. இந்தச் சுமையை நான் யாரிடம் சொல்லி இறக்குவது? சொல்ல முடியுமா?

அப்படியானால் என் கதி? என்னைத் தேடி எந்தப் பிள்ளை வரக் காத்துக் கொண்டிருந்தான்? வயதுக்கு வந்த பிள்ளை என்றால் அவன் எதிர்பார்க்கும் அ...ழ...கு என்னிடம் துளிக்கூட இல்லை.

இதற்குள்ளே அந்தக் கனகராஜு, காதருக்குள்ளே என்னவோ எழவு தகராறு வந்து விட்டது போலேயிருக்கிறது. போட்டி வேறே! வாசலில் கரியாலே ஊரான் சுவரிலே என்னோடு ஜோடி சேர்த்து எழுதி வைத்துப் பிரபலப்படுத்தியிருக்கான்கள். இது எனக்குத் தெரியாது. 'கமலி—காதர், கமலி—கனகராஜ்' எது சரி?'' ஒரு புது சினிமாவின்


ஆரஞ்சு காண்டீஸ்
கோகோனட் பான் பான்
பைனாப்பிள் டாஃபி ரோல்ஸ்
நியூட்ரின்
வழங்கும்
4
புதிய விருந்துகள்
லாக்டோ நாவல்டீஸ் — பாலும் மால்டும் தேனும் நிறைந்த புதுமைப் படைப்பு
ஆரஞ்சு காண்டீஸ் — கதிரவன் கொஞ்சிக் கனியவைத்த ஆரஞ்சுச் சாற்றின் ருசி.
பைனாப்பிள் டாஃபி ரோல்ஸ் — கனியின் மணமும் குணமும் கூடிக் கமழ்ந்திடும் இனியதொரு மிட்டாய்.
கோகோனட் பான் பான் — பிரசித்திபெற்ற எமது லாக்டோ பான் பான் மிட்டாய்க்கு இனியதொரு மாற்று இது.
லாக்டோ நாவல்டீஸ்
nutrine
NCMS
தின்னத் தின்ன, திகட்டாத மிட்டாய்● நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், பலமனேர் சாலை, சித்தூர் (ஆந்திரப் பிரதேசம்).

போண்டா போல் இப்படி ஒரு கோஷம். அரசியல் வேட்பாளர் சார்பில் ஊரான் கவனில் ஒலியம் வரையும் மாலை மணிகள்தாமே இருவரும். பழக்க வாசனை என்னைப் பாழ் படுத்திவிட்டது.

''என்னடி இது?...என்ன சேதி?...''

அப்பாவின் கேள்வி, அதில் தொனித்த கோபம், கேள்வியின் ஆழம் புரியாமல் நடுங்கினேன். அப்பாவின் கோபம் புரிந்து நடுங்கினேன். அவமானம் நெஞ்சோலே கல்லாகக் கனத்தது. அவமானச் சுமை தாளாமல் குனிந்தேன்.

''நெருப்பில்லாமல் புகையுமாடி? உன்னைத்' சொல்லு....'' நான் அவமானச் சுமை தாளாமல் ஒடிந்து விட்டேன். என்னைச் சுற்றிலும் இருள், இருள். அவமான இருள்.

''அப்பா! நான் ஒங்க வயத்துலே பொறந்த பொண்ணு; என்னை நம்புங்கோ,...''

''நான் நம்பறேன்மா, நம்பறேன். என் நெஞ்சை பிழிச்சவன் கூடத் தப்புப் பண்ண மாட்டான். ஆமாம்! அது ஊரு நம்பணுமே? நீதான் கோவில் கோவிலா போய் நின்னுண்டு பாடறியே; அந்தப் பாட்டுனாலேதான் நமக்கு கல் வந்துட்டுது, காவி!...'' அப்பா அழத்தான் செய்தார். கண்ணாலே, வார்த்தையாலே அழாவிட்டாலும் நெஞ்சாலே, நீலவாலே அழுதார். அவர் என்னை நம்பினார். ஆனால் கவர் இலக்கியம் பச்சை இளித்துக் கொண்டு என்னுடைய சலங்குஜியை விடப் பயங்கரமாக நின்றதாம்.

இந்தனை அமர்க்களத்தின் நடுவிலும் அந்தக் குத்துவிளக்கை விளக்கு வாங்கிக்

பச்சோந்தி

நிலையில்லாத பழக்க வழக்கங்களையும் உறுதியில்லாத பேச்சையும் கொண்ட மனிதர்களைப் பாமர மக்கள் பச்சோந்தி என்று அழைத்து ஏளனக் கண்களோடு காண்பர். அதற்கேற்ப தனது இச்சைக்குத் தகுந்தவாறு தான் இருக்கும் இடத்துக்கு ஏற்பத் தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை உடையது பச்சோந்தி. பச்சோந்திகளைத் தென்னிந்தியாவில் பொதுவாக மரங்கள் அடர்ந்த பகுதிகளிலும் தோட்டங்களிலும் கூடக் காணலாம். ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், அரேபியா, இலங்கை, ஸ்பெயின், தூரக்கிழக்கு நாடுகள் முதலிய இடங்களில் சுமார் எழுபது வகைப் பச்சோந்திகள் வாழ்கின்றன.

இது தன் நீண்ட வாலினால் கிளை, இலைகளின் காம்பு முதலியவற்றைச் சுற்றிப் பற்றிக் கொண்டிருக்கும். கிளைகளைப் பிடித்துக் கொள்ளாதபோது இதனுடைய வால் தரைச் சக்கர வெடி போன்று சுற்றிக் கொள்ளும்.


பச்சோந்தியின் கண்ணைப் போன்ற விந்தையான அமைப்புள்ள கண் வேறு எந்தப் பிராணிக்கும் இல்லை! கண்கள் இரண்டும் பெரிதாகக் கொப்பளம் போன்று உப்பிக் கொண்டிருக்கும். கண்களைச் சுற்றிலும் கவசம் போல் கண் இமைகள் அசையாமல் கண்களை மூடியிருக்கின்றன. இந்த இமையின்

பச்சோந்தி தன் நாக்கை விசி எறிந்து சிறு பூச்சியை இரையாக்குதல்.

நடுவில் சிறிய துளை ஒன்று இருக்கிறது. அந்தச் சிறிய துளை வழியாகத்தான் கண் தெரியும். பச்சோந்தி தன் கண்களைத் தனித்தனியாக வெவ்வேறு திசைகளிலும் மேலும் கீழும் பக்கங்களிலும் தன் உடம்பின் பின் பக்கமும் கூடத் திரும்பிப் பார்க்க முடியும். இக் கண்களின் தனிச் சிறப்பு என்னவெனில் ஒரே சமயத்தில் இரண்டு கண்களாலும் இரண்டு வேறு பொருள்களைத் தனித்தனியே பார்க்க முடியும். வலக் கண் ஓர் இரையைப் பார்த்துக் கொண்டிருக்க, அதே சமயத்தில் இடக் கண் மற்றோர் இடத்தில் ஊர்ந்து செல்லும் ஒரு பூச்சியைக் கவனித்துக் கொண்டிருக்கும். ஆனால் ஒரு பொருளைத் தெளிவாக நாம் பார்ப்பதற்கு இரண்டு கண்களையும் ஒருங்கே அந்தப் பொருளின்மீது செலுத்துவது போல் பச்சோந்தி தனது கண்கள் இரண்டையும் ஒருங்கே செலுத்தி ஒரு பொருளைப் பார்க்கக்கூடிய தன்மையும் பெற்றுள்ளது.

பச்சோந்தியின் விந்தைப் பண்புகளில் முதன்மையாக நிற்பது அது தன் நிறத்தைச் சட்டென்று மாற்றிக் கொள்வதே. இது தன்னுடைய நிறத்தை மாற்றிக் கொள்வதற்குத் தலைமையான காரணம் வெளிப்புறத் தோற்றம்தான். தன்னுடைய கண்கள் காணும் பொருள்களுக்கு ஏற்பவும் தன் மன நிலைகளுக்கு ஏற்பவும் தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும். வெப்பம், வெளிச்சம் இவைகளில் ஏற்படும் மாறுதல்களும் ஓரளவுக்கு நிற மாற்றத்தை உண்டாக்குகின்றன. சாதாரணமாகச் சாம்பல் கலந்த பச்சை நிறமாகவும், கருமையான புள்ளிகளை உடையதாகவும் இந்தப் பச்சோந்திகள் காணப்படும். சில சமயங்களில் மரத்தின் நிறத்தைக் கொண்டதாயும் காணப்படுகின்றது. இருட்டும் குறைந்த தட்ப வெப்ப நிலையிலுள்ள ஓர் இடத்தில் விட்டால் பச்சோந்தியின் நிறம் வெளிறிய சிவப்பு கலந்த மஞ்சள் நிறமாயும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில மஞ்சள் புள்ளிகளைக் கொண்டதாயும் காட்சியளிக்கும். ஆனால் வெப்பம் நிறைந்த சூரிய வெளிச்சமுள்ள ஓரிடத்தில் விட்டால் உடனே இதன் நிறம் அடர்த்தியான ஒரு வகைப் பச்சையும் பழுப்பும் கலந்த நிறமாய் மாறிவிடுகிறது.

பச்சோந்தியின் நாக்கு மிக நீளமானது. தன் உடல் நீளத்தின் அளவு அதனுடைய நாக்கு நீள



மானது. இந்த நாக்கு பச்சோந்தியின் கீழ்த் தாடையில் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும். நாக்கின் நுனி சற்றுத் தட்டையாகப் பசைப் பற்று உள்ளதாக இருக்கும். தனது இரையாகிய ஏதாவதொரு சிறிய பூச்சியைக் கண்டுவிட்டால் போதும், உடனே சத்தம் செய்யாமல் மெதுவாக அப்பூச்சியின் சமீபம் செல்லும். ஒரு குறிப்பிட்ட தூரத்திலிருந்தே அப்பூச்சியை நோக்கி நன்கு குறி பார்த்துச் சடாரெனத் தனது நாக்கை விசி எறிந்து உடன் வாயினுள் இழுத்துக் கொள்ளும். இமைக்கும் நேரம்தான். பச்சோந்தி பார்த்த பூச்சி பச்சோந்தியின் பசைப் பற்றுள்ள நாவில் ஒட்டி அதன் வாயினுள் வந்து இரையாகிவிடும். - ஆன்டோனி பேசில்

கொண்ட குண்டு மாமா வந்து நின்றார். அப்படியே பார்த்தார். அப்பாவைக் கேட்டார். அப்பாவுக்குச் செலவே யில்லே. வைத்திசுவரன் கோவில்லே அந்த மாமா செலவிலே கல்யாணம். அப்பாவுக்கு என் சுமை தீருவதற்கு நல்ல வழி. என்னைப் பார்த்தார். நான் என்னத்தைச் சொல்லுவது? என்னைச் சுற்றிச் சூழ்ந்து நின்ற அவமானத்தின் சுமை தாங்காமல், ''சரி'' என்ற சொல்லில் என்னைப் பாதுகாத்துக் கொண்டேன்.

அப்புறம் என்ன? நான் குண்டு மாமாவின் தர்மபத்தினி, அகமுடையாள், ஸஹதர்மிணி! மூத்தாள் புழங்காமல் விட்டு விட்டுப் போன நகைகள், புடவைகள் எல்லாம் சேர்ந்தன. பூட்டிக் கொண்டேன். நான் நானுமி விட இவையெல்லாம் போதாதா? கண்ணாடியின் முன்னே போய் நின்றால்...அப்பா இது வாத்தியார் பெண் கமலிதானா? என்று என்னையே கேட்டுக் கொள்ளக் கூடிய மாறுதல். எனக்கே என்னைத் தெரியாதபடி தோற்றம், உருமாற்றம்.

குண்டோ, கறுப்போ, கிழமோ, பழமோ, பெண்களுக்குக் கழுத்திலே தாலி ஏறிவிட்டாலே ஒரு தனி அழகுதான். மழை பெய்த புல்தரை போல் ஒரு மரகத மினுமினுப்பு. ஒரு தகதகப்பு. ஒரு பூரிப்பு. எல்லாம் பசுமையாய் பூத்துப் பாந்தமா இழைகிறது. நான் இப்போது அழகுக் கமலி. அவரோட அகமுடையாள். இந்தப் பதவி ஒன்றே போதுமே என்னை, என் மானத்தைக் காப்பாற்ற!

அடேடே! மூலையிலே ஒரு தம்புரா! மூத்தாளுக்குப் பாட்டும் சிக்ஷை உண்டாம். பீரோவிலே பாட்டுப் புத்தகங்கள். வேறே என்ன வேண்டும்? வாழ்விலே சுருதி கூடி விட்டது போன்ற ஒரு திருப்தி.

நல்ல வேளை! வாழ்க்கை முழுமையாகக் கிடைக்காத போதிலும் பாட்டும் சுருதியும் கிடைத்ததே! பாடினேன். என்னுடைய கவலையைப் பாடினேன். என்னுடைய தேவையைப் பாடினேன். சாயங்காலம் ஆனவுடன் மல்லிகை யெல்லாம் ஒன்றாகக் 'குப்' பென்று மலருவது போலப் பாட்டெல்லாம் ஓடோடி வந்து எனக்குள்ளே மலர்ந்து விட்டது போல ஒரு பாவனை. அப்படி ஒரு நெடி. வழக்கமாக நான் பாடும் 'விளக்கே திருவிளக்கே, வேதனுடை நற்பிறப்பே...' ஸ்தோத்திரத்துடன், கீர்த்தனங்களும் பாடலாயின. மனத்தின் சுமை, வாழ்வின் சுமை இந்த இழையில் இறங்கத்தான் செய்தன.

ஐயோ பாவம்! இவர் — அதான் குண்டு மாமா — என்னிடம் எத்தனையோ ஆசையாகத்தான் இருந்தார். என் விருப்பத்தை கண்ணிலே கண்டே நடந்தார்; நடக்கிறார். அவருடைய ஆசை அத்தனையையும் கொட்டினால் கூட எனக்கு மூளியாகத்தான் பட்டது.

விள்ளாத விரியாத முழு வாழ்வு அல்லவே என்னுடையது?

நான் இவருடைய மனைவி என்று சொல்லிக் கொள்ளும் துர்ப்பாக்கியத்திலுள்ள அவமானச் சுமையை நீக்கிவிட்டுப் பார்த்தால் நான் ராணிதான். என் விருப்பத்துக்குப் பவுடர், சேலை, ரவிக்கை, நகை, ஏன்? சினிமாப் படம் போக வரக்கூட எனக்கு உரிமை கொடுத்திருக்கிறார். நானும் பக்கத்து வீட்டுச் சிறுசுகளுடன் போய் வந்தேன். பாட்டு வேறே பைத்தியமா அடித்தது. பாட்டுக்காகப் படம் என்பது போய், படத்துக்காக, அதிலே வரும் காட்சிக்காக என்று ஆகிவிட்டது. எனக்குக் கிடைத்தாலும் பாந்தமில்லாத — ஏன் எனக்குக் கிடைக்கக் கூடாத வாழ்வின் கேளிக்கைகளைக் காட்சியிலாவது கண்டு களிக்க என்று ஆரம்பித்து, இப்படியாக நாம் வாழவில்லையே என்ற ஏக்கச் சுமை என்னை அழுத்த நான் தள்ளாடினேன், தவிலடிரியாக்காரி போல.

இதில் சந்ததிக்குக் குறைச்சல் இல்லே. வருஷத்தின் பெயரையே வரிசையாக வைப்பது போல் எட்டாவதும் பெற்றுச் சுமக்கிறேன். சுமந்து பெற்று விட்டேன். பச்சை உடம்பு என்று கூடப் பார்க்காமல் அவர் வந்து அவருடைய ஆசையை யெல்லாம் அவசரமாகச் சுமையேற்றுவதில் குறைச்சல் இல்லே. அந்த வேகத்தில் ஒரு கேள்வி: ''ஏண்டி கமலி... ஒனக்கு யாரைப் பிடிச்சிருந்தது? கனகராஜா, காதரா?...'' என்று ஒரு தாலி கட்டின தர்மவான் கேட்டான்னு அதற்கு மேல் உயிர் வைத்திருக்கவும் வேண்டுமா?

இனி இந்த வாழ்வே ஒரு சுமை; இப்படிப் பழைய அசூயையை மனத்துக்குள்ளே சம்புடம் போட்டு வைத்துக் கொண்டு அந்தப் பலவீனமான நேரத்தில் என்னைத் தட்டிக் கொண்ட திமிருடன் என்னிடமே கேட்கும்போது அவருடன் நான் வாழ வேண்டுமா? உணர்ச்சிகள் மலையாய்ச் சுமந்து நின்றன. கவலைகள் மண்டையைக் குடைகின்றன. இந்நிலையில் என்னால் எதையும் ஈடு கொடுக்கத் திராணி இல்லே.

ஒரு கடிதத்தில் என் முடிவை எழுதி வைத்து விட்டு, இதோ இந்தக் காவிரிப் படுகைக்கு இருட்டோடு இருட்டாய் வந்துவிட்டேன். இருள் சுமை! சுமையிருள்! இதுதான் என் வாழ்வு. இத்தனைதான் நான் கண்டது. கண் முன்னே குத்துவிளக்கு வந்து நின்று எரிந்துவிட்டுப் 'பொக்'கென்று அணைகிறது. 'திருவிளக்கே, திருவிளக்கே... வேதனுடை நற்பிறப்பே...'' இப்போதும் முணுமுணுக்கிறது வாய். சரியான சகுனம்தான்.

தோளில் கிடந்த பழம் புடவையை எட்டிப் பிடித்த கிளையில் முடிந்து விட்டேன். இந்த மரத்தை என்று நான் குறிப்பிட்டு வரவில்லை. பல நாட்களாக நடந்து பழகிய படுகையில் பழக்கமான ஒரு மரம். இடம் தேர்ந்தெடுத்து விட்டேன். அப்புறம் யாருடைய வசவும் எனக்குக் கேட்காதே!

சரி, இனி சுமை பூமிக்கு இல்லே. இந்த மரத்துக்குத்தான். அவர் காலையில் என் கடிதத்தை, அதில் காணப்படும் இந்த முடிவைப் பார்த்துக் கொள்ளட்டும்.

''விளக்கே திருவிளக்கே...''


கழுத்திலே சுருக்கிட்ட புடவை, நான் தடால் என்று குதித்து விட்டேன்.

அவ்வளவுதான்.

என் சுமையுடன் என் கவலைகள் அத்தனையின் சுமையையும் இந்த மரக் கிளையால் தாங்க முடியாமல், 'மளக்'கென்று முறிந்து என்னைப் பூமிக்கே பாரமாக்கியது.

''ஐயையோ!'' உலகத்துப் பயமெல்லாம் என்னுள்ளே வந்து ரத்தமாக ஓடி உலுக்கியது. ஓடோடி வந்து விட்டேன்.

யாரும் பார்ப்பதற்குள் நான் எழுதின கடிதத்தை எடுத்து அப்புறப்படுத்த வேண்டுமே!


கடன்
வாங்குவோம்
வாரீர்!
ஓய், என் கடனைத் தீர்த்து
வெச்சுட்டு மறு காரியம்...
இந்த ஆளுக்கு பாங்கிலே
கடன் வாங்கிக் கொடுக்கச்
சிபாரிசுக்குப் போயிண்டிருக்
கேன்!.. அபசகுனமா
குறுக்கே வந்து
நிக்கறியே!
முட்டை வியாபாரத்துக்கு உம் பாங்கிலே
நான் வாங்கின கடனை, தினம்
முட்டை வாங்கி அடைச்சுக்கிறோ...
சும்மா மிரட்டாதே!
-M.T. மண்ணுருட்டி
எலந்தப்பழம்—
மொத்த சில்லறை வியாபாரம்
போன் 57094
டேய், சோமாரித் தடியே! சர்க்கார்
பாங்கிலே கடன் வாங்கி, சோபா, டேபிள்
ஃபான், போன் போட்டு என்னைப் போல்
குந்திகினு வியாபாரம் பண்ணுமெ, நாய்
மாதிரி ஏன் அலையறே?
கல் வியாபாரம்னு
கடன் கேட்டீங்களே
நகைக்கு வைக்கிற
கல்லா?
நீங்க ஒண்ணு! அரிசி
உளுந்து, பருப்பு, பயறு
கடலை இதுகளிலே
கலக்கற கல்
வியாபாரமுங்க!
சும்மாகுச்சும் எழுதிப்போட்டேன்!
சர்க்கார் பாங்கிலே ஐந்நூறு ரூபா
கடன் கொடுத்துட்டாங்க!! இந்தப்
பணத்தை என்ன பண்றதுன்னு
தெரியல்லியே, அட கடவுளே!....
இன்னு சாமி, என்னைத்
தெரியல்லியா? கார் டிரைவிங்
கத்துக்க நீ தானே சாமி கடன்
கொடுத்தே, உம் பாங்கி-
லேருந்து!

அரை மணி நேரமாகக் கண்ணாடி முன் அழகு பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜம். தன் கழுத்தில் தொங்கிய அந்தத் தங்க நெக்லஸைப் பார்த்துப் பூரித்துப்போனாள்.

பத்து வருஷ மண வாழ்க்கைக்குப் பிறகு பாஸ்கரன் ஆசையாகச் செய்து போட்டது அது.

என்றைக்கும் ராஜம், ''அது வேண்டும், இது வேண்டும்'' என்று பாஸ்கரனை நச்சரித்ததில்லை. அவனுடைய வருமானத்தின் எல்லை அவளுக்குத் தெரியும். அதற்குள் எப்படி வாழ்ந்து காட்ட வேண்டும் என்பதும் அவள் அறிந்து வைத்தது தான்!

அவள் கேட்ட பிறகு அவன் வாங்கிப் போட்டிருந்தால்கூட இத்தனை மகிழ்ச்சி இருக்குமோ இருக்காதோ! சொல்லாமல் கொள்ளாமல் ஒரு நாள் பாஸ்கரன் அவளைக் கண்களை மூடிக் கொள்ளும்படி சொன்னான்.

''இது என்ன விளையாட்டு?'' என்று சிணுங்கியபடி அவள் தன் விழிகளை மூடிக் கொண்டாள். அவள் கண்களைத் திறந்தபோது அந்த நெக்லஸ் அவள் கழுத்தை அலங்கரித்தது.

குழாயடிக்குத் தண்ணீர் எடுத்து வரப்போனாலும், தெருக் கோடிப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்றாலும், ராஜம் அந்த நெக்லஸைப் போட்டுக் கொண்டுதான் போனாள்.

அப்படித்தான் ஒரு நாள் —

பாஸ்கரனுக்குச் சினிமா பார்ப்பது என்பது பிடிக்காது என்பதில்லை. அவனுக்கு நேரம் கிடையாது. இரவுக் காட்சிகளுக்கு அவன் போவதில்லை — தூக்கம் விழிக்க வேண்டும் என்கிற காரணத்தினால்.

ராஜத்துக்கு அப்படியில்லை. உறக்கத்துக்கும் உணவுக்கும் எத்தனை முக்கியத்துவம் உண்டோ, அத்தனை சினிமாவுக்கும் அவள் அளித்து வந்தாள். பக்கத்துத் தியேட்டரில் எந்தப் படம் வந்தாலும், அவள் நாற்பது பைசா கொடுத்துப் பார்க்கத் தவறியதில்லை.

அவள் அப்படிச் சினிமா ஒன்று பார்க்கப் போனபோதுதான் கமலாவைச் சந்தித்தாள். டிக்கெட் வாங்கும் 'க்யூ'வில் பக்கத்துப் பக்கத்து இடங்களில் நின்ற அவர்கள், உள்ளே அடுத்து அடுத்த ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள்.

சிரிக்கச் சிரிக்கப் பேசினாள் கமலா. பக்கத்துப் பேட்டையில் தான் இருக்கிறாளாம். இருபத்திரண்டு வயதுக்கு மேல் இருக்காது. நல்ல சிவந்த மேனி. கழுத்தில் திருமாங்கல்யம். கைகளில் இரண்டிரண்டு பிளாஸ்டிக் வளையல்கள். வேறு ஏதும் இல்லை. அவள் கணவன் ஏதோ மில்லில் வேலை பார்ப்பதாகச் சொன்னாள்.

ஏதேதோ பேசிக் கொண்டார்கள்.

''இந்த நெக்லஸ் மிக நல்லா இருக்குது, அக்கா!'' என்றாள் கமலா.

''நன்று இல்லாமல் இருக்குமா? ஆறரைப் பவுன் ஆச்சே!'' என்று ராஜம் தன் கழுத்தைப் பெருமையுடன் தடவிப் பார்த்துக் கொண்டாள்.

அன்று தொடங்கி அவள் நட்பு வளர்ந்தது. சினிமா பார்ப்பதற்கு முன்கூட்டியே தேதி நிச்சயித்துக் கொண்டனர். பாஸ்கரன் வேலைக்குப் போன பிறகு கமலா வருவாள். வந்து மணிக்கணக்கில் அவளுடன் பேசிக் கொண்டிருப்பாள்.

''உன்னை என் வீட்டுக்கு அழைச்சு உபசரிக்கணும்னு எனக்கு எத்தனை கொள்ளை ஆசை தெரியுமா, அக்கா... ஆனால்...'' என்று இழுத்தாள் கமலா.

''நீ கூப்பிட்டால்தானா?... உன் மனசு எனக்குத் தெரியாதா?'' என்று சமாதானம் சொன்னாள் ராஜம்.

''கமலா இப்படிப் பேசினாள், கமலா அப்படிச் சொன்னாள்'' என்றெல்லாம் ராஜம் பாஸ்கரனிடம் ஓயாமல் கூறினாள்.

''இன்னிக்கு நம்ம தேசத்திலே பிரதம மந்திரிக்கு அடுத்தபடி உன் சிநேகிதிதான் உயர்ந்தின்னு நான்

அட்டைப் படக் கதை



ஆசையும் நகையும்

-அன்னம்-

ஏத்துக்கறேன். சும்மா சும்மா தம்பட்டம் அடிக்காதே!'' என்று பாஸ்கரன் அலுத்துக் கொள்ளும் அளவுக்குக் 'கமலா புராணம்' பாடுவாள் ராஜம்.

சாதாரணக் காய்ச்சல் என்றுதான் ஆரம்பித்தது பாஸ்கரனுக்கு. ஆனால் தொடர்ந்து ஒரு வாரம் நீடிக்கவே அவனால் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை.

ராஜத்தைப் பார்க்கச் சுதந்திரத்துடன் நுழைந்த கமலா பாஸ்கரனைப் பார்த்ததும் வெட்கிப் போனாள். தாடியும் மீசையுமாக அவன் நிலையில் ஒரு முண்டாகட்டன் படுத்துக் கொண்டிருந்தான்.

''என்ன கமலா! ஒரு வாரமாகக் காணோம்?''

''உங்களையும்தான் காணவில்லை....''

''அதுதான் பார்த்தாயே! அவருக்கு உடம்பு நலம் சரியில்லை.... கல்யாணமானது முதல் இப்படிப் படுத்துக் கொண்டிருந்ததே இல்லை. என்ன மாய ஜுரமோ குறைய மாட்டேன் என்கிறது....''

''எல்லாம் சரியாகி விடும், அக்கா!''

''அப்படி உட்கார்.... காப்பி போட்டுத் தருகிறேன்......''

''அதெல்லாம் வேண்டாம், அக்கா...நான் வந்தது......''

''சும்மா சொல்...என்ன வேண்டும்?''

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

'' அக்கா!''

''சொல், கமலா! என்னிடம் எதற்குத் தயக்கம்....?'' என்று தூண்டினாள் ராஜம்.

''எனக்கு எப்படிச் சொல்வது என்று புரியவில்லை. வேண்டாம் அக்கா. ஒன்றுமில்லை....'' என்று மழுப்பினாள் கமலா.

''தயக்கமில்லாமல் சொல்லேன். என்ன விஷயம்?'' என்று வற்புறுத்திக் கேட்டாள்.

''என் வீட்டுக்காரருக்குக் கூடப் பிறந்தவள் ஒருத்தி இருக்கிறாள் என்று சொல்லியிருக்கிறேன், இல்லையா?''

''ஆமாம்.... மதுராந்தகத்திலே...பெரிய இடம். நல்ல இடத்திலே வாழ்க்கைப்பட்டிருக்கிறாள் என்றுகூடச் சொல்லியிருக்கிறாய்......''

''ஆமாம்.... அவள்தான்.... அவள் மைத்துனனுக்கு அடுத்த புதன்கிழமை கல்யாணம் என்று அழைப்பு வந்திருக்கிறது!'' என்றாள் கமலா.

'' நீயும் போகப் போகிறாயா?'' என்று கேட்டாள் ராஜம்.

'' அவர் கூப்பிடுகிறார். நான் எப்படிப் போவேன், அக்கா? இந்த மூளிக் கழுத்தோடு கல்யாணத்துக்கு எப்படிப் போறது? கைகளில் போட்டுக் கொள்ள கவரிங் வளையல் ஒரு ஜதை இருக்கு.... கழுத்துக்கு?....'' என்று கேட்டாள் கமலா.

''மூளியாகப் போனாலும் நல்லாத்தான் இருக்காது!'' என்று ஒப்புக் கொண்டாள் ராஜம்.

'' அதான் அக்கா... உன் நெக்லஸை இரண்டு நாளைக்குக் கொடுத்தால்.... நான் நிச்சயம் திருப்பிக் கொடுத்துவிடுவேன். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்வேன்....''

ராஜத்துக்குப் பகீர் என்றது. அந்த நகையைத் தன் உயிருக்கும் மேலாகப் பாவித்து வருகிறாள். கொடுப்பதா, மறுப்பதா? அவளுடைய நெருங்கிய தோழி கேட்கிறாள்.... இரண்டு நாட்களுக்குத்தானே?... கொடுத்தால் என்ன?

''கமலா, என் வீட்டுக்காரரைக் கேட்காமல் நான் எதுவும் செய்ததில்லை... இரு! அவரையும் ஒரு வார்த்தை கேட்டு விட்டுத் தருகிறேன்!'' என்றாள் ராஜம்.

உடனே எழுந்தும் போனாள்.

''ராஜம்! உன் தோழிக்கு நகை இரவல் கொடுப்பதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்றைக்கு வெள்ளிக்கிழமை. நாளைக்குச் சனிக்கிழமை. இரண்டு நாட்களும் நம்ம வீட்டு லக்ஷ்மியை வெளியே அனுப்ப வேண்டாம். புதன்கிழமை காலை கல்யாணம், திங்கட்கிழமை வாங்கிப் போகட்டும்!''

அத்தனை பேச்சையும் அவள்தான் கேட்டுக் கொண்டிருந்தாளே!

ராஜம் சொன்னதைக் கேட்ட கமலா ஒப்புக் கொண்டாள். பல மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள்.

சனிக்கிழமை முதல் பாஸ்கரன் வேலைக்குப் போகத் தொடங்கினான். திங்கட்கிழமை மாலை கமலா வந்து நகையை வாங்கிப் போனாள். நாலு முறை, ''பத்திரம், பத்திரம்!'' என்று எச்சரித்து அனுப்பினாள்.

வெள்ளிக்கிழமை காலை. பரக்கப் பரக்க ஓடி வந்தாள் கமலா.

''இந்தாங்க, அக்கா! உங்க நகை... கொடுத்து விட்டேன்... கொடுத்து விட்டேன்.... சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றாள்.

'' ஏன் இப்படி இரைக்கிறது உனக்கு?'' என்று விசாரித்தாள் ராஜம்.

''இன்னும் வீட்டுக்குக்கூடப் போகவில்லை. அவர்கூடத் தெரு முனையில்தான் நிற்கிறார்!'' என்றாள் கமலா.

''அப்படி என்ன அவசரம்? பகலுக்கு மேலே கொடுக்கக் கூடாதா?'' என்று கடிந்து கொண்டாள் ராஜம்.

''ஏதோ ஆசை அக்கா! உங்களிட்டே வாங்கிப் போட்டுக்கிட்டேன். எப்பவும் நகையைப் பத்திய நெனைப்புத்தான் எனக்கு. கல்யாணத்திலேகூட மனசு செல்லலே!''

''போடி, பைத்தியம்! உன் வீட்டுக்காரரைக்கூடத் தெருவில் நிறுத்தி வைச்சுட்டியே! உள்ளே அழைத்து வா...ஒரு கப் காப்பி....''

''இல்லை, அக்கா! அப்புறம் வருகிறேன். வீட்டிலே போட்டது போட்டபடி இருக்கும்!'' என்று நிற்காமல் போய் விட்டாள் கமலா.

ராஜம் பெட்டியைத் திறந்து பார்த்தாள். நெக்லஸ் மின்னியது. பெட்டியில் வைத்துப் பூட்டினாள்.

பாஸ்கரன் அன்று மாலை வீடு திரும்பினான்.

''கமலா வந்திருந்தாள்!'' என்றாள் ராஜம்.

''வந்திருந்தாளா?'' என்று கேட்டான் அவன் ஆச்சரியத்துடன்.

''ஏன்? நம் நகையைத் தூக்கிக்கிட்டு ஓடுவாள்னு நெனைச்சீங்களா? அவள் அப்படியில்லை.... தங்கமானவள்!''


ஊங்கள் உடலுக்குத் தேவை 23 ஊட்டச் சத்துக்கள்
பாலிலே உள்ளவை 9
காம்ப்ளான் 23 சத்துக்களும் கொண்டது
Complan
காம்ப்ளான் — முழுமையான உணவு
சத்துப் பற்றுக்குறைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது

துருக்கியில் உள்ள அங்காரா நகரில் அஸ்ப்ரில் என்ற டாக்டர் ஒருவர் காலமானார். எட்டு வருடங்களாக மயக்க நிலையில் இருந்துவிட்டு மரணமடைந்தார் அவர். 1961ம் வருஷம் ஜூலை 20ந் தேதி ஒரு நோயாளிக்கு 'எக்ஸ்ரே' எடுக்கும்போது மின்சார அதிர்ச்சிக்குள்ளாகி மயக்கமடைந்தார். பிறகு அந்த மயக்கம் தெளியவே இல்லை. 1969 செப்டம்பர் 19ந் தேதி இறந்துவிட்டார். உலகத்திலேயே மிக அதிக நாட்கள் மயங்கிக் கிடந்தவர் இவர்தான்!

ஆதாரம்: "ஹிந்துஸ்தான் டைம்ஸ்"
தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

"இருக்கட்டும். நகை திரும்பி வந்து விட்டதா ?" என்று கேட்டான் பாஸ்கரன்.

"வந்து விட்டதே ! நீங்கள் வேலைக்கு அப்படிப் போனீர்கள். இப்படி வந்தாள் அவள்!" என்றாள் ராஜம்.

"எடுத்து வா, பார்ப்போம்!" என்றான் பாஸ்கரன்.

அவள் பெட்டியுடன் கொண்டு வந்து கொடுத்தாள். நகையைக் கையில் எடுத்து அப்படியும் இப்படியும் பார்த்தான்.

"ராஜம் ! உன் தோழி தங்கமானவளாக இருக்கலாம். ஆனால் இதில் தங்கக் கலப்பே இல்லை. முழுப் பித்தளை!" என்றான் அவன்.

"விளையாடாதீங்க... பார்த்துச் சொல்லுங்க!" என்று பதறினாள் ராஜம்.

"நீயே பாரேன்.... இந்த முகப்பில் என்ன போட்டிருக்கிறது? "பா.ஜு." — அப்படி என்றால் பாரத் ஜுவல்லரீஸ். நான் வேலை பார்க்கும் கடை. இதே போல் ஆயிரம் நெக்லேஸ்கள் என்னுடைய கையால் நான் விற்றிருக்கிறேன்."

"ஆமாம்! ஆமாம்! நகை கனமாகவே இல்லையே !" என்று அலறினாள் ராஜம் அதைக் கையில் எடுத்தபடி. திடீரென்று ஆவேசம் வந்தவள் போல் எழுந்தாள்.

"இதை நான் லேசாக விட்டுவிடப் போவதில்லை. அவள் வீட்டுக்குப் போய்க் கேட்கிறேன்.... நீங்களும் வாருங்கள்.... ஊரை அழைத்துச் சந்தி சிரிக்க வைக்கிறேன்..." என்று புறப்பட்டாள் அவள்.

" இரு ராஜம் ! நீ போய்க் கூச்சல் போட்டால் உனக்குத்தான் அவமானம்."

"என்ன சொல்கிறீர்கள், நீங்கள் ?"

"முதலில் உன் தோழி அங்கு இருக்கமாட்டாள். அப்படியே இருந்தாலும், 'நீ கொடுத்தது இமிடேஷன்தான். தங்கம் என்று இப்போது சொல்லி என்னை மோசம் செய்யப் பார்க்கிறாய்' என்பாள். நீ கொடுத்தது தங்கம் என்பதற்கு ருசு ஏது ?" என்றான் பாஸ்கரன்.

"ஆமாங்க !" என்று அயர்ந்து போய் உட்கார்ந்தாள் ராஜம். அவள் தலை சுற்றியது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள ஒரு நகையை எத்தனை சுலபத்தில் சுளையாடி விட்டாள் அந்தக் கமலா !

பிரமை பிடித்தாற்போல் இருந்த ராஜத்தின் முதுகை வருடினான் பாஸ்கரன்.

"நீ வருத்தப்படாதே !... கமலாவுக்கு நீ கொடுத்ததும் தங்க நெக்லஸ் இல்லை. இது போல ஒன்றுதான் !" என்றான் அவன்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"நீ கொடுத்ததும் ஆறரைப் பவுன் நெக்லஸ் இல்லை. பித்தளைதான் என்கிறேன்!"

ராஜத்துக்குப் புரிந்தது. அவள் தோழி திருடி என்றால் அவள் கணவன் அதைவிடப் பெரிய வஞ்சகன். இமிடேஷன் நகையைத் தங்க நகை என்று சொல்லி இத்தனை நாட்கள் ஏமாற்றியிருக்கிறான் !

ராஜம் விம்மி விம்மி அழுதாள். "எல்லோரும் என்னை ஏமாற்றினீர்கள். கமலா எத்தனையோ மேல். என் மேல் உயிரை வைத்திருப்பதாக அடிக்கடி சொல்லி வரும் உங்களுக்கு, எனக்கு இமிடேஷன் நகை வாங்கிக் கொடுத்து ஏமாற்ற எப்படி மனம் வந்தது ?" என்று தேம்பினாள்.

"சீ ! உளறாதே !" என்று அதட்டினான் பாஸ்கரன்.

எழுந்தவன் தன் பெட்டியின் அடியிலிருந்து இன்னுமொரு நெக்லஸை எடுத்தான். "இதுதான் உன் நெக்லஸ்....ஆறரைப் பவுன். நான்கு குந்துமணிகூட. நீ கொடுத்ததுதான் போலி!" என்றான்.

" எப்படி ?" என்றாள் அவள்.

" உன் சிநேகிதியை அன்று பார்த்த போது எனக்குப் புரிகிறது. என் கைக்கடிகாரம் திருட்டுப் போனதற்காக நான் போலீஸ் ஸ்டேஷன் போனபோது அவளை லாக்கப்பில் பார்த்தேன். அப்புறம் அடிக்கடி அவள் எங்கள் கடையில் போலி நகைகள் வாங்கிப் போவாள்..... சினிமா எக்ஸ்ட்ராக்களுக்குத் தேவைப்படும் அவை. எங்கள் கடை நகை ஒன்றை மாடலாக வைத்துத்தான் நான் தங்கத்தில் உனக்கு அதே போல் செய்தேன். பதினைந்து நாட்கள் முன்பு இதே போல் போலி ஒன்று அவள் என்னிடம் வாங்கிப் போனாள். மறுபடியும் இங்கு வந்து உன்னை இரவல் கேட்டபோது எனக்குச் சந்தேகம் தட்டியது. நீயோ உன் தோழி தெய்வத்தின் அவதாரம் என்று எண்ணிக் கொண்டிருந்தாய். நான் என்ன சொன்னாலும் நம்பமாட்டாய். வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை என்று ஏதோ சாக்குச் சொல்லி நகையை நான் மாற்றி விட்டேன்....."

"ஆமாம்! அவளுக்கு என் உங்களை அடையாளம் தெரியவில்லை?" என்று கேட்டாள்.

"ஜூரத்தைத் தந்தானே ஆண்டவன் அவனுக்கு நன்றி சொல்லு. ஒரு வாரத் தாடியும் மீசையும் என் தலை முண்டாசும்தான் என்னை அவள் புரிந்து கொள்ளாமல் காப்பாற்றின" என்றான் பாஸ்கரன்.

ராஜம் பாஸ்கரனின் கால்களில் விழுந்து எழுந்தாள்.

"இந்தப் பாவி உங்களைச் சந்தேகித்தேன். பாருங்கள். என் கன்னத்தில் இரண்டு கொடுங்கள். அப்பொழுதுதான் புத்தி வரும்" என்றாள் அவள்.

"மெய்யாகவே கொடுத்து விடுவேன்!" என்றான் அவன்.

"கொடுங்கள் !" என்று அவள் கண்களை மூடியபடி நின்றாள்.

அவன் கொடுத்தான். அவளும் வாங்கிக் கொண்டாள். அவள் கன்னம் சிவந்தது. வலியினால் அல்ல!

---

* இக் காட்சியையே அட்டை ஓவியமாக அளித்திருக்கிறார் ஓவியர் பாலு.



உங்களுக்கும்

உங்கள் நண்பர்களுக்கும்

மகிழ்ச்சி அளிப்பது......

நீடித்த நறுமணம் வீசுவது



Priya

PERFUME

பிரியா

வாசனை

புத்தம் புதிய மலர்களின்
வாசனைக்கு ஒப்பானது

பெங்கால் கெமிகல்

கல்கத்தா ○ பம்பாய் ○ கான்பூர் ○ டெல்லி

மூல நோயை

முற்றவிடாமல்

நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து

நிவாரணம்

அடையுங்கள்;

—ரண

சிகிச்சையையும்

தடுங்கள்

பண்டிட்
டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்திற்கும், பலத்திற்கும்

அருணா

மாதர்களின் ஆரோக்யத்திற்கு

பாலப்ராஸ

குழந்தைகள் டானிக்

ரக்த சோதகா

சிறந்த ரக்தசுத்தி ஔஷதம்

ச்யவனப்ராசனம்

இருமலுக்கு

ஆயுர்வேதாஸ்ரமம்

பிரைவேட் லிமிடெட்

சமாதிக்குப் போனாலும் தமாஷ் போகாது!

அ. ராதா



''ஒரு மனிதனுக்கு எவ்வளவு நிலம் தேவை ?''

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்கிறீர்கள் ?

''நூறு ஏக்கர் போதும்'' என்று சொல்கிறீர்களா ?

சொல்வீர்கள்! உங்களுக்கு என்ன? ஆயிரம் ஏக்கர் வைத்திருப்பவர்களைப் போய்க் கேட்டால் தெரியும், உங்கள் பதில் எவ்வளவு தூரம் சரி, அல்லது தவறு என்ற உண்மை

ஆசைக்கு அளவில்லை என்று சொன்னவர்கள் பைத்தியக்காரர்களா என்ன? 'அகிலம் எல்லாம் கட்டி ஆண்டாலும் ஆசைக்கு ஓர் அளவில்லை. அப்புறமும் சந்திர மண்டலத்தைக் கட்டி ஆளலாமா, சூரிய மண்டலத்தைக் கட்டியாளலாமா என்று தான் தோன்றும். நீங்கள் அகிலமெல்லாம் கட்டி ஆளும் போது, நான் சொல்வதை உண்மை என்று ஒப்புக் கொள்வீர்கள். இப்பொழுது எப்படி ஒப்புக் கொள்வீர்கள்?

ஹிட்லருக்கு ஜெர்மனி போதவில்லை. ஐரோப்பா முழுவதையும் பிடித்தார். மகா அலெக்ஸாந்தர் என்ற கிரேக்க மன்னரோ, ஆசியாவுக்கே படையெடுத்து வந்தார், மேன்மேலும் நிலத்தை அபகரித்துக் கொள்ளத்தான். அவர்களுடைய ஆசை, அவர்களை [illegible] பாடுபடுத்தியது. அது மற்றவர்களைப் படுத்திய பாடோ, அது பெரிய பாரதம். ஆமாம், பாரதப் போர்தான் ஏன் மூண்டது? எல்லாம் இந்த நிலத் தகராறுதானே ?


பாவம், இப்படி உலகத்தையே விழுங்க ஆசைப்பட்டவர்களைக் கடைசியில், கேவலம் ஓர் ஆறடி நிலமே விழுங்கி விட்டது. இதைப் பார்த்த மகான் டால்ஸ்டாய், மனிதனுக்கு ஆறு அடி நிலம் போதும் என்று ஒரு கதையே எழுதி விட்டார்.

ஆறு அடி நிலம் போதும் என்று செத்த பிறகு எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அப்போது அந்த நிலம் மட்டும் அல்ல, அதற்குமேல் ஒரு சிறு கட்டடமும் சொந்தமாக இருக்கட்டும் என்று மற்றவர்கள் பெரிய மனசு பண்ணிக் கல்லறைகளைக் கட்டி வைக்கிறார்கள். கட்டடம் என்றால் அதில் ஏதாவது எழுதி வைக்க வேண்டுமே ! குறைந்தபட்சம் ஓர் ''ஒழிக'' கோஷத்தையாவது எழுதினால்தான் அது கட்டடமாக விளங்க முடியும் என்று இப்போது ஆகிவிட்டது. ஆனால் ஏற்கனவே ஒழிந்து போய்விட்டவர்களின் சமாதிகளில், ''ஒழிக'' என்று எழுதி என்ன பிரயோசனம் ? அப்படியானால் எதை எழுதுவது ? இந்தப் பிரச்னையை நல்லவேளையாக வெகு காலத்துக்கு முன்பே தீர்த்து விட்டார்கள். தன் சமாதியில் எழுத வேண்டியதைத் தானே எழுதி வைத்துவிட்டு, அப்புறம் சமாதிக்குப் போனவர்கள் பலர். அவர்களில் மகாகவி ஷேக்ஸ்பியரும் ஒருவர். அவர் என்ன எழுதி வைத்து விட்டுப் போனார்? தம்முடைய சமாதியை யாரும் தோண்டிப் பார்க்கக் கூடாது என்று சமாதியிலேயே எழுதி வைக்கும்படி ஒரு காகிதத்தில் எழுதி வைத்து விட்டுப் போனார். நம் நாட்டின் ஜஹாங்கீர் சக்கரவர்த்தியின் மனைவி, நூர்ஜஹான் தன் சமாதியில் எழுதி வைக்கச் சொன்ன வாசகம் இது :

''என் சமாதியில் விளக்கு ஏற்றாதீர்கள். பாவம், அதில் விட்டில்பூச்சி விழுந்து சாக வேண்டாம்.''

இப்படிக் கருணையோடு நூர்ஜஹான் எழுதச் சொன்ன வாசகத்தை அவருடைய சமாதியில் இப்பொழுதும் பார்க்கலாம் — லாகூருக்குப் போனால்.

சில சமாதி வாசகங்கள் — இறந்தவர்களுக்காக மற்றவர்கள் எழுதியவை — உருக்கமாக இருக்கின்றன; சோக ரஸம் ததும்பும் கவிதைகளாக இருக்கின்றன. இப்படி இருப்பதுதான் பொருத்தம். மற்றப்படி, சமாதியில் ஹாஸ்யப் பாடல் என்ன வாழ்கிறது என்றுதான் நமக்குக் கேட்கத் தோன்றும்? ஆனால், உண்மை என்னவென்றால், பல சமாதிகளில் காணும் ஹாஸ்யப் பாடல்களைப் போல் வேறு எங்கும் காண முடியாது என்பதே ! என்ன ஹாஸ்யம் ! என்ன கும்மாளம் ! என்ன



விளையாட்டு! எல்லாம் கல்லறைக் கவிதைதான்!

ஒவ்வொரு கல்லறையாகப் பார்த்து ரசிப்போம்:

இது மகா அலெக்ஸாந்தரின் கல்லறை. இதில் எழுதப்பட்டிருக்கும் வாசகம்:

''முன்பு இவருக்கு உலகமே போதவில்லை. இப்போது ஒரு சமாதியே போதுமானதாக இருக்கிறது.''

இது அலெக்ஸாந்தருக்காக யாரோ எழுதிக் கொடுத்தது. மற்றொரு கிரேக்க முக்கியஸ்தரோ தம் சமாதியில் எழுத வேண்டியதைத் தாமே எழுதி வைத்துப் போனார். எப்படி?

'' டயோனிசியஸ் என்ற பெயருடைய எனது சடலம் என் அறுபதாவது வயதில் இங்கே அடக்கம் செய்யப்பட்டது. நான் கல்யாணம் செய்து கொள்ளவே இல்லை. என் தந்தை கல்யாணம் செய்து கொள்ளாமல் இருந்திருந்தால் நான் செய்து கொண்டிருப்பேன்.''

இதுதான் ரகசியம்: ''காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனது'' போல், இவர் காதலித்த பெண்ணை இவருடைய தந்தை மணந்து கொண்டு விட்டார்!

தகப்பனும் மகனுமான இவர்கள் இப்படியா. வேறொரு தகப்பனையும் மகனையும் பற்றி ஒரு கல்லறை வாசகம் சொல்வதைப் பாருங்கள். பிரிட்டனில் உள்ள இந்தக் கல்லறையில் எழுதப்பட்டிருப்பதாவது:


''நிக்கலஸின் சடலம் இங்கே புதைக்கப்பட்டிருக்கிறது. இவருடைய தந்தைக்கு இவருடைய தாயாராகிய ஒரே மனைவியின் மூலம் பிறந்த 41வது பிள்ளை இவர். இவருக்கும் ஒரே மனைவிதான். இவர் 21 குழந்தைகளுக்குத் தந்தை. இவர் இறந்த தேதி 20-3-1637.''

குடும்பக் கட்டுப்பாடு பிரசாரம் தொடங்கப்பட்டது சமீப காலத்தில்தான் என்பதற்கு இந்தக் கல்லறையும் ஒரு சான்று.

ஸ்காத்லாந்தில் பெட்டரி என்ற இடத்தில் ஒரு சாமியாரின் சமாதி வாசகம் ஒரு மர்மமான முறையில் அமைந்திருக்கிறது.

''இங்கே சாண்டர்ஸ் சாமியார் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இவரைப் பற்றிய விவரங்கள் நியாயத் தீர்ப்பு நாளில் வெளியாகும். ஆமென்.''

பிரிட்டனில் நார்போக் பகுதியில் புதைக்கப்பட்ட ஓர் ஆசாமி சம்பந்தப்பட்ட மட்டில், வாசகம் எதுவும் இல்லை. அவருடைய பெயரே அவரை அறிமுகப்படுத்தி விடுகிறது.



'' தோசை ரொம்பச் சின்னதா இருக்கு சார்!''

''அப்படியா? கவனிக்கிறேன்!''

'' எங்கே கவனிக்கிறீங்க? இப்போ தோசையைத்தான் உங்களிடம் கொடுத்தேன். அதை பில் என்று நினைக்க பில் ஸ்டாண்டிலே குத்திட்டீங்க!''

என்ன பெயர் தெரியுமா? மண்ணாங்கட்டி! ஆம், மண்ணாங்கட்டிதான். ஆங்கிலத்தில் அதை ''மட்'' என்று சொல்வார்கள். இதை ''மட் கட்டி'' என்று சொன்னால் அது தூய தமிழ் ஆகி விடுகிறது. ஆங்கில மொழியே தமிழிலிருந்துதான் பிறந்தது என்று எந்த ஆராய்ச்சியாளராவது சொல்ல நினைத்தால், முதலில் இந்த மட்கட்டியை எடுத்து வைத்துக் கொண்டு உண்மையை நிரூபிக்க முயலலாம். இருக்கட்டும். சமாதி பார்க்க வந்த இடத்தில் ஆராய்ச்சி எதற்கு?

திருவாளர் 'மட்'டின் முழுப் பெயர் மத்தேயு மட்; அதாவது மத்தேயு மண்ணாங்கட்டி! அவருடைய கல்லறையில் யாரோ பின்வருமாறு செதுக்கி வைத்திருக்கிறார்கள்:

'' இங்கே புதைக்கப்பட்டிருப்பது மத்தேயு மண்ணாங்கட்டியின் சடலம். செத்ததனால் இவருக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படவில்லை. இவர் உயிருடன் இருக்கும்போதும் மண்ணாங்கட்டிதான்.''

இனி ஓர் அம்மையாரின் கல்லறையைப் பார்க்கலாம். இது அமெரிக்காவில் கான்வால் பகுதியில் உள்ள டாஜ் நகரில் இருக்கிறது.


''மார்கரெட் (1734) என்ற இந்த அம்மையார் தாய்க் குலத்தின் மாணிக்கம். மூவாயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் இவரால் பிரசவம் செய்யப்பட்டன.''

அந்த அம்மையார் ஒரு பிள்ளைப் பேறு மருத்துவராம்.

கடைசியாக ஒரு சமாதியில் சுவாரசியமான ஒரு செய்யுளைப் பார்க்கலாம். பிரிட்டனில் பாக்டன் இகொட்டில் காணும் ஒரு சமாதிச் செய்யுள் இது. யாரைப் புதைத்த சமாதியோ? யார் இயற்றிய செய்யுளோ? இதுதான் செய்யுள்:

'' நாம் அனைவரும் சாகவே வேண்டும்
அனைவரும் நாம் வேண்டும் சாகவே
சாகவே வேண்டும் நாம் அனைவரும்
வேண்டும் சாகவே அனைவரும் நாம்''

இதை இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் — எப்படி வேண்டுமானாலும் வாசித்துப் பாருங்கள். எப்படி வாசித்தாலும் அதே கூற்றுத்தான்! சும்மா சும்மா வாசித்துச் சாவானேன்? அநாவசியம்! இது ஓர் அசட்டுப் பயமுறுத்தல்! இதற்கு மேலும் பயமுறுத்தினாலும் சரி. நம் ஆசைக்கோர் அளவில்லை என்ற உண்மை மாறிவிடுமா என்ன?



விவசாயத்தில் இன்று...




காலந்தாழ்ந்த உதவி

சென்ற ஆண்டு நான் 'ஐ.ஆர்.8' நெல் சாகுபடியில் ஆர்வத்துடன் ஈடுபட்டேன். புதுரக நெல் ஆனதனுலும் நான் எனது பொறியியல் துறை படிப்பிலிருந்து புதிதாக விவசாயத்தில் நுழைந்த காரணத்தினுலும் விவசாய நிபுணர்களின் (எமது ஊர் ஊராட்சி ஒன்றிய விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, ஊராட்சி ஆணையர் மற்றும் இதர விவசாய அநுபவர்களின்) அறிவுரைகளின்படி நடந்துகொண்டேன். அவர்கள் மேற்பார்வையிட அவர்கள் சொன்னபடியே, நடவு வயலுக்கு முறைப்படி உரமிட்டுப் பூச்சி மருந்து அடித்து நடுவை ஆன வயலுக்கு இருபது நாட்கள் வரை நாளொன்றுக்கு மூன்று முறை சென்று நீர் பாய்ச்சி, வடிகால் விட்டுக் கவனித்துக் கொண்டேன். அமோக விளைச்சல்.

பயிர் விளைச்சல் போட்டி நிலத்தில் ஏக்கருக்கு 5905 கிலோ அதாவது சுமார் 86 மூட்டை நெல் மகசூல் பெற்றேன். இவ்வருடமும் சுமார் 3 ஏக்கருக்கு 'ஐ.ஆர்.8' நட்டுள்ளேன்.

நான் பெற்ற வெற்றி ஒரு சாதனையே என்றாலும் வேதனை என்னவெனில், தகுந்த சமயத்தில் பூச்சி மருந்து தெளிப்புக் கருவிகள் கிடைப்பதில்லை. அதற்குரிய பாதுகாப்பு உறுப்புகள் (முகமூடி போன்ற கருவிகள்) கிடைப்பதில்லை. இவ்வருடம் இதன் காரணமாக நம் ஊர் வட்டாரத்தில் 3 அல்லது 4 தொழிலாளர் இறந்துவிட்டனர். இதனால் இவ்வருடம் யாரும் மருந்து தெளிக்க வர அஞ்சுகின்றனர்.



விவசாய அதிகாரிகள் பல இடங்களுக்கும் சென்று நட்ட பயிர்களைச் சுற்றிப் பார்க்க வேண்டுமானால் அவர்களுக்கு வாகன வசதி மிகவும் அவசியம். குறிப்பிட்ட காலத்தில் உரிய இடங்களைப் போய்ப் பார்த்து அவர்கள் யோசனைகள் கூற முடியாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

வி. எஸ். நாராயணராஜா
இராஜபாளையம்

வெற்றி கிட்ட வழி


என்னுடைய அனுபவத்தில் நான் சாதித்ததாக எதைச் சொல்வது? குழாய்க் கிணறு இறக்குவதிலிருந்து அதற்கு மோட்டார் வாங்கி, மின் இணைப்புக் கொடுப்பதற்கிடையில் ஓராயிரம் முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கண்டு என் காரியத்தை நிறைவேற்றியதைச் சாதனை எனக் கொள்வதா? இல்லை, தீ. வி. சா. தி. (சாதி சமயமற்ற சமதர்ம யுகத்தில் இது என்ன புதிய சாதியெனத் திகைக்க வேண்டாம்! இது தீவிர விவசாயச் சாகுபடித் திட்டத்தின் சுருக்கமே) டிராக்டரைக் கொணரப் பத்து நாட்கள் தவம் கிடந்து எடுத்து வந்து உழுததைச் சாதனை என்பேறு? அன்றி சுற்று வட்டத்தில் எங்குமே விசைத் தெளிப்பான் இல்லாமல் 25 மைல் சென்று, மாவட்டத் தலைமையகத்துக்குச் சென்று தெளிப்பான் கொண்டு வந்து அதுவும் சரியாகத் தொடர்ந்து வேலை செய்யாததால் திருப்பி எடுத்துச் சென்று கொடுத்து விட்டு வேறொன்று கொணர அதுவும் அப்படியே இருக்க, இப்படியே மூன்று முறை படையெடுத்துத் தினம் இரு ஏக்கர் மருந்து அடித்துப் பயிர்ப் பாதுகாப்பு செய்ததைச் சாதனை என்று சொல்வேறு?



நம் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் விவசாயத் துறையையே நம்பியுள்ளனர் என்பது நாடறிந்த, நாமறிந்த உண்மை. அப்படி இருக்க, ஏன் அரசாங்கமும் அதிகாரிகளும் பெரும்பாலான உழவர்களும் இதை அலட்சியப்படுத்துகிறார்கள் எனத் தெரியவில்லை. அண்ணல் காந்தி கூறினார்: கிராமங்கள் வளர்ந்தால்தான் நாடு செழிக்கும் என்று. இது நம் நாட்டின் அடிப்படை உண்மை. அப்படியென்றால் இதில் ஏன் போர்க்காலத் தீவிரம் காட்டி (War footing) உடனடியாகச் செயலாற்றக் கூடாது?

இத்துறையில் என்னுடைய அனுபவத்தின் வாயிலாக நான் அறிந்ததைக் கூற விழைகிறேன். எல்லாக் கழனிகளிலும் அவசியமாக, கண்டிப்பாகப் பசுந்தாளுரம் வேண்டும். நல்ல பொறுக்கு விதை, காலத்தே நடும்போது அடியுரமிடுதல், சீரான நீர்ப்பாசனம், பயிர்ப் பாதுகாப்பு இவைகளைக் கவனித்துச் செய்தால் நிச்சயம் வெற்றி கிட்டும். இம்முறைகளைத் தினம் வானொலியில் இரண்டு மணியாவது (குறைந்தது) விளக்குதல் அத்தியாவசியம் என்பது என் கருத்து. எல்லாவற்றுக்கும் மேலாகச் சலியா உழைப்பு ஒன்றே வெற்றியைத் தேடித் தரும் என்பதில் சந்தேகம் இல்லை.

கே. வி. ராஜசேகரன்
நன்னிலம்



குணக் குன்று

அது ஒரு சிக்கலான 'சிசேரியன்' கேஸ். அதை வெற்றிகரமாக முடிப்பதற்கு இரவு மணி பதிமூன்றுக்கு மேல் ஆகிவிட்டது. பெரிய உயிரையும், சின்ன உயிரையும் ஒரு சேரக் காப்பாற்றிவிட்ட திருப்தியில் பெருமூச்சு விட்டாள், டாக்டர் மிஸ் புனிதா எம். பி.பி. எஸ். (டி. ஜி. ஓ.)

கையிலே மாட்டியிருந்த ரப்பர் உறைகளைக் கழற்றிவிட்டு 'வாஷ்பேஸினி'லே கைகளைச் சுத்தம் செய்தாள் புனிதா. அவளுக்கு உதவியாகப் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தாள் நர்ஸ் நிர்மலா.

நீண்ட நேரமாக வெளியிலே காத்துக் கொண்டிருந்த அவளுடைய தந்தை ரங்கநாதம், ''ரொம்ப நேரம் ஆகிவிட்டதே, அம்மா. கிளம்புவோமா ?'' என்றார்.

''டிரைவரை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டேன். கார் இருக்கிறது. நீதான் சாரத்தியம் செய்ய வேண்டும் !''

''அதற்கென்னப்பா. இனிமேல் ஆகாய விமானம் வேண்டுமானாலும் ஓட்டுவேன்.

இந்த கேஸைப் பற்றித்தான் நான் மிகவும் பயந்து போனேன். அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் ஆகிப் பத்து வருடங்களுக்கு மேலாக ஆகிறதாம். இது தான் முதல் பிரசவம். தலைப் பிரசவம் கஷ்டமாகிப் போன உடனே அவளுடைய கணவன் தவியாய்த் தவித்துப் போய் விட்டான். மனைவிக்கோ, அல்லது குழந்தைக்கோ ஏதாவது ஆகியிருந்தால் 'அவளுக்குப் வைத்தியம் பிடித்தாலும் பிடித்திருக்கும்.'' பேசிக் கொண்டே புனிதாவும், அவளுடைய தந்தையும் கார் நின்ற இடத்துக்கு வந்து விட்டார்கள்.

''அப்படியென்றால் நீ சொல்வது இந்தக் கிராமத்துக் கணக்குப் பிள்ளை பெரிய மகன் கனகசபையையா சொல்கிறாய், புனிதா ?''

''ஆமாம், ஆமாம்!''

கனகசபை காருக்குப் பின்னால் இருந்து ஓடி வந்து நெடுஞ்சாண்கிடையாகப் புனிதாவின் காலில் விழுந்தான். ''அட பாவமே! இது என்ன கூத்து ? என்னைவிட வயதில் மூத்தவர் நீங்கள். என் காலில் விழலாமோ? அப்படி நான் என்னத்தைச் செய்து விட்டேன்? என் கடமையைச் செய்தேன். அவ்வளவுதான்!'' என்றாள் டாக்டர் புனிதா அடக்கமாக.

''அப்படி இல்லை அம்மா! நீங்கள் செய்த உதவி மகத்தானது'' என்ற கனகசபை காருக்கு வழி விட்டான். கார் நகர்ந்தது.

ரங்கநாதத்துக்கு மகள் எப்பொழுதும் ஆஸ்பத்திரியைக் கட்டிக் கொண்டு அவஸ்தைப்படுகிறாளே என்று ஒரு மனத்தாங்கல். அவ்வளவே.

''காலையில் மருத்துவ இல்லத்துக்கு வந்த எனக்கு மதியம் உணவுக்குக் கூட வீட்டுக்கு வர முடியவில்லை. இன்றைக்குச் சோதனையாய் கேஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தவண்ணமாய் இருந்தன. இரண்டு 'ஃபோர்செப்ஸ்'. இரண்டு நார்மல்....''

புனிதா பேசிக் கொண்டே போனாள்.

ரங்கநாதம் காதைப் பொத்திக் கொண்டார் : ''போதும், போதும். நிறுத்து. உன் மருத்துவ நெடிப் பேச்சை. பங்களா வந்து விட்டது. இனிமேலாவது நல்ல பேச்சாகப் பேச



அழகிரி விசுவநாதன்

வோம். ஊட்டியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது.......''

சின்னக் குழந்தையைப் போல் காரை விட்டுக் குதித்துக் கொண்டே இறங்கிய புனிதா கேட்டாள்: ''அடுத்த சீஸனுக்குப் வரச் சொல்லிச் சித்தப்பா எழுதியிருக்கிறாங்களா, அப்பா ?''

''அதில்லே, புனிதா. இனிமே நீ எல்லா சீசனுக்கும் அங்கேயே இருக்கிறாற்போல் ஓர் ஏற்பாட்டுடன் உன் சித்தப்பா தானே மறு நாள் இந்தக் குக்கிராமத்துக்கு வருகிறாராம்!'' பங்களா உள்ளிருந்து சொல்லிக் கொண்டே வந்தாள் புனிதாவின் தாயார் மீனாட்சி.

''ஓ, 'காட்', என்ன சூழ்ச்சி இது ?'' என்று அதிர்ந்து போனாள் புனிதா. ''முப்பது வயதுக்கு மேலே எனக்குக் கல்யாணமா ? வேண்டாமே, இந்த விபரீதம் !''

ஒரு வகையாக இரவு உணவு உண்ண உட்கார்ந்தாள் டாக்டர் புனிதா. கோதுமைச் சப்பாத்தியை ஒரு விண்டு எடுத்து வாயில் போட்டு அசைத்தாள். அவளுடைய மனமும், தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து, அந்தக் குக்கிராமத்துக்கு வந்து 'அமுதா மகப்பேறு இல்லத்'தை ஓர் அசட்டுத் துணிச்சலில் ஆரம்பித்த பழைய நிகழ்ச்சிகளில் அசை போட்டது.....

அமுதா வேறு யாருமல்ல. புனிதாவின் சொந்தத் தமக்கைதான். இரண்டு வருடங்களுக்கு மூத்தவள். அவ்வளவே ! அவர்களோடு பிறந்தவர்கள் வேறு யாருமில்லே. இரண்டே பெண்கள். மீனாட்சி தன் உறவு முறை விட்டுப் போகக் கூடாது என்று, கோழியூர் கிராமத்தில் வசதியாக விவசாயத்தைக் கவனித்து வந்த தன் தம்பிக்கே மூத்த பெண் அமுதாவை மண முடித்தாள். காலா காலத்தில் ஆணும், பெண்ணுமாக இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள் அமுதா. ரங்கநாதமும், மீனாட்சியும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லே. புனிதாவும் கல்லூரி விடுமுறை விட்ட மறு நாளே கோழியூரில் குழந்தைகளை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருப்பாள். அப்போது புனிதா டாக்டர் படிப்பு முடிந்து, 'ஹவுஸ் சர்ஜனாகப்' பணி யாற்றிக் கொண்டிருந்தாள். அதுவும் ஒரு மாதத்தில் முடிய இருந்தது. அந்த நேரத்தில் தான் கோழியூரிலிருந்து அந்தச் சேதி வந்து சேர்ந்தது : ''அமுதாவுக்கு ஆபத்து. உடன் வரவும்.''

அமுதாவுக்கு அது மூன்றாவது பிரசவம். எட்டாவது மாதம். இன்னும் சில நாட்கள் கழித்து மீனாட்சியே கோழியூர் செல்லவிருந்தாள், அமுதாவைத் தஞ்சைக்குப் பிரசவத்துக்காக அழைத்து வர. அதற்குள் இப்படி ஒரு விபரீதமா ?

மூவரும் கோழியூரை நோக்கிப் பறந்தனர். அமுதாவைப் பார்க்க முடியவில்லே. உடலைத்தான் பார்த்தார்கள். குறைப் பிரசவம் ஏற்பட்டுக் குழந்தையும் இறந்து பிறந்திருந்தது.

அவளுடைய டாக்டர் மூளைக்குப் பளிச் சென்று பட்டது ஒன்று: சரியான நேரத்தில் சரியான மருத்துவம் மட்டும் செய்யப்பட்டிருந்தால் அமுதா மட்டுமாவது பிழைத்திருக்கக் கூடும்.

விசாரித்துப் பார்த்ததில் கோழியூரை மையமாகக் கொண்டு இருபது மைல் வட்டத்துக்கு நல்ல மருத்துவ மனையே கிடையாதாம். புனிதா முடிவாக ஒரு தீர்மானம் செய்து கொண்டாள். 'ஹவுஸ் சர்ஜன்' பயிற்சி முடிந்தவுடன், கோழியூரில் ஒரு மகப்பேறு மருத்துவ இல்லத்தைத் தொடங்குவது என்பதுதான் அது.

அதன்படி அமுதாவின் கணவர் செய்த பண உதவியுடன், 'அமுதா மகப் பேறு இல்ல'த்தைக் கோழியூரில் திறந்தாள் புனிதா. கோழியூரைச் சுற்றியிருந்த ஐம்பது கிராமத்துப் பெருங்குடி மக்களும், குடியானவர்களும் புனிதாவைக் கரம் கூப்பித் தொழுதனர்.

பின் புனிதாவும் இரவு பகல் என்று பாராமல் உழைத்தாள். தன் தமக்கை அமுதாவுக்கு ஏற்பட்ட அவல நிலை அந்தப் பகுதியில் வேறு ஒரு கர்ப்பிணிக்கு ஏற்படக் கூடாது என்று மனப்பூர்வமாக மருத்துவம் பார்த்தாள். இறைவனின் கடைக்கண்ணும் அவள் பக்கம் இருந்தது. எல்லாம் நல்லபடியாகவே நடந்து வந்தன. மருத்துவ இல்லமும் ஆல் போல் தழைத்து வளர்ந்து வந்தது.

இந்த இடைக்காலத்தில் அவளுடைய திருமணத்தைப் பற்றிப் பெற்றோர்கள் பல முறை பேச்செடுத்தும், புனிதா அதைப் பொருட்படுத்தவே யில்லை.

முப்பது வயதுக்குப் பிறகு இப்படி ஒரு சலனமா? சோதனையா? ஊட்டியிலிருந்து இந்த டாக்டரைப் 'பெண் பார்க்க' வருகிறார்களா? அசந்து போனாள் புனிதா. 'நிரம்பப் பேரால் ஜயிக்க முடியாத அந்தச் சபலத்துக்கு நானும் அடிமையாகி விடுவேனோ?' புனிதாவால் அவளையே நம்ப முடியவில்லை.

காலை மணி ஏழு ஆகியும் அறையில் கதவைச் சாத்திக் கொண்டு புனிதா தூங்கிக் கொண்டிருந்தாள். ஊட்டியிலிருந்து வருபவர்கள் பதினொரு மணி அளவில்தான் வருவதாகச் சொல்லி யிருந்தார்கள்.

விருந்து வேலைகள் மும்முரமாகச் சமையலறையில் நடந்து கொண்டிருந்தன. மீனாட்சி அவசரம் அவசரமாக வந்து புனிதாவை எழுப்பினாள்.

புனிதா மெல்ல எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள். அறைக் கதவுகளைத் திறந்து வைத்தாள் மீனாட்சி.

புனிதா காரமாகவே கேட்டாள்: "ஏம்மா, இந்த ஏற்பாடு எல்லாம் சித்தப்பா செய்ததுதானே?"

"அவர் மேலே பழி சொல்லாதேம்மா. பெத்தவ நான் இருக்கும்போது எனக்கு இல்லாத அக்கறையா? நீ என்ன படிக்காத பெண்ணு நான் சொல்றதுக்கு? நீ எத்தனை காலம் தனியா இப்படி இருக்க முடியும்?"

"அப்போ, முடிவு எல்லாம் சொல்லி நிச்சயதார்த்தத்துக்காக அவங்க எல்லாம் வந்துக்கிட்டு இருக்காங்களா?" புனிதா கலவரத்தோடு கேட்டாள்.

"சேச்சே, அப்படிச் செய்வோமா? நீ என்ன களிமண் பொம்மையா, எங்க இஷ்டப்படி உன்னைக் கேட்காமல் காரியத்தைச் செய்வதற்கு? அவர்கள் சாதாரணமா நம்ம வீட்டுக்கு வராங்க. இந்தமாதிரி எண்ணம் ஒண்ணும் அவங்களுக்கு இருக்கும் போலிருக்கு... நாம ஊட்டியிலே அவங்க வீட்டுக்குப் போறோம் இல்லையா? அப்போ உன்னைப் பார்த்திருக்காங்க. பையன் அமெரிக்கா போய் வந்திருக்கான். தேயிலைப் பயிர் செய்வதிலே ஆராய்ச்சி செய்து பட்டம் வாங்கிட்டு வந்து இருக்கானாம். கோடீசுவரர் வீட்டுப் பிள்ளை. கிடைத்தால் உனக்கு — என் மகளுக்கு — அதிர்ஷ்டம்தான்!"

"போதும்மா, உன் சம்பந்தி வீட்டுப் பிரதாபம்!... 'அமுதா மகப்பேறு இல்லம்' எப்படியாவது போகட்டும். அதை நான் இழுத்து மூடிட்டு ஊட்டிக்குப் போய் ஒரு பேரனையோ, அல்லது ஒரு பேத்தியையோ உன் கையில் கொண்டு வந்து தரவேண்டும். இங்கே அமுதா அக்கா மாதிரி தாய்மார்கள் போதுமான மருத்துவ வசதி இல்லாமல் தவிக்கணும். அதுதான் உங்களுடைய எண்ணம் எல்லாம். இல்லையா?"

மீனாட்சி ஒன்றும் பதில் பேசவில்லை. புனிதா எழுந்து ஏதோ முடிவுடன் புழக்கடைப் பக்கம் சென்றாள். அவளுடைய மனம் ரொம்பவும் குழம்பி இருந்தது.

பத்து மணி அளவில் இரண்டு கார்கள் கோழியூரின் புழுதியைக் கிளப்பிக்கொண்டு உள்ளே நுழைந்ததை, கிராமமே வெளியே வந்து பார்த்தது.

புனிதாவின் பங்களாவில் மதிய விருந்து நடந்து கொண்டிருந்தது. சாம்பசிவம் நகைச்சுவையாக ஏதோ சொல்ல, எல்லோரும் கலகலவென்று நகைத்தார்கள் — புனிதாவைத் தவிர.

மாப்பிள்ளைப் பையன் ராஜசேகரனும் அவனுடைய பெற்றோர்களும், சாம்பசிவமும் மட்டுமே வந்திருந்தனர். வேறு யாரும் வரவில்லை.

பையன் வாட்ட சாட்டமாக ராஜாமாதிரி இருந்தான். விவசாயப் பட்டம் பெற்றவன். படித்தவன். அமுதாவின் கணவர் கண்ணபிரானுக்கு அந்தச் சம்பந்தம் ரொம்பவும் பிடித்திருந்தது.

பிள்ளை வீட்டாருக்கும் பெண் பிடித்துப் போய் விட்டது. புனிதாவின் முடிவுக்காக எல்லோரும் காத்திருந்தனர்.

மீனாட்சி அடிக்கடி புனிதாவை நச்சரித்துக் கொண்டிருந்தாள். "நல்ல பதிலைச் சொல்லம்மா. என் வயிற்றில் பாலை வார்த்திடம்மா!"

முன் ஹாலில் எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஏதோ ஒரு முடிவுடன் புனிதா அவர்களிடையே வந்து உட்கார்ந்தாள். "மன்னிக்க வேண்டும். நான் சில சந்தேகங்கள் கேட்கப் போகிறேன். தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் எல்லாம் படித்தவர்கள்...."

"தாராளமாகக் கேட்கலாம். நான் வரவேற்கிறேன், மிஸ் புனித்!" என்றான் ராஜசேகரன். ஒருவித உரிமையுடன் 'புனிதா' என்ற பெயரை 'புனித்' என்று உச்சரித்தான்.

"உங்களுடைய தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்கிறவர்களுக்காக மருத்துவமனை இருக்கிறதல்லவா?"

" 'அஃப்கோர்ஸ்!' பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது. மூன்று லேடி டாக்டர்கள் இருக்கிறார்கள்!" என்றான் ராஜசேகரன்.

"நான் வந்தால் அங்கே பணியாற்றலாம். வாட் ஐ மீன் இஸ்..."

"புரிகிறது, புரிகிறது... அதற்குத்தான் 'கூலிக்கு' டாக்டர்களை வைத்திருக்கிறோமே, கூலிகளுக்கு மருத்துவம் பார்க்க. மிஸ் புனித், நீங்கள் டாக்டர் வேலை பார்க்க வேண்டிய அவசியமே அங்கே இருக்காது. ஸ்டெதாஸ்கோப்பைத் தூக்கிக் குப்பையில் போட்டுவிடலாம் நீங்கள்.... 'நம்ம' வீட்டில் இருந்து கொண்டு நீங்கள் ஒரு தொழில் செய்து சம்பாதிப்பதை நாங்கள் விரும்புவோமா? அது எங்கள் அந்தஸ்துக்குக் குறைவு என்று நினைக்கிறோம்!..." ராஜசேகரனின் இந்தக் 'கூலிப் பேச்சு' புனிதாவுக்கு வெறுப்பைத் தந்தது.


"அப்படியென்றால், டாக்டர் வேலையைத் தொண்டு அல்ல, அல்லது தொண்டு கலந்த தொழில் அல்ல, மற்ற எல்லா வேலைகளையும் போல இதுவும் ஒன்று என்று சொல்கிறீர்கள்?" புனிதா கேட்டாள்.

"நிச்சயமாக" என்றான் ராஜசேகரன். "கொத்தனார் நாலு கல்லை அடுக்கிவிட்டு தினக் கூலி வாங்குகிறார். டாக்டர் மாதக்

கூலி வாங்குகிறார். இதில் எங்கே தொண்டு தொங்குகிறது!'' பிரமாதமாக வாதம்செய்து விட்டதாக நினைத்த ராஜசேகரன் 'டை'யைச் சரிசெய்து கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'படித்தவராக இருந்தும் இப்படிப்பேசுகிறீரே' என்று புனிதாவுக்கு எரிச்சலாக வந்தது. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்: ''சரி, உபாத்தியாயத் தொழிலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அது தொண்டா? அல்லது தொழிலா?''

''அதுவும் கொத்தனார் வேலைதான்!'' — கொஞ்சம் கூட யோசிக்காமல் சொன்னான் ராஜசேகரன்.



''ஆர்டர் கொடுங்க! நீங்க சொன்ன நேரத்திலே கொண்டு வந்து கொடுக்கிறேன்!''

''அதெப்படி, சொன்ன நேரத்திலே கொடுக்க முடியும்?''

''ஏன், நீங்க சொன்ன நேரம் நாளைக்கு வராமலா போயிடும்!''

''இந்தக் கருத்தில் நான் மாறுபடுகிறேன்.. ஆனால்....!''

அதற்குள் மருத்துவ இல்லத்திலிருந்து தாதி ஒருத்தி வந்தாள். ஒரு பிரசவக் கேசாம். அவசரமாம். புனிதாவை அழைத்துச் செல்ல வந்திருந்தாள்.

''மன்னிக்கணும். ஒரு நிமிஷம். இதோ மருத்துவ மனைவரை சென்று வருகிறேன்!'' புனிதா எழுந்தாள், நடந்தாள். அவளுடைய நடையில் அவசரத்தைக் கண்ட ராஜசேகரன் நினைத்தான்: 'ஒரு டாக்டருக்கு இவ்வளவு கடமை உணர்ச்சியா?'

அமுதா மகப்பேறு இல்லத்தில் ஒரு புதிய உயிர் பூமியில் விழுவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. அதற்குப் பிறகுதான் புனிதா வீடு வந்து சேர்ந்தாள்.

புனிதாவின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு உடனே வெற்றிலை மாற்றிவிட்டுப் போக நினைத்தனர் மாப்பிள்ளை வீட்டார்.

ஆனால் புனிதா முடிவு சொல்ல இரண்டு நாட்கள் ஆகும் என்று சொல்லி விட்டாள். ராஜசேகரனுக்குப் பெருத்த ஏமாற்றம்.

''தபாலில் முடிவை எழுதுங்கம்மா! சாதாரணமாகப் பிள்ளை வீட்டார்தான் 'போய்க் கடிதம் போடுகிறோம்' என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். இங்கு எல்லாம் தலைகீழ்ப் பாடமாக இருக்கிறது'' என்று சொன்னாள் ராஜசேகரனின் தாய்.

ஊட்டியிலிருந்து வந்தவர்கள் எல்லாம் ஊருக்குத் திரும்பி இரண்டு நாட்களுக்கு மேல் இருக்கும். புனிதாவோ ஒன்றுமே நடக்காதது போல் பேசாமல் மருத்துவ மனைக்குப் போவதும் வருவதுமாக இருந்தாள்.

அன்றைக்கு மீனாட்சி துணிந்து கேட்டு விட்டாள்: ''என்னடி பெண்ணே, 'சம்மதம்' என்று கடிதம் போடச் சொல்லவா?''

புனிதா வெறுமையாகச் சிரித்தாள். பிறகு அமைதியாகச் சொன்னாள்: ''என்னைப் பெற்ற அம்மாவின் மனம் படும் பாடு எனக்குப் புரியாமல் இல்லை. படித்தவரும், பட்டம் பெற்றவரும், ராஜா மாதிரி இருப்பவருமான அந்தக் கோடீசுவர மாப்பிள்ளைக்கு என்னைவிட—இந்த 'மிஸ் புனிதாவை விட — அழகான, குணமான, படித்த, பணம் படைத்த பெண்கள் ஆயிரம் பேர் கிடைப்பார்கள். ஆனால், அமுதா மகப் பேறு இல்லத்துக்கு இன்னொரு 'டாக்டர் புனிதா' கிடைப்பது என்றால் கொஞ்சம் சிரமமில்லையா அம்மா! அவர்கள் ஊட்டியிலிருந்து வந்திருந்த அன்று நான் அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போனேன் அல்லவா? அது ஒரு அமுதா கேஸ்'... நான் போய்ச் சரியான நேரத்தில் சரியான மருத்துவம் செய்யாமல் இருந்திருந்தால் தாயும் குழந்தையும் 'போயிருப்பார்கள்'.... இந்த நிகழ்ச்சி என்னை வெகுவாகப் பாதித்து ஊட்டிக்காரர்களுக்கும் பிடிக்காத ஒரு முடிவை எடுக்கத் தூண்டி விட்டது. இன்னும் சொல்லப் போனால்....''

அதற்கு முன் கூடத்தில் ஏதோ அரவமும், குழந்தை ஒன்று அழும் சத்தமும் கேட்டன.

புனிதா தொடர்ந்தாள்: ''முகத்தில் அடித்தாற்போல் சொல்லக் கூடாது என்ற நாகரிகத்துக்காக அன்றே என் முடிவை வெளியிடவில்லை.''

புனிதாவும் மீனாட்சியும் முன் கூடத்துக்கு வந்தார்கள். அங்கே மூன்று கிராமப் பெண்டிர் நின்றிருந்தனர். மூவர் கையிலும் மூன்று கைக்குழந்தைகள். அமுதா மகப் பேறு இல்லத்தில் ஒரு திங்களுக்கு முன் தாய்மை அடைந்தவர்கள். அவர்களுடைய நன்றியைத் தெரிவிப்பதற்காக கிராமத்தில் மிகுதியாகக் கிடைக்கும் பழம், பூ, காய்கறி, தேங்காய், இளநீர் சகிதமாக வந்திருந்தார்கள்.

''என்ன இதெல்லாம்? தேவையில்லையே'' என்றாள் புனிதா.

''நீங்க செய்த, செய்கிற உதவிக்கு இதெல்லாம் ரொம்பக் குறைவுதானம்மா! நாங்க இந்தக் குழந்தைக்கு அம்மா. நீங்க எங்களைக் காப்பாத்தறதாலே எங்களுக்கெல்லாம் அம்மா மாதிரி!'' என்றாள் கோழியூர் கர்ணத்தின் மருமகளும், கனகசபையின் மனைவியுமான கண்ணம்மா.

சிந்தனையோடு மீனாட்சியின் பக்கம் திரும்பினாள் புனிதா. ''அம்மா! இவங்க சொல்றதைக் கேட்டியா? நான் என்னவோ அம்மா ஆகலே, அம்மா ஆகலேன்னு சொல்றியே, நான் அம்மாவுக்கும் அம்மா தெரியுமா உனக்கு?''

மீனாட்சிக்கு மகளின் தீர்மானம் தெளிவாக விளங்கியது. மெல்லப் பெருமூச்சு விட்டாள்.

''பைத்தியக்காரப் பெண் அம்மா நீ!'' என்று சொல்லிக் கொண்டே வந்தார் மீனாட்சியின் கணவர் ரங்கநாதம், கையில் ஒரு கார்டுடன், ஊட்டிக்கு ஒரு 'ஊஹூம்' கடிதம் எழுத.



பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தின் தலை நகரமாகத் தற்பொழுது மதுரை இருந்து வருகிறது. 'இராமநாதபுரம் மாவட்டத்துக்கு, இம்மாவட்டத்தில் உள்ள ஒரு நகரே தலை நகராக இருக்க வேண்டும் — மதுரை இருப்பது சரியல்ல' என்ற எண்ணம் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இருப்பது நியாயமே! ஆனால் ஒவ்வொரு நகரைச் சேர்ந்த அரசியல்வாதிகளும், தங்கள் ஊரையே தலைநகராக்க வேண்டும் என்று முயல்வது வியப்பைத் தருகிறது. ஒருவர் 'இராமநாதபுரம் மாவட்டம் என்று கூறுவதிலிருந்தே இதன் தலைநகரம் இராமநாதபுரம் என்று விளங்கவில்லையா?' என்கிறார். 'அலுவலகங்கள் அமைப்பதற்கு ஏற்ற இடம் சிவகெங்கையே' என்கிறார் அடுத்தவர். மானாமதுரை, விருதுநகர், சிவகாசி ஆகிய ஊர்களும் அடிபடுகின்றன.

அரசியல் பிரமுகர்கள், ஆளுக்கொரு நகரைக் கூறுவதில் அர்த்தமில்லை. மாவட்டத்திலுள்ள எல்லோருடைய வசதியையும் கவனியாது, தங்கள் ஊரையே தலைநகராக்கு என்று அவர்கள் கூறுவது சரியல்ல. இதைப் பார்க்கையில் நேற்றும் இன்றும் இருப்பது போல, மதுரையே இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதுதான் சிறந்தது என்று எண்ணத் தோன்றுகிறது.

திருப்பாச்சேத்தி
10—12—69 இளங்கவின்

சில சமயங்களில் அரசு போக்குவரத்து வண்டிகளில் டிக்கட் பஞ்சம் தாண்டவமாடுகிறது. அந்தப் பஞ்சம் என் போன்ற ஏழைப் பயணிகளை மிகவும் பாதிக்கிறது. உதாரணமாகக் கன்னியாகுமரி — கடுக்கரை (தடம் எண் 1-ஏ) வண்டியில் நான் ஏறி 35 காசு டிக்கட் கேட்டேன். 35 காசு டிக்கட் தட்டுப்பாடு என்று கூறி இரண்டு 20 காசு டிக்கட் கொடுத்தார் கண்டக்டர். 40 காசும் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டார். 35 காசு கொடுத்துச் செல்ல வேண்டிய இடத்துக்கு அவர்களின் தவற்றுக்குத் தண்டனையாக நான் ஐந்து பைசா கூடுதலாகக் கொடுத்துப் பயணம் செய்தேன். பயணிகள் ஐந்து பைசா இல்லை என்று கூறி 30 பைசா கொடுத்தால் வண்டியில் ஏற அனுமதிப்பார்களா?

தேரூர்.
19—1—70 எம். சுப்பிரமணியம்.

நீதி போதனை வகுப்பில் நீதி போதனைக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கற்பித்தால் மாணவர்களிடையே ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவுமென்றும், பிற்கால வாழ்க்கையில் அவர்கள் பொறுப்புடனும் சிறப்புடனும் வாழ இடமுண்டு என்றும் ஓர் அன்பர் சில வாரங்களுக்கு முன் வட்டமேஜைப் பகுதியில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்தை ஒரு பள்ளியின் தலைமையாசிரியன் என்ற முறையில் முழுக்க முழுக்க ஆதரிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாள் மாலை எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நீதி போதனை செய்து கொண்டிருந்தேன். நீதிபோதனை வகுப்பின்போதுதான் நான் மாணவர்களுக்கு நீதி போதனை செய்வேன் என்றல்ல; சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் சிறுசிறு கதைகளை அவர்களுக்குச் சொல்லி அவற்றிலுள்ள நீதியை விளக்குவது வழக்கம்.

அன்றைய தினம் ஒழுக்கத்தின் உயர்வினை எடுத்துக் காட்ட ஒரு கதை சொன்னேன். முதலில் பல தவறுகள் செய்து, பின்னர் தான் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி, திருந்தி, உழைப்பால் உயர்ந்து புகழ்பெற்ற ஒருவனைப்பற்றியது அந்தக் கதை.

கதையை உணர்ச்சி பொங்கக் கூறினேன். சில இடங்களில் மாணவர்கள் அழுது கூட விட்டனர். கதையை முடித்த நான், 'மாணவர்கள் அந்தக் கதையிலிருந்து என்ன புரிந்து கொண்டார்கள்' என்பதனை அறிய ஆவலுடன் அவர்களை நோக்கினேன். திடீரென்று என் எதிரே அமர்ந்திருந்த மாணவன் எழுந்து வந்தான். வந்தவன் தான் செய்த தவறுகளையெல்லாம் கடகடவென்று சொல்லிவிட்டு, அதற்காக மன்னிப்பும் கேட்டுவிட்டு, "இனிமேல் நான் எந்தத் தவறும் செய்ய மாட்டேன், சார். ஒழுக்கமுடன் வாழ்வேன்" என்று என்மீதும் திருவள்ளுவர் மீதும் ஆணையிட்டுக் கூறினான். அந்த மாணவன் உண்மையைச் சொன்னதற்காக நான் அவனைத் தண்டிக்கவில்லை. பாராட்டவே செய்தேன். அவன் எடுத்துக் கொண்ட உறுதியும், எனது பாராட்டும் மற்ற மாணவர்களையும் சும்மா விட்டு வைக்கவில்லை. அவர்கள் ஒருவர் பின் ஒருவராக எழுந்து வந்து, தாங்கள் செய்த தவறுகளைக் கூறி, மன்னிப்புக் கேட்டுவிட்டு, பின்னர் இனிமேல் அவ்வாறு செய்வதே இல்லை என உறுதி எடுத்துக் கொண்டனர். நான் அயர்ந்தே போய்விட்டேன். பெருமையும் பூரிப்பும் என் உள்ளத்தில் நிறைந்தன.


நீதி போதனையின் பயன்தான் அம்மாணவர்களின் உணர்ச்சியைத் தூண்டி, உண்மையை ஒப்புக் கொண்டு, உறுதி மேற்கொள்ளவும் செய்தது. எனவே 'நீதி போதனைக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் ஒவ்வொரு மாணவனையும் மிகச் சிறந்த முறையில் உருவாக்கலாம். உருவாக்கவும் முடியும்' என்று திடமாக நம்பலாம்.

இராம்பாக்கம், 8—1—70 சி. பாலகிருட்டிணன், ஆசிரியர்

ஃபயர்க்கிரீட் மற்றும் ஃபயர்க்கிரீட் சூப்பர் ஹைட்ராலிக்—செட்டிங் வேகமாக இறுகும் உயர்ந்த உஷ்ண—எதிர்ப்புத் தன்மையுடைய ரிஃப்ராக்டரி பொருள்களாகும். இவை முறையே 1350° செ. மற்றும் 1600° செ. வரை உஷ்ணத்தை தாங்கக் கூடியவை. பின்வரும் சாதனங்களில், உடனடியான ரிப்பேர்களையும், மாறுதல்களையும், இவை சுலபமாக்குகின்றன:

□ ரோட்டரி க்ளின் லைனிங்குகள் □ ஃபர்னெஸ் ஆர்ச்சுகள்
□ ஃபர்னெஸ் சுவர்கள் □ கூரைகள் □ கார்டாப்புகள்
□ லின்டெல்கள்.

மேலும் இவை □ உருக்கு அமைப்புகளுக்கும் □ குனிட்டிங் முதலியவற்றிற்கும் உபயோகிக்கப்படுகின்றன.
ஃபயர்க்கிரீட் மற்றும் ஃபயர்க்கிரீட் சூப்பர் உறுதியானவை, நீடித்துநிற்பவை.
அவை பெரும் பாரங்களைத் தாங்கவல்லவை. தெர்மல் அதிர்ச்சியைப் பெருமளவில் தாங்கக் கூடியவை.
அதிக உஷ்ணத்திற்கும், ரிஃப்ராக்டரித் தன்மைக்கும் ஏற்றவாறு, வாடிக்கையாளரின் தேவைகளின்படி, பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட வார்ப்படங்களை, ஏஸிஸி அளிக்கமுடியும்.



ஏஸிஸி


தி அஸோஸியேடட் சிமெண்ட் கம்பெனிஸ் லிமிடெட்.
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்.





Printed & published by R. Ananthanarayanan on behalf of Messers. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31

Managing Editor: T. Sadasivam


இப்போது
புதிய
தோற்றத்தில்!
Swastik
PERFUMED
CASTOR OIL
ஸ்வஸ்திக்
பெர்ஃப்யூம்டு
கேஸ்டர் ஆயில்
பரட்டையான படியாத
கேசத்தையும் பணியவைக்கும்
நாள் முழுதும் கேசத்தை
எடுப்பாக எழிலோங்கச்
செய்யும்.
பட்டுப்போன்ற படியும் கேசம்..
ஒளிசிந்தும் எழிலோங்கும் கேசம்...
ஆரோக்கிய நறுமணம் வீசும் கேசம்...
நாள் முழுதும் எடுப்பாக விளங்கச்
செய்கிறது ஸ்வஸ்திக் பெர்ஃப்யூம்டு
கேஸ்டர் ஆயில்.
ஸ்வஸ்திக் ஆயில்
மில்ஸ், பம்பாய்.
Shilpi SOM 17/89 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



லின்டாஸ்-INC-3-140TH